வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P . 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu




Email : news@eelanadu.lk | மலர் : 03 | 08.06.2022 புதன்கிழமை | இதழ் : 190 | பக்கங்கள் : 19

# அடுத்த மூன்று வாரங்கள் எரிபொருளுக்கு கஷ்டம்!

## தேவையற்ற பயணங்களைத் தவிர்க்குமாறு பிரதமர் ரணில் நேற்று சபையில் கோரிக்கை



கொழும்பு, ஜூன். 08

அடுத்த மூன்று வாரங்கள் எரிபொருளுக்குக் கடினமான காலமாக இருக்கும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில் நேற்று ஆற்றிய விசேட உரையிலேயே அவர் இதனை கூறினர்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாம் அனைவரும் எரி

15

# பட்டினி அபாயத்தில் இலங்கை; அடுத்துவரும் சில மாதங்களில்!

## ஐ. நா. அமைப்புகள் கூட்டாக எச்சரிக்கை

ஜெனிவா, ஜூன் 08

**இலங்கையை பட்டினியால் பாதிக்கப்படக்கூடிய நாடுகளின் பட்டியலில் சேர்த்துள்ள ஐ. நாவின் இரு அமைப்புகள், எதிர்வரும் மாதங்களில் இலங்கை பட்டினி அபாயத்துக்கு தள்ளப்படும் என்றும் எச்சரித்துள்ளன.**

உலக உணவு திட்டம், உணவு விவசாய ஸ்தாபனம் இணைந்து ஜூன் முதல் செப்ரெம்பர் வரை உலக உணவு நிலை எவ்வாறு இருக்கும் என்பதை தெளிவுபடுத்தும் அறிக்கையை வெளியிட்டுள்ளன.

இந்த அறிக்கையிலேயே அவை இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளன.

இலங்கையில் உணவுப் பாதுகாப்பின்மைக்கான முக்கிய காரணங்களாக பொருளாதார நெருக்கடி, விலை அதிகரிப்பு, பயிர்ச்செய்கை உற்பத்தி வீழ்ச்சி என்பவற்றை அந்த அமைப்புகள் சுட்டிக்காட்டியுள்ளன. அத்துடன், சர்வதேச அளவில் விவசாய உற்பத்தியின் விலை அதிகரிப்பு,

15

# அனைவருக்கும் மூவேளை உணவு

## திட்டத்தை அறிவித்தார் பிரதமர்!

கொழும்பு, ஜூன் 08

அனைவருக்கும் மூன்றுவேளை உணவு வழங்கும் முறையை அமுல்படுத்த திட்டமிட்டுள்ளதாக தெரிவித்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, தேவைப்படுபவர்களுக்கு மானியம் வழங்குவது குறித்தும்

15

### பிரதமரின் உரையை தொடர்ந்து

## சில மணி நேரங்களிலேயே யாழில் பெற்றோல் தீர்ந்தது?

யாழ்ப்பாணம், ஜூன் 08

யாழ்ப்பாணத்தின் பெரும்பாலான எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பெற்றோல் இல்லை என்றுகூறி மூடப்படிருந்தமையை அவதானிக்க முடிந்தது. ஒரு சில எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பெற்றோல் வழங்கப்பட்டபோதும் மக்கள் நீண்ட வரிசையில் நின்று எரிபொருளை பெற்றுச் சென்றமையை அவதானிக்க முடிந்தது.

அத்துடன், சில எரிபொருள் நிரப்பு நிலையங்

15



முல்லைத்தீவு – வட்டுவாகலில் கடற்படைக்கு காணி சுவீகரிப்பை தடுக்கும் விதமாக பொதுமக்கள் போராட்டத்தில் ஈடுபட்டபோது அவர்களை கலைக்க முனைந்த பொலிஸார் பொதுமகன் ஒருவரை தள்ளமுனைந்தபோது...!

செய்தி பக்கம் 7இல்

# குளவி கொட்டியதால் 25 மாணவர் பாதிப்பு

## 11 பேர் அவசர சிகிச்சை பிரிவில்

கிளிநொச்சி, ஜூன் 08

கிளிநொச்சி மகா வித்தியாலயம் நேற்று நிறைவடையும் நேரத்தில் குளவி கூடு கலைந்து மாணவர்களை கொட்டியதால் 25 மாணவர்கள் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இதில்,11 பேர் அவசர சிகிச்சை பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

நேற்று செவ்வாய்க்கிழைமை பகல் 1.30 மணி

15

### இந்திய கடன் வசதியின் கீழ்

## எரிபொருளுக்கு கூடுதலாக 500 மில்லியன் டொலர்கள்!

கொழும்பு, ஜூன் 08

ஜூன் மாதத்துக்கு தேவையான எரிபொருளை வாங்குவதற்கு 55. 7 கோடி டொலர்கள் அல்லது 23 ஆயிரத்து 400 கோடி ரூபாய் தேவை. இந்நிலையில், இந்திய கடன் வசதியை பயன்படுத்தி 50 கோடி டொலர்களை கூடுதல் கடனாகப் பெற அரசாங்கம் ஒப்புதல் அளித்துள்ளது

15

## ரூ.100,000 கோடியால் கடன் எல்லை அதிகரிப்பு

கொழும்பு, ஜூன் 08

தேசிய திறைச்சேரி கட்டளைச் சட்டத்தின் கீழ் இதற்கு முன்னர் பாராளுமன்றில் யோசனை முன்வைக்கப்பட்டு அனுமதி பெற்றுக் கொள்ளப்பட்ட 3 இலட்சம் கோடி ரூபாய் கடன் எல்லையை

15

# நிவாரண விலையில் விவசாயிகளுக்கு உரம்!

## விவசாய அமைச்சர் அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 08

சிறுபோக விவசாய நடவடிக்கைகளுக்கு தேவையான 65 ஆயிரம் மெற்றிக் தொன் உரத்தை ஒரு மாத காலத்துக்குள் இறக்குமதி செய்து விவசாயிகளுக்கு நிவாரண விலைக்கு வழங்கப்படும் என்று விவசாயத் துறை அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

இதேவேளை உணவு தட்டுப்பாட்டின் தாக்கத்தை இலங்கை நேரடியாக எதிர்கொள்ள நேரிடும். மேலும் , விளைச்சல் வீழ்ச்சியால் பாதிக்கப்

15

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

## இப்படியும் நடக்கிறது...!

தன் மகனை அழைத்த தந்தை, "நாம் இருவருமே இனி மேல் தவறு செய்யக்கூடாது. யார் எந்தத் தவறு செய்தாலும் அதற்கு அபராதமாக இந்த உண்டியலில் ஒரு ரூபாய் போட வேண்டும். அப்படிச் சேரும் தொகையை பின்னர் கோயிலுக்கு கொடுத்துவிடவேண்டும்" என்றார்.

மகனும் இதற்கு ஒப்புக்கொண்டான்.

தந்தையின் திட்டம் அப்படியே நடந்தது. திடீரென்று அவர் உடல்நிலை மோசம் ஆயிற்று. உண்டியலில் இருந்த பணத்தை எல்லாம் கோயிலுக்கு கொடுத்துவிட்டு, மருத்துவ மனையில் சேர்ந்தார்.

மகனைப் பார்த்து, "நான் இல்லாதபோதும் இந்தப் பழக்கத்தை விட்டுவிடாதே. ஒரு தவறுக்கு ஒரு ரூபாய் உண்டியலில் போட்டுவிடு" என்றார்.

மருத்துவ மனையில் மூன்று மாதம் தங்கிய அவர் வீடு திரும்பினார். உண்டியலைத் திறந்து பார்த்தார். அதில் ஒரே ஒரு ரூபாய்தான் இருந்தது.

மகிழ்ச்சி அடைந்த அவர், தன் மகனை அழைத்தார்.

"இந்த மூன்று மாதத்தில் ஒரே ஒரு தவறுதான் செய்தாயா?" என்று கேட்டார்.

"இல்லை அப்பா! உண்டியலில் முந்நூறு ரூபாய் பணம் சேர்ந்தது" என்றான் அவன்.

"அந்தப் பணத்தை கோயிலுக்கு கொடுத்துவிட்டாயா?" என்று கேட்டார் அவர்.

"அப்பா! உண்டியலைத் திறந்து அந்தப் பணத்தை நானே எடுத்துக்கொண்டேன். அந்தத் தவறுக்காக நீங்கள் சொன்னபடி ஒரு ரூபாயை உண்டியலில் போட்டுவிட்டேன்" என்றான்.

மக்கள் விடுதலை முன்னணி தாங்கள் மாத்திரமே ஊழலற்ற அரசாங்கத்தை வழங்கக்கூடியவர்கள் என்பதுபோல ஒரு தோற்றத்தை உருவாக்க முயன்றுகொண்டிருக்கின்றது.

எப்போதுமே, ஆட்சியில் இருக்காதவர்கள் சொல்வதை நாம் கேட்கவேண்டியதுதான். ஆனால், இன்று உலக பொருளாதாரம் இருக்கும் ஒழுங்குமுறையில் நாட்டை எப்படி ஆட்சி செய்யலாம் என்பதிலோ, அல்லது தாங்கள் ஆட்சிக்கு வந்தால் எப்படி ஆட்சி செய்வோம் என்பது பற்றியோ அவர்கள் எந்த யோசனையையும் இதுவரை முன்வைத்ததாக தெரியவில்லை.

'கோட்டா கோ ஹோம்' போராட்டத்தின் பின்னணியில் அவர்கள் இருப்பதும் இரகசியமானதல்ல. கோட்டா வீட்டுக்குப் போகவேண்டியவர்தான். ஆனால், அவர் போனால் வருகின்றவர் யார் என்பதில் யாருக்கும் தெளிவு இருப்பதாக தெரியவில்லை என்றும் இந்தப் பத்தியில் பலதடவை குறிப்பிட்டாகிவிட்டது.

இப்போது, ரணில் ஆட்சிக்கு வந்த பின்னரும் பொருட்களின் விலைகள் அதிகரிக்கின்றன. அது நடக்கும் என்பதும் தெரியாததல்ல. பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்ள சர்வதேச நாணய நிதியத்திடம் போகவேண்டும் என்று சொன்னவர்கள், போன பின்னர் அதனால் ஏற்படுகின்ற மாற்றங்களையும் ஏற்றுக்கொண்டே ஆகவேண்டும்.

முதல்கட்டமாக வரிகள் அதிகரிக்கப்பட்டதும் அதன் பிரதிபலன்தான்.

மக்கள் விடுதலை முன்னணியின் யாழ்ப்பாண மாவட்ட அமைப்பாளர் சந்திரசேகரன், தனது முகநூலில் இட்டிருக்கின்ற பதிவு ஒன்றைப் பார்க்கமுடிந்தது.

'ஒன்லைனில் கல்விகற்கும் பிள்ளைகளுக்கும் வைச்சான் அப்பு ரணில்' என்ற அவரது முகநூல் பதிவைப் பார்த்தபோது, மேலே ஒரு ரூபாயை விட்டுவைத்த மகனின் கெட்டித்தனம்தான் ஞாபகத்திற்கு வந்தது.

அண்மையில், நிதி அமைச்சருமான பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, வரிகளை அதிகரித்திருந்தது தெரிந்ததே. அதுகூட, ஜனாதிபதி கோட்டாபய பதவிக்கு வந்ததும் குறைத்த வரியையே அவர் மீண்டும் அதேயளவு கூட்டியிருந்தார்.

இன்றைய பொருளாதார நெருக்கடிக்கு ஜனாதிபதி கோட்டாபய பதவிக்கு வந்தும் இவ்வாறு வரியை குறைத்ததும் ஒரு காரணம் என்றே பொருளியலாளர்கள் தெவித்து வருகின்றனர்.

இப்போது, அந்த குறைப்பை மீண்டும் பழைய அளவிற்கு கொண்டுவந்ததுதான் ரணில் செய்த வேலை. ஆனால், அதனை மாணவர்களின் கல்விக்கு ஏதோ ஆப்பு வைக்கப்பட்டதுபோல மக்கள் மத்தியில் அபிப்பிராயத்தை ஏற்படுத்த நினைப்பது ஒரு பொறுப்புள்ள எதிர்க்கட்சியின் பணியாக இருக்கமுடியாது. எதிர்க்கட்சி என்றால் எல்லாவற்றையும் எதிர்க்கவேண்டும் என்று நினைப்பதும் சரியானதாக இருக்காது.

ஒரு மாணவன் ஒன்லைனில் கல்வி கற்பதற்கு நூறு ரூபாவை செலவிட்டிருந்தால், அது இப்போது நூற்றி நான்கு ரூபாவாக ஆகியிருக்கின்றது. அதற்காக, மாணவர்களின் கல்விக்கும் ரணில் ஆப்பு வைத்துவிட்டார் என்று பிரசாரம் செய்ய நினைப்பது உங்கள் அரசில் வளர்ச்சிக்குத்தான் ஆப்பு வைத்துவிடும்.!

- ஊர்க்குருவி

# யாழ். ஸ்கந்தவரோதய கல்லூரியின் 128ஆவது ஆண்டு கொண்டாட்டம்!

யாழ்ப்பாணம், ஜூன் 08

யாழ். மாவட்டத்தின் புகழ் பூத்த கல்லூரிகளில் ஒன்றான சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் 128 ஆவது ஆண்டு நிறைவு விழா நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை கொண்டாடப்பட்டது.

கல்லூரியின் மாணவர் முதல்வர் சபையின் ஏற்பாட்டில் கல்லூரி முன்றலில் கல்லூரி அதிபர் மு.செல்வஸ்தான் தலைமையில் சிறப்புற நடைபெற்ற இந்த நிகழ்வில் கேக் வெட்டிக் கொண்டாடப்பட்டது.

இறை வணக்கம், பாடசாலைக் கொடியேற்றல் என்பன இடம்பெற்றதைத் தொடர்ந்து ஸ்கந்தா நிதியப் பெயர்ப்பலகையை ஸ்கந்தவரோதய கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் அமெரிக்கா கிளைத் தலைவரும், ஸ்கந்தா நிதிய உறுப்பினருமான கே. பாலசுப்பிரமணியம் திரைநீக்கம் செய்து வைத்தார்.

இதையடுத்து, ஸ்கந்தா நிதியத்தால் அமைக்கப்பட்ட திறன் வகுப்பறைப் பெயர்ப் பலகையை கல்லூரியின் பழைய மாணவர் சங்க தலைவர் சேது. விபுலானந்தா திரைநீக்கம் செய்து வைத்தார். ஸ்கந்தா நிதியத் தலைவர் மருத்துவர் கே. சிவகுமார் திறன் வகுப்பறைச் செயல்பாடுகளைச் சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைத்தார்



இதன்போது, மாணவர்களின் பயன்பாட்டுக்கு என ஒருதொகுதிக் கதிரைகளும் கையளிக்கப்பட்டன. இதனைத் தொடர்ந்து இடம்பெற்ற விழா நிகழ்வில் கல்லூரியின் 128 ஆவது ஆண்டு நிறைவு விழா கல்லூரியின் அதிபர், மாணவர்கள், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள் ஆகியோர் இணைந்து கேக் வெட்டிக் கொண்டாடினர்.

நிகழ்வில் ஸ்கந்தா நிதியத்தின் கனடாக் கிளைப் பணிப்பாளர் கே. மகேந்திரலிங்கம், கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் அமெரிக்கா கிளைத் தலைவரும், ஸ்கந்தா நிதிய உறுப்பினருமான கே. பாலசுப்பிரமணியம் ஆகியோர் கல்லூரி வளர்ச்சிக்கு ஆற்றி வரும் அரும் பெரும் சேவைகளைப் பாராட்டிக் கல்லூரிச் சமூகத்தால் கௌரவிக்கப்பட்டனர்.

(ஐ)

## ரயில் பயண சீட்டில் ரூ. 7 இலட்சம் மோசடி!

கொழும்பு, ஜூன் 08

ரயில் பயணச்சீட்டு மற்றும் சரக்கு வருமானத்தில் சுமார் 7 இலட்சம் ரூபாய் மோசடி செய்த குற்றச்சாட்டில் அம்பேபுஸ்ஸ நிலைய அதிபர் பணி இடைநிறுத்தப்பட்டுள்ளார்.

அம்பேபுஸ்ஸ நிலைய அதிபர், அண்மையில் பணியிலிருந்து இடைநிறுத்தப் பட்டுள்ளதாகவும், இது தொடர்பான கணக்காய்வு விசாரணையை ரயில்வே திணைக்களம் ஆரம்பித்துள்ளதாகவும் ரயில்வே திணைக்கள பேச்சாளர் தெரிவித்தார். (ஐ)

## திருமுறை விண்ணப்பம்

யாழ்ப்பாணம், ஜூன் 08

அச்சுவேலி உலவிக்குளம் சித்திவிநாயகர் ஆலயம், சிவகாமஞானபானு சிவஸ்ரீ ச. குமாரசுவாமி குருக்கள் அறக்கட்டளை, பிரித்தானிய சைவ முன்னேற்ற சங்கம், இந்தியா - சேலம் பன்னிரு திருமுறைகள் பகுப்பாய்வு மையம் என்பன இணைந்து நடத்தும் சிவநெறிய திருமுறை விண்ணப்பம் நாளை வியாழக்கிழமை மாலை 7 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் சிங்கப்பூர் தமிழிசைப் பள்ளியை சேர்ந்த திருமதி ப. ஜெயந்தி, திருமதி சித்ரா சரவணகுமார் ஆகியோர் திருமுறை விண்ணப்பம் செய்யவுள்ளனர்.

இந்த நிகழ்வில், சூம் செயலியின் 417 892 9023 என்ற அடையாள எண் மூலம் 202811 என்ற கடவுச் சொல்லைப் பயன்படுத்தி இணைய முடியும். (ஐ)

# அதிபரை நியமிக்கக் கோரி விசுவமடுவில் போராட்டம்!



முல்லைத்தீவு, ஜூன் 08

விசுவமடு விஸ்வநாதர் ஆரம்பப் பாடசாலை மாணவர்கள் நேற்று செவ்வாய்க்கிழமை காலை போராட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தனர்.

தமது பாடசாலையில் ஒரு வருட காலமாக பாடசாலை அதிபர் இல்லாமையால் கற்றல் நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியாத நிலை உள்ளதாக தெரிவித்தே அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கடந்த வருடம் 376 மாணவர்கள் பாடசாலையில் கற்று வந்த நிலையில், இந்தவருடம் 299 மாணவர்களே கற்கின்றனர். அதிபர் இல்லாத காரணத்தால் பல மாணவர்கள் வேறு பாடசாலைகளுக்கு சென்றுள்ளனர் என்றும் அவர்கள் கூறினர்.

புதுக்குடியிருப்பு கோட்டத்தில் சிறந்த பெறுபேறுகளை பெற்று வந்த சிறந்த பாடசாலை எனப் பலராலும் போற்றப்பட்ட பாடசாலைக்கு அதிபர் நியமிக்கப்படாமை தொடர்பில் கவலையிட்டுள்ளனர்.

தமது பாடசாலைக்கு அதிபர் ஒருவரை நியமித்து தருமாறு அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(ஐ)

# கொடிகாமத்தில் பெண்ணின் தங்கச் சங்கிலி அபகரிப்பு!

தென்மராட்சி, ஜூன் 08

பிள்ளையை பாடசாலைக்கு மோட்டார் சைக்கிளில் ஏற்றி வந்த பெண் ஒருவரின் இரண்டு பவுண் தங்க சங்கிலி மோட்டார் சைக்கிளில் வந்தவர்களால் அறுத்து செல்லப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்றுக் காலை, மீசாலை பகுதியில் இருந்து டச்சு வீதியால் பயணிக்கும்போது , புதுரா கோயில் பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப் பட்டுள்ளது. கொடிகாமம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(ஐ-3)

ஈழநாடு
Eelanadu ஈழநாடு
08.06.2022 புதன்கிழமை
பிலவ வருடம், வைகாசி 25

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்**
**உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

**E-mail: eelanaduweekly@gmail.com**
**தொலைபேசி : 021 730 1370**

# ஜனாதிபதியின் அறிவிப்பு?

கோட்ட கோ ஹோம் - எதிர்ப்பு, 50 நாட்களைக் கடந்திருக்கும் நிலையில், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, தான், ஒரு தோல்விய டைந்த ஜனாதிபதியாகப் பதவி விலகப் போவதில்லையென்று தெரி வித்திருக்கின்றார் - நான் அடுத்த தேர்தலில் போட்டியிடப் போவதில்லை. ஆனால் - தற்போது எனக்கு மக்கள் வழங்கிய ஆணையின்படி, மிகுதிக் காலத்தையும் பூர்த்திசெய்துவிட்டுத்தான் செல்லவுள்ளார் என்று, அழுத் தம் திருத்தமாகத் தெரிவித்திருக்கின்றார். ஜனாதிபதியின் அதிகாரங்களை குறைத்து, பிரதமரின் அதிகாரங்களை அதிகரிப்பது தொடர்பான உரையாடல்கள் இடம்பெற்று வருகின்ற நிலையில்தான், அவர் இவ்வாறு தெரிவித்திருக்கின்றார்.

ராஜபக்ஷக்களின் அதிகார மையம் தகர்ந்திருக்கும் நிலையில் - ராஜபக்ஷ குடும்பத்தில் அதிகாரத்தோடு இருப்பவர் கோட்டாபய ராஜபக்ஷ மட்டும்தான். இதேவேளை, பொதுஜன பெரமுனவை பஸில் ராஜபக்ஷ கட்டுப்படுத்துவதாகவே பரவலாக நம்பப்படுகின்றது. இந்தப் பின்னணியில் நோக்கினால், பஸில் அதிகாரத்தில் இல்லாது போனாலும்கூட, கட்சியைக் கட்டுப்படுத்தும் அதிகாரத்தில் இருப்பதான தோற்றமே தெரிகின்றது.

பொதுஜன பெரமுனவிலுள்ள 60 விகிதத்திற்கு மேற்பட்ட உறுப்பி னர்கள், பஸில் ராஜபக்ஷவையே தங்களின் ஞான குருவாக கருதுகின்ற னர் என்று சில தென்னிலங்கை அரசியல் அவதானிகள் குறிப்பிடுகின்றனர் - அந்தளவுக்கு, பஸிலுக்கு அவர்கள் விசுவாசமாக இருக்கின்றனர் - ஏனெனில், அவர்களில் பெரும்பாலானவர்களை அரசியலுக்கு கொண்டு வந்தவர் பஸில். அவர்களைப் பொறுத்தவரையில், தாங்கள் அரசியலில் இருப்பதற்கு பஸில் ராஜபக்ஷவே காரணம். இந்த விசுவாசமே மறுபுறம் பஸில் ராஜபக்ஷவுக்கு சாதகமாக இருக்கின்றது.

கோட்டாபயவை பொறுத்தவரையில் அவர் விரும்பினாலும் அடுத்த ஜனாதிபதி தேர்தலில், போட்டியிடுவதற்கான சூழல் இல்லை. அதே வேளை, போட்டியிட்டு தோல்வியடையவும் அவர் விரும்ப மாட்டார். இந்த நிலையில் தனது காலத்தில், தன்னால் ஏற்பட்ட சிக்கல்களைப் போக்கும் வகையில், ஒரு சில விடயங்களையாவது செய்துவிட்டுப் போவதற்கே அவர் முயற்சிக்கக்கூடும். இதற்கு முதலில் ஸ்திரமான அர சாங்கம் கட்டாயமானது. ஒரு ஸ்திரமான அரசாங்கம் அமைய வேண்டு மாயின், ரணில் தொடர்ந்தும் சுதந்திரமாக செயலாற்றக் கூடியவாறான சூழல் பாராளுமன்றத்தில் இருக்க வேண்டியது கட்டாயமானது.

ஆனால், கட்சி ஜனாதிபதியின் கட்டுப்பாட்டில் இல்லாதபோது, ஜனாதிபதியால் எந்தளவுக்கு ரணிலுக்கு உதவ முடியுமென்பதும் கேள்விக்குறிதான். பஸில் ராஜபக்ஷவை பொறுத்தவரையில், தங்களு டைய கட்டுப்பாட்டில் பெரும்பான்மையான பாராளுமன்ற உறுப்பினர்கள் இருப்பதால், கட்சி தன்னுடைய கட்டுப்பாட்டில் இருப்பதான நிலைப்பாட்டில் இருக்கின்றார்.

சில தினங்களுக்கு முன்னர், மகிந்த மீண்டும், பிரதமரானாலும் ஆச்சரிப்பட ஒன்றுமில்லையென்று, அவர் குறிப்பிட்டிருந்ததையும் இந்த இடத்தில் குறித்துக் கொள்ளலாம். ஆனால், ஒருவேளை, பொதுஜன பெரமுனவின் ஆதரவில், பஸில் பிரதமரானாலும்கூட, நாட்டை முன் கொண்டு செல்ல முடியாது. ஏனெனில், ராஜபக்ஷக்களின் தோல்வியின் காரணமாகத்தான் ரணில் இந்த இடத்திற்கு வரநேர்ந்தது. ரணில் தோற் றால், ஒரு வெற்றிபெற்ற ஜனாதிபதியாக, அரசியலிலிருந்து ஒதுங்கும் கோட்டாபயவின் எண்ணம், ஒருபோதுமே, ஈடேறப் போவதில்லை.

இலங்கையின் அரசியல் வரலாற்றில், கோட்டாபய ராஜபக்ஷ போன்று, இதற்கு முன்னர் இருந்த எந்தவொரு ஜனபாதியும் இந்தளவு சிக்கல்களை, எதிர்ப்புக்களை எதிர்கொள்ளவில்லை. இத்தனைக்கும், தனிச்சிங்கள மக்களின் வாக்குகளால் வெற்றிபெற்றிருந்தும், தன்னை யொரு சிங்கள - பௌத்த தலைவனாக பிரகடனம் செய்திருந்தும்கூட, கோட்டாபய இந்தளவு நெருக்கடிகளை எதிர்கொண்டிருக்கின்றார் - என்றால், கோட்டாபய வெற்றிபெற்ற ஜனாதிபதியாக வெளியேற வேண்டுமானால், அவர் அதிகம் உழைக்க வேண்டியிருக்கும். அவரால் அது முடியுமா என்பதுதான் இப்போதுள்ள கேள்வி.

# மனம் திறந்தார் ஜனாதிபதி!



- அனந்த் பாலகிட்ணர் -

*இலங்கையின் இன்றைய பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடி தொடர் பாக சர்வதேச புளும் பேர்க் (Bloom Berg) செய்தி நிறுவனத்துக்கு வழங்கியுள்ள பேட்டி யொன் றில் தாம் ஒரு தோல்வியுற்ற ஜனாதி பதியாக பதவியிலிருந்து விலக மாட்டேன் எனவும் மக்கள் வழங்கிய ஆணையின் பிரகாரம் தமது ஐந்து வருட பதவிக்காலத் தைப் பூர்த்தி செய்த பின்னரே பதவியிலிருந்து விலகப்போவதாக வும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ குறிப் பிட்டுள்ளார்.*

*“தோல்வியுற்ற ஜனாதிபதியாக வெளியேற மாட்டேன்“ என்று ஜனாதிபதி கூறியுள்ள மையைப் பார்க்கும் போது அவர் 2019ஆம் ஆண்டு இலங்கையின் எட்டாவது நிறை வேற்றதிகார ஜனாதிபதியாக தெரிவானதிலி ருந்து வெற்றிகரமாக எதனைச் சாதித்தார் ? என்பதே முக்கிய கேள்வியாக இருக்கின்றது.*

*தோல்வியுற்ற ஜனாதிபதியாக பதவியிலி ருந்து வெளியேற மாட்டேன் என்று ஜனாதி பதி கோட்டாபய ராஜபக்ஷ கூறியிருந்தார். ஆனால், அவர் ஒரு தோல்வியுற்ற ஜனாதிபதி என்ற கோஷமே இரவு - பகலாக காலிமுகத் திடலில் அமைக்கப்பட்டுள்ள கற்பனைக் கிராமமான “கோட்டா கோ கம“வில் எதி ரொலித்து வருகின்றது.*

*இந்தக் கோஷத்தை நோக்கும்போது ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை நாட்டு மக்கள் ஏற்கனவே ஒரு தோல்வியுற்ற ஜனாதிபதியாகக் கருதுகின்ற நிலையில் அவர் “விழுந்தும் மீசையில் மண்படவில்லை” என்ற ரீதியில் தாம் ஒரு தோல்வியுற்ற ஜனாதிபதி யாக பதவி விலக மாட்டேன் என்று கூறியுள் ளாரோ என்றே எண்ணத் தோன்றுகின்றது.*

*வடக்கு - கிழக்கில் 2009ஆம் ஆண்டு ஈட்டிய யுத்த வெற்றியை முதன்மைப்படுத் தியே ஜனாதிபதியாக கோட்டாபய ராஜபக்ஷ 2019ஆம் ஆண்டு ஜனாதிபதியாகத் தெரிவா னார் . கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதி யாக தெரிவு செய்யப்படுவதற்கு அவரின் சகோதரரான முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் அரசியல் செல்வாக்கும் ஒரு பின்புலமாக அமைந்திருந்தது.*

*ஆனால், ஒரு மாதத்துக்கு முன்னர் மகிந்த ராஜபக்ஷ பிரதமர் பதவியை இராஜிநாமா செய்து மக்களின் ஆக்ரோஷமான ஆர்ப்பாட் டத்துக்கு முகங்கொடுக்க முடியாது திருகோணமலைக்குத் தப்பியோடியிருந்தார்.*

*இத்தகைய பின்னணியில் ஏறத்தாழ ஒரு தனிமரமாகவே ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தற்போது அரசியலில் காணப்படு கின்றார். அத்துடன், அரசியல் சூட்சுமங்களை நன்கு அறியாதவராகவும், இக்கட்டான பொருளாதார நிலவரங்களைக் கையாள முடியாதவராகவும் “ஆழமறியாது அரசியலில் காலைவிட்ட” நிலையில் ஜனாதிபதி கோட் டாபய ராஜபக்ஷ இருப்பதையே சர்வதேச செய்தி நிறுவனமான புளும் பேர்கிற்கு அவர் வழங்கிய பேட்டி எடுத்துக்காட்டுகின்றது.*

*ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கூறியிருப்பவற்றை நோக்கும்போது அரசியலில் அவரது கையாலாகாத்தனத்துக் கும் இலங்கையின் அப்பாவி மக்களே பலிக் கடாக்களாகியுள்ளமையை அவதானிக்க முடி கின்றது.*

*தற்போதைய பொருளாதார நெருக்கடி பற்றி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ குறிப்பிட்ட போது சர்வதேச நாணய நிதி யத்தை நாடுவதில் ஏற்பட்ட தாமதமும் தற்போதைய இக்கட்டான பொருளாதார நிலவரத்துக்கு முக்கிய காரணம் எனத் தெரி வித்துள்ளார்.*


*ஜனாதிபதியின் இக்கூற்றை நோக்கும் போது ஒரு நாட்டின் பொருளாதார நில வரத்தை அவர் நாடிபிடித்தறிய முடியாத வராக இருப்பதோடு அவரிடம் பொருளாதார நெருக்கடிகளிலிருந்து மீள்வதற்குரிய ஆலோச னைகளை வழங்குவதற்கு நிபுணத்துவமுடை யோர் காணப்படவில்லை என்பதையும் அறிய முடிகின்றது.*

*நாடு தற்போது வெளிநாட்டு உதவி களையே பெரிதும் எதிர்பார்த்துள்ளதையும் ஜனாதிபதி தமது பேட்டியில் சுட்டிக்காட்டி யிருப்பதோடு இந்தியா, சீனா மற்றும் மத்திய கிழக்கு நாடுகள் பலவற்றின் உதவியையும் தாம் நாடியுள்ளாரென அவர் குறிப்பிட்டிருந் தார்.*

*ஆட்சி நிர்வாக விடயங்கள் பற்றி அவர் குறிப்பிடுகையில் தாம் ஓர் அரசியல்வாதி யல்ல என்று ஜனாதிபதி கூறியுள்ளார். அத்துடன், நிறைவேற்று அதிகாரம் ஒருபுற மும், பாராளுமன்ற ஆட்சி மறுபுறமுமாக இருக்கும்போது ஒரு சீரான ஆட்சி முறை யைக் கொண்டிருக்க முடியாது என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். ஜனாதிபதியின் இக்கூற்றை பார்க்கும் போது அவரின் சகோதரரான முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உட்பட அவருக்கு முன்பதாக 1978ஆம் ஆண்டு நிறைவேற்று அதிகார ஆட்சி அறிமுகமான காலம் முதல் இருந்த ஜனாதிபதிகள் குறிப்பாக மூன்று தசாப்த கால யுத்தம் நிலவியபோது நாட்டை எவ்வாறு நிர்வகித்தார்கள்? என்ற கேள்வியே மேலெழு கின்றது.*

*எனவே புளும் பேர்க் பேட்டியில் ஜனாதி பதி தனது கையாலாகாத்தனத்தை ஏதோ ஒருவிதத்தில் சுற்றிவளைத்து ஒப்புக்கொண் டுள்ளதை அறிய முடிகின்றது. அத்துடன், தாம் மீண்டும் ஜனாதிபதி தேர்தலில் போட்டி யிடப் போவதில்லை என்று ஜனாதிபதி கூறியுள்ளதை நோக்கும் போது “பிச்சை வேண்டாம் நாயைப்பிடி“ என்று கூறும் நிலைக்கு அவர் வந்துள்ளதையே அறிய முடி கின்றது.*

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’






**மேடம்**
நிதானித்து செயல்பட வேண்டிய நாள். மற்றவர் ஆலோசனைக்கு இடம் கொடுக்க வேண்டாம். உறவினர் எதிராக செயல்படுவர். இன்று நீங்கள் எதிர்பார்த்தவை சங்கடத்தில் முடியும்.

**இடபம்**
நிதானித்து செயல்பட வேண்டிய நாள். உறவினர் எதிராக செயல்படுவர். முடிவிற்கு வரக்கூடிய முயற்சி கடைசி நேரத்தில் தள்ளிப்போகும். அந்நியரை நம்பி ஈடுபடும் முயற்சி வீணாகும்.

**மிதுனம்**
பொருளாதார நெருக்கடி விலகும். பழைய கடன்கள் பைசலாகும். லாபமான நாள். முயற்சிகளில் லாபம் காண்பீர்கள். எதிர்பாராத வருமானம் கிடைக்கும். யோகமான நாள்.

**கடகம்**
பேச்சில் கவனம் தேவை. இன்று நிதானம் அவசியம். யோசித்து செயல்பட வேண்டிய நாள். கடனில் இருந்து விடுபட முயற்சிப்பீர்கள். செயல்களில் இன்று நெருக்கடி அதிகரிக்கும்.

**சிம்மம்**
மனக்குழப்பம் வரலாம். எந்த ஒன்றிலும் சரியான முடிவிற்கு வரமுடியாமல் திண்டாடுவீர்கள். தவறான வழியில் பணம் தேட வேண்டாம். எதிரிகள் பலம் பெறுவர். முயற்சிகளில் தடை உண்டாகும்.

**கன்னி**
எதிர்பாராத பயணம் உண்டாகும். உங்களுடைய செயல்கள் விடாமுயற்சியால் நிறைவேறும். பணம் பல வழிகளிலும் செலவாகும். உங்கள் முயற்சிகள் நிறைவேறும். செலவுகள் ஏற்படும்.

**துலாம்**
அடிப்படைத் தேவை இன்று நிறைவேறும். புதிய நட்புகளிடம் கவனம் தேவை. நெருக்கடி விலகும். பண வரவில் இருந்த தடை நீங்கும். எதிர்பாராத நன்மை கிடைக்கும்.

**விருட்சிகம்**
தொழில் நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள். செல்வாக்கில் உயர்வு உண்டாகும். அமைதியுடன் செயல்பட்டு நினைத்ததை சாதிப்பீர்கள். வாழ்க்கை நிலை உயரும். நன்மை சேரும்.

**தனுசு**
மனதில் இருந்த சங்கடம் விலகும். உங்கள் அணுகுமுறையில் மாற்றம் உண்டாகும். எதிரிகள் பணிவர். நினைத்ததை சாதிப்பீர்கள். செல்வாக்கு உயரும். வெற்றி காண்பீர்கள்.

**மகரம்**
எச்சரிக்கையுடன் செயல்படுங்கள். எதிர்பார்த்த நன்மையை அடைய முடியாமல் போகும். பயணத்தில் கவனம் தேவை. அறிமுகம் இல்லாதவரிடம் பழக வேண்டாம். தவறான செயல்களில் ஈடுபடுவது கூடாது.

**கும்பம்**
குடும்ப பிரச்னை முடிவிற்கு வரும். உங்களை விட்டு விலகியவர்கள் தேடி வருவர். அடுத்தவர் நலனில் அக்கறை செலுத்துவீர்கள். செல்வாக்கு உயரும். எதிரிகள் விலகுவர்.

**மீனம்**
உடல் நிலை சீராகும். புதிய முயற்சிகள் உங்களுக்கு முன்னேற்றத்தை உண்டாக்கும். கடமையில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள். சிலர் வெளியூர் பயணம் மேற்கொள்வர்.

# நெடுந்தீவு கடல் வரைக்கும் மீன்பிடி உரிமை வேண்டும்!

## பா. ஜ. கவின் தமிழக தலைவர்

இராமநாதபுரம், ஜூன் 08



நெடுந்தீவு வரை மீன் பிடிப்பதற்கு அனுமதிக்க வேண்டும். கச்சதீவை மீட்பதற்கு பிரதமர் நரேந்திர மோடியால் மட்டுமே முடியும் என்று இந்தியாவை ஆளும் பாரதிய ஜனதா கட்சியின் தமிழகத்துக்கான தலைவர் அண்ணாமலை கூறியுள்ளார்.

நேற்று முன்தினம் இராமநாதபுரம் சென்ற அண்ணாமலை செய்தியாளர்களிடம் பேசுகையில்,

கச்சதீவு இராமநாதபுரம் சமஸ்தான மன்னர்களுக்கு சொந்தமாக இருந்தது. நமது மீனவர்கள் நெடுந்தீவு வரை மீன் பிடிக்க அனுமதிக்க வேண்டும். கச்சதீவில் உள்ள தேவால யத்துக்கு வீசா இல்லாமல் சென்று வர வேண்டும் ஆகிய வற்றை தமிழக பா. ஜ. க., மத் திய அரசுக்கு கோரிக்கையாக வைத்துள்ளது. கச்சதீவை மீட்க பிரதமர் மோடியால் மட்டுமே முடியும்.

இராமேஸ்வரத்துக்கு உதான் திட்டத்தில் விமான நிலையம் உள்ளிட்டஅனைத்து விதமான வசதிகளை கொண்டுவர மத்திய அரசு முயற்சிக்கிறது. ஆனால், தி. மு. க. அரசு அதற்கான திட்ட அறிக்கையை அனுப்புவதில்லை - என்றார். (ஐ)

# நளினி விடுதலை வழக்கு; தீர்ப்புக்காக ஒத்திவைப்பு!

சென்னை, ஜூன் 08

ஆளுநரின் ஒப்புதலுக்காக காத்திருக்காமல் தன்னை விடுதலை செய்ய தமிழக அரசுக்கு உத்தரவிடக் கோரி நளினி தாக்கல் செய்த வழக்கை விசாரித்த உயர் நீதிமன்றம், விடுதலை செய்வது தொடர்பாக உயர் நீதிமன்றம் எந்த உத்தரவையும் பிறப்பிக்க முடியாது. அதற்கு உச்ச நீதிமன்றத்தைத்தான் நாட வேண்டும் எனக் கூறி, வழக்கை திகதி குறிப்பிடாமல் தீர்ப்புக்காக தள்ளிவைத்துள்ளது.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் ஆயுள் தண்டனை கைதிகளாக உள்ள நளினி, முருகன் உள்பட ஏழு பேரையும் விடுதலை செய்ய 2018 செப்ரெம்பர் 9ஆம் திகதி தமிழக அமைச்சரவை தீர்மானம் நிறைவேற்றி, 2018 செப்ரெம்பர் 11ஆம் திகதி ஆளுநரின் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அரசு அனுப்பிய தீர்மானத்தில் ஆளுநர் தாமதிப்பதால், அவரின் ஒப்புதலுக்கு காத்திருக்காமல் தன்னை விடுதலை செய்யக்கோரி நளினி சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்தார்.

கடந்த முறை இந்த வழக்கு விசாரணைக்கு வந்தபோது, நளினி தடா சட்டப்பிரிவில் தண்டிக்கப்பட்டாரா என்பதை தெரிந்து கொள்வதற்காக சிறப்பு நீதிமன்றத்தின் அசல் தீர்ப்பை சமர்ப்பிக்க தலைமை நீதிபதி அமர்வு உத்தரவிட்டிருந்தது.

இந்நிலையில், இந்த வழக்கு தலைமை நீதிபதி முனீஷ்வர் நாத் பண்டாரி மற்றும் நீதிபதி மாலா ஆகியோர் அடங்கிய அமர்வில் நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது, சிறப்பு நீதிமன்ற தீர்ப்பு சமர்ப்பிக்கப்பட்டது. பின்னர், நளினி தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் ராதாகிருஷ்ணன், அமைச்சரவை தீர்மானத்தின் அடிப்படையில் ஆளுநர் முடிவு எடுக்காமல் இருந்ததும், இரண்டரை ஆண்டுகளுக்கு பின் அமைச்சரவை பரிந்துரையை குடியரசு தலைவருக்கு அனுப்பியதும் அரசியல் சாச னத்துக்கு விரோதமானது என தெரிவித்தார்.

அரசியல் சாசனத்துக்கு விரோதமாக ஆளுநர் செயல்பட்டிருந்தால் உயர் நீதிமன்றம் அதை சட்டவிரோதம் என அறிவிக்கலாம். இரண்டரை ஆண்டுகள் அமைச்சரவை பரிந்துரை மீது எந்த முடிவும் தெரிவிக்காமல் குடியரசு தலைவருக்கு அனுப்பியதால் இந்த விவகாரத்தை மீண்டும் ஆளுநருக்கு அனுப்பி வைக்க கூடாது எனவும் குறிப்பிட்டார்.

அப்போது குறுக்கிட்ட தலைமை நீதிபதி, உச்ச நீதிமன்றம் போல், விடுதலை செய்வது தொடர்பாக உயர் நீதிமன்றம் எந்த உத்தரவையும் பிறப்பிக்க முடியாது. அதற்கு உச்ச நீதிமன்றத்தை தான் நாட வேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

நளினி தரப்பு வழக்கறிஞர் ராதாகிருஷ்ணன், விடுதலை செய்யக் கோரவில்லை. உச்ச நீதிமன்ற உத்தரவின்படி ஆளுநரின் ஒப்புதலுக்கு காத்திருக்காமல் விடுதலை செய்யும்படி அரசுக்கு உத்தரவிட கோருவதாகவும், அநீதியை அழிக்க உயர் நீதிமன்றம் எந்த உத்தரவையும் பிறப்பிக்கலாம் எனவும் தெரிவித்தார்.

குடியரசு தலைவர் இன்னும் ஆவணங்களை ஆளுநருக்கு அனுப்பவில்லை. அவ்வாறு அனுப்பினாலும் இதுதொடர்பாக ஆளுநர் உத்தரவிட முடியாது என்பதால் நளினியை விடுதலை செய்யும்படி மாநில அரசுக்கு உத்தரவிட வேண்டும் எனக் கோரினார்.

தமிழக அரசுத் தரப்பில் ஆஜரான தலைமை வழக்கறிஞர் சண்முகசுந்தரம், நளினிக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனை, ஆயுள் தண்டனையாக குறைக்கப்பட்டதாகவும், ஏழு பேரையும் விடுதலை செய்ய 2018 இல் அமைச்சரவை ஆளுநருக்கு பரிந்துரைத்ததாகவும் குறிப்பிட்டார்.

ஆளுநரின் அதிகாரத்தை உச்ச நீதிமன்றம் விளக்கியுள்ளதாக கூறிய அவர், விடுதலை செய்வது தொடர்பாக ஆளுநரின் கையெழுத்து அவசியம் என உச்ச நீதிமன்றம் கூறியுள்ளதாகவும், இந்த வழக்கில் உயர் நீதிமன்றமே பரிசீலிக்கலாம் எனவும் அரசு தலைமை வழக்கறிஞர் வாதிட்டார்.

அனைத்து தரப்பு வாதங்களும் முடிவடைந்த நிலையில், ஆளுநரின் ஒப்புதலுக்கு காத்திருக்காமல், தன்னை விடுதலை செய்யக் கோரி நளினி தொடர்ந்த வழக்கின் தீர்ப்பை நீதிபதிகள் திகதி குறிப்பிடாமல் தள்ளிவைத்தனர். (ஐ)

# சசிகலாவுக்கு அ.தி.மு.கவில் ஒருபோதுமே இடமில்லை!

## முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார்

சென்னை, ஜூன் 08

அ.தி.மு.க.வை மீட்டு எடுப்பேன் என்று சசிகலா கூறி இருக்கிறார். சசிகலாவுக்கு அ.தி.மு.க.வில் ஒருபோதும் இடமில்லை. பணத்தை வைத்து அரசியல் செய்யலாம் என சசிகலா நினைக்கிறார் -என்று கூறியுள்ளார் அந்தக் கட்சியின் முன்னாள் அமைச்சர் டி. ஜெயக்குமார்.

டில்லி உயர் நீதிமன்றமும் தேர்தல் குழுவும் தெளிவான தீர்ப்பை வழங்கி உள்ளன. சசிகலாவின் கருத்தை தொண்டர்களும் தமிழக மக்களும் பொருட்படுத்தவில்லை. அவர் கூறுவதை உதாசீனப்படுத்தும் கருத்தாகத்தான் அனை வரும் பார்ப்பார்கள். அவர் கூறும் கருத்து பெரிய அளவில் தாக்கமும் ஏற்படுத்தாது.

அ. ம. மு. கவில் இருந்து பலர் அ. தி. மு. கவில் வந்து இணைகிறார்கள். கூடிய விரைவில் அ. ம. மு. க. என்ற கட்சி இருக்காது. தொண்டர்கள், பொதுமக்கள் ஆதரவு இல்லாமல் பணத்தை வைத்து மட்டும் அரசியல் செய்து வருகிறார்கள் - இவ்வாறு அவர் கூறினார்.



## மன்னாரில் தேனீ மாற்றாற்றல் அமைப்பினால் விழிப்புணர்வு நடவடிக்கைகள் முன்னெடுப்பு

மன்னார், ஜூன் 08

பொது போக்குவரத்தில் மாற்றாற்றல் உடையவர்களுக்கான ஆசன ஒதுக்கீட்டை உறுதிப்படுத்தக் கோரி விழுது அமைப்பின் அனுசரணையில் தேனீ மாற்றாற்றல் அமைப்பினரால் விசேட விழிப்புணர்வு நிகழ்வு மன்னார் பிரதான பஸ் நிலையத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை காலை இடம்பெற்றது.

இதன் போது அரச மற்றும் தனியார் போக்குவரத்து பஸ்களில் மாற்றாற்றல் உடையவர்களுக்கு ஒதுக்கப்பட்ட ஆசனங்களுக்கு மேல் பிரத்தியேக ஸ்ரிக்கர்கள் ஒட்டப்பட்டதுடன் மாற்றாற்றல் உடையவர்களுக்காக ஒதுக்கப்பட்ட ஆசனங்கள் அடையாளப்படுத்தப்பட்டன.

இந்த நிகழ்வில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி.ஸ்ரான்லி டிமெல், விழுது அமைப்பின் மாவட்ட இணைப்பாளர், தேனீ அமைப்பின் உறுப்பினர்கள், சமூக செயற்பாட்டாளர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டு விழிப்புணர்வு நடவடிக்கையில் ஈடுபட்டனர். (அ)

# விவசாயக் கடன்களை தள்ளுபடி செய்ய முடிவு

### சபையில் கூறினார் பிரதமர் ரணில்



**கொழும்பு, ஜூன் 08**

**விவசாயக் கடன்களை தள்ளுபடி செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அறிவித்துள்ளார்.**

இரண்டு ஹெக்ரேயருக்கு குறைவான நிலப்பரப்பை கொண்ட நெற்செய்கையாளர்கள் பெற்றுள்ள கடன் தொகையை முழுமையாக தள்ளுபடி செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக பிரதமர் ரணில் விக்ரமசிங்க கூறினார்.

விவசாயிகளின் நலன் கருதி இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

அத்தியாவசிய அரச சேவைகளைத் தடைகளின்றி தொடர்ச்சியாக மேற்கொள்வதற்கான நிதியைப் பெற்றுக்கொள்வதற்கு பிரதமர் 95 பில்லியன் ரூபா குறைநிரப்பு பிரேரணை ஒன்றை பாராளுமன்றில் நேற்று முற்பகல் முன்வைத்தார்.

இதன்பொதே அவர் மேற்கண்டவாறு கூறினார். (அ)

## ஒரு வருடத்துக்கு சம்பளம் பெறாமல் பணியாற்ற அமைச்சர்கள் இணக்கம்

கொழும்பு, ஜூன் 08

ஒரு வருட காலத்துக்கு அமைச்சர்களுக்குரிய சம்பளத்தைப் பெற்றுக்கொள்ளாமல் பணியாற்ற அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்கள் இணைக்கம் தெரிவித்துள்ளதாக அமைச்சர் பந்துல குணவர்தன கூறினார்.

நேற்றுக் காலை அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

நாட்டின் தற்போதைய நிலைமையை கருத்திற் கொண்டு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினால் இது தொடர்பான யோசனை முன்வைக்கப்பட்ட நிலையில் அதனை அமைச்சரவை அமைச்சர்கள் ஏகமனதாக ஏற்றுக்கொண்டதாகவும் அமைச்சர் பந்துல குணவர்தன குறிப்பிட்டார். (அ)

## சிமெந்து விலை மீண்டும் உயர்வு

கொழும்பு, ஜூன் 08

50 கிலோ எடையுள்ள சிமெந்து மூடையின் விலையை மீண்டும் அதிகரிக்க சிமெந்து நிறுவனங்கள் தீர்மானித்துள்ளன.

இதன்படி 2,850 ரூபாவாக இருந்த சிமெந்து மூடை ஒன்றின் விலை 150 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அதனடிப்படையில் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் மற்றும் இறக்குமதி செய்யப்படும் அனைத்து 50 கிலோகிராம் சிமெந்து மூடை ஒன்றின் புதிய விலை ரூபா 3,000 என சிமெந்து நிறுவனங்கள் தெரிவித்தன. (அ)

### பொலிஸாரின் கடமைக்கு இடையூறு;

## திலிப் வெதாராச்சியின் மகன் - மருமகள் கைது

கொழும்பு, ஜூன் 08

போக்குவரத்து பொலிஸ் அதிகாரிகளின் பணிகளுக்கு இடையூறு விளைவித்த ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் திலிப் வெதாராய்ச்சியின் மகன் மற்றும் மருமகள் ஆகியோர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வீரக்கெட்டிய பொலிஸாரினால் அவர்கள் கைது செய்யப்பட்டனர்.

சந்தேகநபர்கள் பாதுகாப்பற்ற முறையில் கப்ரக வாகனத்தின் பிற்பகுதியில் குளிர்சாதனப்பெட்டியை ஏற்றி தெற்கு அதிவேக வீதியில் பயணிப்பதற்கு முயற்சித்துள்ளனர்.

இதனை அவதானித்த போக்குவரத்து பொலிஸார் அவர்களை தடுத்துள்ள நிலையில், பொலிஸாரின் கடமைக்கு இடையூறு ஏற்படுத்தி சந்தேகநபர்கள் அங்கிருந்து தப்பிச் சென்றனர்.

இந்தநிலையில் அவர்கள் தங்களது சட்டத்தரணிகள் ஊடாக பொலிஸாரிடம் முன் னிலையானமை அடுத்து கைதாகினர்.

அவர்களை வலஸ்முல்ல நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்தார். (அ)

### பொருளாதார நெருக்கடி நிலை;

## மிருகக்காட்சிசாலை விலங்குகளுக்கு உணவளிப்பதிலும் பெரும் நெருக்கடி!

கொழும்பு, ஜூன் 08

தெஹிவளை மிருகக்காட்சிசாலையில் உணவுப் பிரச்னை ஏற்படும் பட்சத்தில், அதிகளவான விலங்குகளை கொடூரமான விலங்குகள் நடமாடாத சரணாலயங்களில் விடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தேசிய விலங்கியல் பூங்காவின் பணிப்பாளர் நாயகம் கலாநிதி திலக் பிரேமகாந்த அறிவித்துள்ளார்.

மிருகக்காட்சிசாலையில் ஒரு இனத்தைச் சேர்ந்த நான்கு விலங்குகளை மாத்திரம் மக்கள் பார்வைக்கு வைத்தல் போதுமானது. வனவிலங்கு திணைக்களத்தின் அனுமதியுடன் அவ்வாறு தெரிவு செய்யப்பட்ட பகுதிகளுக்கு மான் போன்ற விலங்குகள் விடுவிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், நாட்டில் ஏற்பட்டுள்ள உணவு நெருக்கடியால் தெஹிவளை மிருகக்காட்சிசாலையில் உள்ள விலங்குகள் ஏற்கனவே பாதிக்கப்பட்டுள்ளதாக மிருகக்காட்சிசாலையின் பேச்சாளர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

கேள்வி கோரல் மூலம் விலங்குணவு வழங்கியவர்களுக்கு பணம் கொடுக்க மிருகக்காட்சிசாலையில் பணம் இல்லை. எனவே உணவு வழங்குபவர்கள் பணம் செலுத்தும் வரை உணவு வழங்குவதை தாமதப்படுத்துகின்றார்கள் என்றும் அவர் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மேலும், உணவுப் பிரச்னைக்குத் தீர்வாகவும், பணத்தை மிச்சப்படுத்தவும் நீண்ட காலமாக மிருகக்காட்சிசாலை மிருகங்களுக்கு வழங்கி வந்த விலையுயர்ந்த உணவு வகைகளுக்கு பதிலாக மாற்று உணவு வகைகளை வழங்கி வருகின்றோம். அதன்படி, அப்பிள், தோடம்பழம் போன்ற பழங்களை உண்ணும் விலங்குகளுக்கு கொய்யா போன்ற பழங்களும், விலை உயர்ந்த சூரிய காந்தி தானியங்களுக்கு பதிலாக பறவைகள் சாப்பிடும் சிறிய தானியங்களும் வழங்கப்பட்டு வருகின்றன.

அத்துடன், விலங்கியல் திணைக்களத்திற்குச் சொந்தமான பண்ணைகளில் உணவு உற்பத்தியை அதிகரிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தற்போது கோனாபொல பண்ணையில் அதிகளவான புற்கள் மற்றும் பயிர்கள் பயிரிடப்பட்டுள்ளதுடன், ரிதியகம தோட்டத்தில் 20 ஏக்கர் பண்ணை அமைக்கப்பட உள்ளது. மிருகக் காட்சிசாலையின் வருவாயை அதிகரிக்க கொவிட் காலத்தில் நிறுத்தப்பட்டிருந்த பல்வேறு செயல்பாடுகளை மீண்டும் செயல்படுத்த தயாராக உள்ளோம்.

இதேவேளை, கிருமிகள் உடலுக்குள் நுழைவதால் விலங்குகளுக்கு வெளி உணவுகள் வழங்குவது நிறுத்தப்பட்டுள்ளன. விலங்குகளுக்கு உணவளிக்க விரும்புபவர்களுக்கு உலர் உணவு, புலிக்குட்டிகளுக்கு பால் மா மற்றும் மிருகக்காட்சிசாலையில் உள்ள யானைகளுக்கு கரும்பு போன்ற பொருட்களை வழங்கலாம்- என்றார். (அ)

## ரஞ்சனுக்கு ஒத்திவைக்கப்பட்ட இரண்டு வருட கடூழியச் சிறை

கொழும்பு, ஜூன் 08

நீதிமன்றத்தை அவமதித்த குற்றச்சாட்டின் பேரில் ரஞ்சன் ராமநாயக்கவுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள இரண்டாவது வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன்போது குற்றச்சாட்டை ஒப்புக்கொண்ட ரஞ்சன் ராமநாயக்கவுக்கு உயர் நீதிமன்றத்தினால் 5 ஆண்டுகள் ஒத்திவைக்கப்பட்ட இரண்டு வருட கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

புவனேக அலுவிஹாரே, எல். டி. பி. தெஹிதெனிய மற்றும் காமினி அமரசேகர ஆகிய மூவரடங்கிய நீதியரசர்கள் குழுவினால் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. (அ)

## யாழ். பல்கலை சுகாதார விஞ்ஞானபீட புதுமுக மாணவர்கள் அறிமுக நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜூன் 08

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் இணைந்த சுகாதார விஞ்ஞானங்கள் பீடத்தில் 2020/ 2021 ஆம் கல்வி ஆண்டுக்குத் தெரிவு செய்யப்பட்ட புதுமுக மாணவர்களுக்கான திசைமுகப் படுத்தும் நிகழ்வுகள் நாளை வியாழக்கிழமை முதல் ஆரம்பமாகவுள்ளன.

திசைமுகப்படுத்தல் நிகழ்வுகளின் அறிமுக நிகழ்வு நாளை வியாழக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். பல்கலைக்கழக சபா மண்டபத்தில், பீடாதிபதி திருமதி தெய்வி தபோதரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

2020 / 2021 ஆம் கல்வி ஆண்டுக்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களும், பெற் றோரும் நிகழ் நிலையூடாக இந் நிகழ்வில் கலந்துகொள்ள முடியும்.

நிகழ்வுக்கான இணைப்புகள் புதுமுக மாணவர்களின் பதிவு செய்யப்பட்ட மின்னஞ்சல், மற்றும் கைத் தொலைபேசிக் குறுந் தகவல்கள் வாயிலாக அறிவிக்கப்பட்டுள்ளது என்றும், இணைப்புகள் கிடைக்காதவர்கள் இணைந்த சுகாதார விஞ்ஞானங்கள் பீடாதிபதி அலுவலகத்தின் 021 320 5486 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் பீடாதிபதி திருமதி தெய்வி தபோதரன் அறிவித்துள்ளார். (அ)

# இலங்கைக்கு உதவுவதற்கு சர்வதேச நாடுகள் தயார்!

## பிரதமர் ரணில் தெரிவிப்பு



**கொழும்பு, ஜுன் 08**

**இலங்கைக்கு ஒத்துழைப்புக்களை வழங்க சர்வதேச நாடுகள் தயாராகவுள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்றுத் தெரிவித்தார்.**

பாராளுமன்றில் இன்று நாட்டின் பொருளாதார நிலவரம் தொடர்பாக விசேட உரையொன்றை ஆற்றிய அவர், “2020 முதல் 2022, மே 20 ஆம் திகதிவரை 2.5 றில்லியன் ரூபாய் நாட்டில் அச்சடிக்கப்பட்டுள்ளது.

நாம் இன்று கடுமையான நிலைமைக்கு முகம் கொடுத்து வருகிறோம். இதுபோன்ற தொரு நிலைமைக்கு நாடு என்றும் முகம் கொடுத்ததில்லை.

சர்வதேச நாணய நிதியத்துடன் நாம் இப்போது பேச்சு நடத்தி வருகிறோம். 2023 ஆம் ஆண்டு நாம் பல சவால்களுக்கு முகம் கொடுக்க நேரிடும்.

அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகள் மாறினாலும், நாம் எமது நாட்டின் பொருளாதாரத்தைப் பலப்படுத்த ஸ்தீரமான கொள்கையுடன் பயணிக்கவேண்டும்.

சர்வதேசத்தின் ஒத்துழைப்பையும் இதற்காக பெற்றுக் கொள்ளவேண்டும்.

சில பிழையான நடவடிக்கைகளினால் இன்று எமது நாடு சர்வதேச மட்டத்தில் வீழ்ச்சியடைந்துள்ளது.

ஐ.நா. சபை, உலக சுகாதார ஸ்தாபனம் உள்ளிட்ட சர்வதேச அமைப்புக்கள், சர்வதேச நாடுகளுடன் நாம் பேச்சு நடத்தியுள்ளோம். எமக்குத் தேவையான உதவிகளை பெற்றுக் கொடுப்பதாக அவர்கள் உறுதியளித்துள்ளார்கள்.

எமக்கு கடன் மற்றும் நிதியுதவிகளை செய்யும் நாடுகளில் இந்தியா- சீனா- ஜப்பான் போன்ற நாடுகள் முன்னணியில் உள்ளன. இந்த நாடுகளுடனான உறவை இன்னமும் பலப்படுத்த வேண்டும்.

சிங்கப்பூர்- டுபாய் போன்று வர்த்தக மையமாக எமது நாட்டையும் முன்னேற்ற வழிகள் உள்ளன. இதற்காக வியட்நாம் எமக்கு சிறந்த முன்னுதாரணமாக காணப்படுகின்றது.

இலங்கைக்கு புதிய பொருளாதாரக் கொள்கை வகுப்பதே தற்போதைய சூழ்நிலையில் அத்தியாவசியமாகக் காணப்படுகிறது-என்றார். (அ)

# 21ஆவது திருத்தத்துக்கு சகலரதும் ஆதரவைப் பெறுவது கடினமானது

## அமைச்சர் பந்துல சுட்டிக்காட்டு



கொழும்பு, ஜுன் 08

அரசியலமைப்பின் 21ஆவது திருத்தம் தொடர்பில் அனைவரினதும் ஆதரவைப் பெறுவது கடினம் என அமைச்சரவை இணைப் பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அரசியலமைப்பின் 21ஆவது திருத்தம் குறித்து அடுத்த வாரம் அமைச்சரவையில் விவாதிக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆளுங்கட்சிக் கூட்டத்திலும் இது தொடர்பில் கலந்துரையாடப்பட்டதாகவும் அங்கு பல்வேறு கருத்துக்கள் வெளியிடப்பட்டதாகவும் அமைச்சர் மேலும் கூறினார். (அ)

# யூரியா உரக் கொள்வனவு; அமைச்சரவை அங்கீகாரம்

கொழும்பு, ஜுன் 08

பெரும் போக செய்கைக்கான யூரியா உரத்தை கொள்வனவு செய்வதற்காக, இந்திய ஏற்றுமதி இறக்குமதி வங்கியிடம் இருந்து 55 மில்லியன் அமெரிக்க டொலர் கடனைப் பெறுவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இதன்படி பெரும் போகச் செய்கைக்கு தேவையான யூரியா உரம் குறித்த கடன் தொகையை பயன்படுத்தி இறக்குமதி செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுவதாக அமைச்சரவை பேச்சாளர் பந்துல குணவர்தன தெரிவித்தார். (அ)

# 10 மில்லியன் ரூபா பெறுமதியான சரீர பிணையில் கப்ரால் விடுதலை

கொழும்பு, ஜுன் 08

மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் 10 மில்லியன் ரூபா பெறுமதியான சரீரப் பிணையில் விடுதலை செய்யப்பட்டார்.

தினியாவில பாலித தேரர் செய்த தனிப்பட்ட முறைப்பாட்டையடுத்து இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

அஜித் நிவார்ட் கப்ரால் நீதிமன்றத்தில் நேற்று கோட்டை நீதிமன்றத்தில் ஆஜராகியதை அடுத்து அவர் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

65 மில்லியன் அமெரிக்க டொலரை முறைக்கேடாக பயன்படுத்தினார் எனக் அவருக்கு எதிராக குற்றஞ்சாட்டப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# ஆயுதம் தாங்கிய படையினர் நாடு முழுவதும் கடமையில்



கொழும்பு, ஜுன் 08

நாடு முழுவதும் ஆயுதம் தாங்கிய படையினரை கடமையில் ஈடுபடுத்துமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உத்தரவு பிறப்பித்துள்ளார்.

பொதுப் பாதுகாப்புச் சட்டத்தின் 12ஆவது பிரிவின் 40 ஆவது அதிகாரத்துக்கு அமைவாகவே ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

ஜனாதிபதியினால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு தொடர்பாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன நேற்று செவ்வாய்க்கிழமை காலை பாராளுமன்றத்துக்கு அறிவித்தார். (அ)

# கொழும்பு துறைமுக நகரத்தில் முதலிடுவோருக்கு வரிச் சலுகை

கொழும்பு, ஜுன் 08

கொழும்பு துறைமுக நகரத்தில் முதலீடு செய்யும் முதலீட்டாளர்களுக்கு 40 வருடங்கள் வரை வரிச் சலுகை வழங்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அமைச்சர் பந்துல குணவர்தன இதனைத் தெரிவித்தார்.

முதலீட்டாளர்களை கவரும் வகையில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

கொழும்பு துறைமுக நகரத்துக்கு பெறப்பட்ட வெளிநாட்டு முதலீடு ஒரு பில்லியன் டொலர்கள் என்பதுடன், இலங்கையில் ஒரு திட்டத்திற்காக பெறப்பட்ட அதிகூடிய வெளிநாட்டு முதலீடு இதுவென்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# நிமலை நீக்க முடியாது!

கொழும்பு, ஜுன் 08

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பதவிகளில் இருந்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவை நீக்குவதற்கு கொழும்பு மாவட்ட நீதிமன்றம் இடைக்கால தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.

நிமல் சிறிபால டி சில்வா சார்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவை பரிசீலித்த கொழும்பு மாவட்ட நீதிமன்றம் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.

மேலும் இந்த இடைக்கால தடை எதிர்வரும் 20 ஆம் திகதி வரை அமுலில் இருக்கும் என்றும் அந்த உத்தரவில் கூறப்பட்டுள்ளது. (அ)

# செப்ரெம்பர் மாதம் வரை அரிசி கையிருப்பில் உண்டு



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற ஆளும் கட்சிப் பிரதிநிதிகள் குழு கூட்டத்தில் பிரதமர் ரணில் விக்ரமசிங்க, முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் அரசாங்க அமைச்சர்கள் பலர் கலந்துகொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

கொழும்பு, ஜுன் 08

நாட்டில் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் வரை அரிசி கையிருப்பில் உள்ளதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

அரிசி தட்டுப்பாடு ஏற்பட்டால் எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்துக்கு பின்னர் அது ஏற்படும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

நேற்று முன் தினம் நடைபெற்ற ஆளும் கட்சிக் குழுக் கூட்டத்திலேயே அவர் இதனை தெரிவித்தார்.

அறுவடை போதுமானதாக இல்லாவிட்டால் அரிசியை இறக்குமதி செய்ய வேண்டியிருக்கும் எனவும் அமைச்சர் கூறினார்.

# மின்வெட்டு நேரத்தில் மாற்றம்

கொழும்பு, ஜுன். 08

தற்போது அமுல்படுத்தப்படும் மின்வெட்டில் சில மாற்றங்களைச் செய்வதற்கு முன்மொழியப்பட்டுள்ளதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

அதன்படி, மூன்று நாட்களுக்கு ஒருமுறை காலை அல்லது இரவில் இரண்டு மணி நேரம் 15 நிமிடம் மாத்திரம் மின்வெட்டு அமுல்படுத்தவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

தடையில்லா மின்சாரம் வழங்குவதற்கான திட்டம் தயாரிக்கப்பட்டு வருவதாகவும் மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் கூறினார். (அ)

# அக்கரபத்தனையில் 2 யுவதிகள் மாயம்!

கொழும்பு, ஜுன் 018

விறகு தேடச் சென்ற இரண்டு யுவதிகளை கடந்த 06 நாட்களாக காணவில்லை என அக்கரபத்தனை பொலிஸ் நிலையத்தில் முறைபாடு செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு காணாமல் போனவர்கள் அக்கரப்பத்தனை சென்மார்கட் தோட்டத்தில் வசிக்கும் சிவக்குமார் ரூபிகா (வயது-15), சிவலிங்கம் ஸ்ரீதேவி (வயது-18) ஆகிய இரண்டு யுவதிகள் என பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த 2ஆம் திகதி முற்பகல் 11 மணியளவில் வீட்டில் இருந்து விறகு சேர்க்கச் சென்றவர்கள் மீண்டும் வீடு திரும்பவில்லை என்றும், இதுவரை இவர்களை கண்டுபிடிக்க முடியவில்லை என்றும் குடும்பத்தினர் தெரிவித்தனர்.

இவர்களின் தாய், தந்தையர்கள் மற்றும் உறவினர்கள் கொழும்பு உட்பட சகல இடங்களிலும் தேடிய போதிலும், இதுவரை கிடைக்கவில்லை. அக்கரப்பத்தனை பொலிஸ் அதிகாரிகள் தொடர்ந்து தேடும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த யுவதிகள் தொடர்பான தகவல்கள் இதுவரை கிடைக்காத காரணத்தினால் தோட்டத்தில் உள்ள பொது மக்கள் தொடர்ந்து வேலைக்கு செல்லாமல் இருக்கின்றனர். அத்தோடு, குறித்த 2 யுவதிகளும் தோட்டத்தில் தொழிலாளியாக தொழில் செய்து வந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# அறிவார்ந்த தலைமுறையினர் நாட்டைவிட்டு வெளியேற்றம்!

### சஜித் பிரேமதாஸ கவலை



கொழும்பு, ஜுன். 08

இலங்கையின் அறிவார்ந்த தலைமுறை நாட்டை விட்டு வெளியேறிக் கொண்டிருப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கவலை வெளியிட்டுள்ளார்.

விமான சேவைகள் நிறுவனங்களின் பங்குதாரர்கள் உள்ளிட்ட பிரதிநிதிகள் குழுவிற்கும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவிற்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்று முன் தினம் திங்கட்கிழமை மாலை கொழும்பில் உள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்றது.

அங்கு கருத்து வெளியிட்ட சஜித்-

இன்று மக்கள் வாழ்வதற்கான உரிமையைக்கூட மக்கள் இழந்துள்ளனர். பெருமளவான மக்கள் நாட்டை விட்டு வெளியேறி வருகின்றனர்.

அதிலும் குறிப்பாக நமது நாட்டின் அறிவார்ந்த இளைய தலைமுறை நாட்டை விட்டு வெளியேறும் நிலை ஏற்பட்டுள்ளது அதன் காரணமாக புத்திசாலிகள் குறைந்த சமூகமொன்று விரைவில் உருவாகும் சாத்தியம் உள்ளது.

தேசிய அபிவிருத்தி வேலைத்திட்டம் மற்றும் அது சார்ந்த செயல்பாட்டு வரைபடம் உரிய கால எல்லையுடன் நடைமுறைப்படுத்தப்படும் வரை எமது நாட்டை கட்டியெழுப்ப முடியாது.

அதற்கு புதிய மக்கள் ஆணையுடன் நிலையான அரசாங்கமொன்று தேவை. அவ்வாறு செய்யாமல் மக்களை ஏமாற்றிய வண்ணம் இந் நாட்டை கட்டியெழுப்ப முடியாது - என்றார்.

(அ)

# பாராளுமன்ற தேநீர்ச்சாலையில் உணவுப்பொருள் விலை உயர்வு



கொழும்பு, ஜுன். 08

பாராளுமன்ற சிற்றுண்டிச் சாலைகளில் உணவுப் பொருட் களின் விலைகளை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றைய பாராளுமன்ற அமர்வின்போது சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தன இந்த அறிவிப்பை விடுத்துள்ளார்.

குறைந்தபட்ச விலையில் உணவுப் பொதியை வழங்கு மாறு 50 பாராளுமன்ற உறுப்பி னர்கள் கோரிக்கை முன்வைத் துள்ளனர்.

இந்த நிலையில் குறித்த கோரிக்கை தொடர்பில் சபைக் குழுவில் தீர்மானம் எடுக்கப் படும் எனவும் சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தன குறிப்பிட்டார். (அ)

# கடற்படை முகாமுக்காக காணி சுவீகரிக்க முயற்சி

### வட்டுவாகலில் மக்கள் போராட்டம்



முல்லைத்தீவு, ஜுன். 08

வட்டுவாகல் கோட்டாபய கடற்படை முகாமுக்காக பொதுமக்களின் காணிகளை சுவீகரிக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டு, மக்களின் எதிர்ப்பால் கைவிடப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு வட்டுவாகல் பகுதியில் பொதுமக்களின் காணிகளில் அமைந்துள்ள கோட்டாபய கடற்படை முகாமுக்கு காணிகளை நிரந்தரமாக சுவீகரிப்பதற்கு நில அளவை திணைக்களத்தினரால் நேற்று மேற்கொள்ளப்பட்ட முயற்சி காணி உரிமையாளர்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகளின் எதிர்ப்பால் கைவிடப்பட்டது.

கடந்த சில வருடங்களாக வட்டுவாகல் பகுதியில் கடற்படை முகாம் அமைந்துள்ள 617 ஏக்கர் தமிழ் மக்களுக்கு சொந்தமான காணிகளை கடற்படை முகாமுக்கு நிரந்தரமாக சுவீகரிப்பதற்கு பல்வேறு சந்தர்ப்பங்களில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

இவ்வாறு நில அளவை திணைக்களத்தினரின் ஒத்துழைப்போடு அளவீடு செய்து காணி சுவீகரிப்புக்கு கடற்படையினரால் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளை மக்கள் தமது எதிர்ப்புப் போராட்டங்களால் முறியடித்துள்ளனர்.

இந்த நிலையில் நேற்று காணிகளை சுவீகரிப்பதற்காக நில அளவைத் திணைக்களம் மற்றும் கடற்படையினர் இணைந்து முயற்சிகளை மேற்கொண்டிருந்த நிலையில் காணி உரிமையாளர்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் நில அளவைத் திணைக்கள வாகனத்தை கடற்படை முகாமுக்குள் செல்லவிடாது கடற்படை முகாம் முன்பாக போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் அளவீட்டு முயற்சிகள் தடுக்கப்பட்டன.

இதனையடுத்து, காணி உரிமையாளர்களில் 15 பேர் தமது காணிகளை கடற்படை முகாமின் தேவைக்காக வழங்க முன்வந்திருப்பதாகவும் அதனையே அளவீடு செய்யவே வந்திருப்பதாகவும் நில அளவையாளர் எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்களுக்கு தெரிவித்துள்ளார்.

காணிகளை வழங்க முன்வந்தவர்கள் என தென்பகுதியை சேர்ந்த மூன்று காணி உரிமையாளர்கள் அங்கு வருகை தந்திருந்தனர். இருப்பினும் 15 பேர் காணிகளை வழங்க முன்வந்திருப்பதாக நில அளவை அதிகாரி தெரிவித்திருந்தமைக்கமைய ஏனைய எவரும் அவ்வேளையில் அங்கு வருகை தரவில்லை .

இதனையடுத்து, 15 பேர் காணி வழங்க முன் வந்திருப்பின் அதே பகுதியில் எமது காணிகளும் கடற்படையினரால் வேலி போட்டு மறித்து அடைக்கப்பட்டுள்ளது.

எனவே கடற்படை முகாமுக்கு காணி வழங்க முன்வந்தவர்களுக்கு காணிகளை அளவீடு செய்து வழங்குவதற்கு முன் கடற் படையினரால் கையகப்படுத் தப்பட்டுள்ள எமக்குரிய காணி களையும் அடையாளப்படுத்தி அளவீடு செய்து எமக்கு வழங்கி விட்டு கடற்படை முகாமுக்கு காணி வழங்க முன் வந்தவர் களின் காணிகளை அளவீடு செய்யுமாறு எதிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டிருந்த மக்கள் நில அளவையாளரிடம் தெரிவித்தனர்.

இதனையடுத்து மக்களின் கோரிக்கையை ஏற்று கடிதம் ஒன்று கையொப்பமிட்டு வழங்கியதையடுத்து நில அளவையாளர்கள் திரும்பி சென்றனர்.

நில அளவீட்டு பணிகளுக்கு எதிர்ப்பை தெரிவித்து மக்கள் போராட்டம் மேற்கொண்ட போது அப்பகுதியில் கடமையிலிருந்த பொலிஸார் பொதுமக்களுக்கு இடையூறுகளை ஏற்படுத்தியதுடன், புலனாய்வாளர்கள் , கடற்படையினர் மற்றும் தென்பகுதியிலிருந்து வருகைதந்தவர்கள் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்ட மக்களை தொலைபேசியில் புகைப்படம் எடுத்து அச்சுறுத்தும் வகையில் நடந்துகொண்டுள்ளனர் என தெரிவிக்கப்பட்டது.

இந்த எதிர்ப்புப் போராட்டத்தில் முன்னாள் மாகாண சபை உறுப்பினர்களான ரவிகரன் மற்றும் சிவநேசன், பிரதேச சபை உறுப்பினர்கள் பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# அபாய நிலையில் நாடு!

### மக்களுக்கு பொலிஸார் எச்சரிக்கை

கொழும்பு, ஜுன். 08

இலங்கை முழுவதும் மோசமான நிலைமை ஏற்பட்டுள்ளமையினால் மக்கள் அவதானமாக இருக்க வேண்டும் என பொலிஸார் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

ஒவ்வொரு பகுதிகளிலும் பொலிஸார் ஒலிபெருக்கி ஊடாக பொதுமக்களை எச்சரிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

அதற்கமைய வீடுகளில் இருக்கும் மக்கள் கதவு, ஜன்னல்களை பூட்டிவிட்டு வீட்டிற்குள் அவதானமாக இருக்குமாறு பொலிஸார் கேட்டுள்ளனர்.

அத்துடன் வாகனங்கள் தொடர்பிலும் அவதானமாக இருக்குமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

- வெளிநபர்களை வீடுகளுக்குள் அனுமதிக்க வேண்டாம்.

- உதவி கேட்டு, மின்சார தடை தொடர்பில், அல்லது அதிகாரிகள் என கூறி வீடுகளுக்கு வரும் நபர்கள் தொடர்பில் அவதானமாக இருங்கள்.

- நகைகள் அல்லது பெறுமதியான பொருட்களுடன் வெளியே நடமாடுவதனை தவிர்க்கவேண்டும்.

- இரவு நேரத்தில் வீடுகளின் பாதுகாப்பை உறுதி செய்து கொள்ளுங்கள்.

- கையடக்க தொலைபேசியின் ஈ.எம்.ஐ இலக்கத்தை பதிவு செய்து வைத்துக் கொள்ளுங்கள்.

- வெளிநாட்டில் இருந்து வந்த நபர்கள் அவதானமாக இருங்கள்.

- உங்களுக்கு பெறுமதியான பரிசு வெளிநாட்டில் இருந்து வந்துள்ளதாக கூறி வரும் நபர்களை வீட்டிற்குள் அனுமதிக்க வேண்டாம்.

- பஸ்களில் புதிய நபர்கள் பழக்கம் ஏற்படுத்த முயற்சித்தால் அதனை தவிர்த்துக் கொள்ளுங்கள்.

- பஸ்ஸில் பைகள் வழங்கினால் பெற்றுக் கொள்வதனை தவிர்த்து அவதானமாக இருங்கள்.

- நீங்கள் ஏமாற்றப்படலாம். ஏமாற்றுக்காரர்களினால் குறிவைக்கப்படலாம் என பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (அ)

# நல்லாட்சி அரசின் கொள்கை; ஏற்றுக்கொண்டுள்ளது மொட்டு

### பாராளுமன்றில் கூறினார் கிரியெல்ல



கொழும்பு, ஜுன். 08

மொட்டு ஏற்றுக்கொண்ட நல்லாட்சியின் நிர்வாகத்தை இன்று மொட்டு கட்சி ஏற்றுக்கொண்டுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல இந்த கருத்தை வெளியிட்டார்.

இந்தநிலையில் நாட்டுக்கு டொலர் தேவை என்று பிரதமர் தமது உரையில் கூறியபோதும் அந்த டொலர்களை எவ்வாறு பெற்றுக்கொள்வது என்பதை அவர் கூறவில்லை என்று கிரியெல்ல சுட்டிக்காட்டினார்.

இலங்கையை பொறுத்தவரை இன்று வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்களின் நம்பிக்கையைக் கூட பெற்றுக்கொள்ளமுடியவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, கோட்டாபய இருக்கும் வரை சர்வதேசத்தின் நம்பிக்கையை வெற்றி கொள்ள முடியாது என்றும் கிரியெல்ல தெரிவித்தார்.

கிரியெல்லயின் உரைக்கு பதிலளித்த ரணில் விக்கிரமசிங்க, டொலர்களை சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்தே பெற்றுக்கொள்ளமுடியும் என்று குறிப்பிட்டார்.

அதுவரை இந்தியா போன்ற நாடுகளிடம் இருந்தே டொலர்களை பெற்றுக்கொள்ள வேண்டியுள்ளது. இதனை தவிர, ஜப்பான், சீனா உட்பட்ட நாடுகளை கொண்ட மாநாட்டை கூட்டி டொலர் பிரச்னைக்கு தீர்வு காணவேண்டியிருக்கும் என்றும் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். (அ)



# சிறிலங்காவை வங்குரோத்தாக்கும் அமைச்சுக்களின் வாடகை கட்டணங்கள்!

**- தயாசீலி லியனகே**

தனியார் வாடகைக் கட்டடங்களில் இயங்கும் அமைச்சுக்களுக்கான மாதாந்த வாடகை 200 மில்லியன் ரூபாவாகும். அமைச்சுக்கள், அரச அமைச்சுக்கள் மற்றும் அரச நிறுவனங்களின் பராமரிப்புக்காக மாதாந்தம் 200 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமான வாடகையாக தனியார் கட்டடங்களில் செலுத்த வேண்டியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

காலத்துக்கு காலம் நாட்டை ஆளும் அரசியல்வாதிகளுக்கு கட்டட வாடகை மாறுபடும். எதிர்பாராத கொள்கைப் பிளவுகளாலும், புதிய அமைச்சுக்களின் உருவாக்கத்தாலும், அரச கட்டடங்களுக்குப் பதிலாக தனியார் கட்டடங்களுக்கு இடமாற்றம் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

கோட்டாபய-மகிந்த அரசாங்கம் 23 அமைச்சர்களையும் 39 இராஜாங்க அமைச்சர்களையும் நியமித்தது. அனைத்து 39 இராஜாங்க அமைச்சர்களுக்கும் அமைச்சகங்களை இயக்க கட்டடங்கள் தேவைப்பட்டன. அரசாங்க கட்டடங்கள் தவிர, அமைச்சுக்களும் வாடகைக்கு எடுக்கப்பட்ட தனியார் கட்டடங்களில் நடத்த வேண்டியிருந்தது.

தற்போது நாடு கடுமையான நிதி நெருக்கடியை சந்தித்து வருகிறது. செலவுத் தொகைக்கான பணத்தை அமைச்சினால் வழங்க முடியாத நிலை உள்ளது. அரசு பணியாளர்கள் மற்றும் ஓய்வு பெற்றவர்களுக்கு சம்பளம் வழங்க ஒரு டிரில்லியன் ருபாக்களை அச்சிட வேண்டியிருந்தது. நாடு மிகவும் வெற்றிடமாக உள்ளது. எதிர்காலம் முற்றிலும் இருண்டுள்ளது.

ஆனால், அந்தத் தீவிரம் இன்னும் பெரும்பான்மையான அரசு அதிகாரிகளும், அமைச்சர்களும் உணர்ந்ததாகத் தெரியவில்லை.

நிதியமைச்சகம் கடந்த ஏப்ரல் மாதம் 26 ஆம் நாள் சுற்றறிக்கை வெளியிட்டு, பொதுச் செலவீனங்களை அத்தியாவசிய சேவைகளுக்கு மட்டுமே பயன்படுத்த முடியும் என்று கடுமையாகக் கட்டுப்படுத்த வேண்டும் என்று தெரிவித்துள்ளது.

சிறிலங்காவின் பொருளாதாரம் ஒரு முக்கியமான கட்டத்தை எட்டியுள்ளது. அதேநேரம், பொது நிதியை பொறுப்புடனும் சிக்கனமாகவும் பயன்படுத்துவதன் மூலம் பொதுமக்களுக்கு மிகவும் திறமையான மற்றும் பயனுள்ள சேவையை வழங்க வேண்டிய அவசியம் எப்போதும் அதிக முக்கியத்துவம் வாய்ந்ததாக மாறியுள்ளது.

இந்த சவாலான சூழ்நிலையை கட்டுப்படுத்த, அரசின் செலவீனங்களை மிக அத்தியாவசிய சேவைகளுக்கு மட்டுமே பயன்படுத்தும் வகையில் கட்டுப்படுத்த வேண்டும். நாட்டில் நிலவும் கடுமையான பொருளாதார வீழ்ச்சியினால் செலவீனங்களைக் கட்டுப்படுத்துமாறு சுற்று நிருபங்கள் கூறப்பட்ட போதிலும் அரச நிறுவனங்களால் நடத்தப்படும் கட்டடங்களுக்கான வாடகை மாதாந்தம் 200 மில்லியன் ரூபாவாகும்.

இந்த அமைச்சுக்கள் வாடகைக் கட்டடங்களைப் பராமரித்தாலும் நாட்டுக்கும் மக்களுக்கும் ஒரு சதம் கூட சேவையாற்றும் நிறுவனங்கள் விரல் விட்டு எண்ணக்கூடிய அளவில் இல்லை என்று சொன்னால் நீங்கள் ஏற்றுக் கொள்வீர்கள். ஏற்கனவே பல அரசு நிறுவனங்கள் வாடகை கட்டடங்களில் இயங்கி வருகின்றன.

மத்திய கலாசார நிதியத்தினால் நடத்தப்படும் கட்டடத்திற்கு மாதாந்த வாடகையாக 1.3 மில்லியன் ரூபா செலுத்தப்படுகிறது. இந்த கட்டடம் பொது சேவை ஐக்கிய தாதியர் சங்கத்திற்கு சொந்தமானது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த சங்கத்தின் தலைவர் முருத்தெட்டுவே ஆனந்த தேரர் என்பது குறிப்பிடத்தக்கது.

தேசிய லொத்தர் சபையானது

> கோட்டாபய-மகிந்த அரசாங்கம் 23 அமைச்சர்களையும் 39 இராஜாங்க அமைச்சர்களையும் நியமித்தது. அனைத்து 39 இராஜாங்க அமைச்சர்களுக்கும் அமைச்சகங்களை இயக்க கட்டடங்கள் தேவைப்பட்டன. அரசாங்க கட்டடங்கள் தவிர, அமைச்சுக்களும் வாடகைக்கு எடுக்கப்பட்ட தனியார் கட்டடங்களில் நடத்த வேண்டியிருந்தது.

கொழும்பு கோட்டையில் உள்ள தனியார் கட்டடமொன்றில் இயங்கி வருகின்றதுடன் கட்டடத்திற்கான மாதாந்த வாடகை ரூபா 65 இலட்சம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. மருதானை டெக்னிக்கல் சந்தியில் உள்ள தனியார் கட்டடமொன்றில் சுகாதார அமைச்சின் கீழ் உள்ள சோதனை பிரிவு உட்பட பல பிரிவுகள் இயங்கி வருவதாகவும், அதற்காக சுமார் 2 மில்லியன் ரூபா மாதாந்த வாடகையாக செலுத்தப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

கொள்ளுப்பிட்டியில் உள்ள மின்வலு எரிசக்தி அமைச்சுக்கு மாதாந்தம் சுமார் 3 மில்லியன் ரூபா வழங்கப்படுகின்றது.

மேலும், ஆர்.ஏ.டி.மெல் மாவத்தையில் பராமரிக்கப்பட்டு வரும் சிறிலங்கா மின்சார சபையின் சிறிலங்கா நகர அலுவலகத்திற்காக கிட்டத்தட்ட 2 மில்லியன் ரூபா செலுத்தப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

சிறிலங்கா மின்சார சபை அமைந்துள்ள கொழும்பு கோட்டை கட்டடத்தில் இடப்பற்றாக்குறை காரணமாக நாரஹேன்பிட்டியில் புதிய கட்டடம் நிர்மாணிக்கும் பணிகள் தொடங்கப்பட்ட நிலையில் நிதி பற்றாக்குறை மற்றும் பல்வேறு காரணங்களால் நிர்மாணப் பணிகள் முடங்கியுள்ளன.

கொள்ளுப்பிட்டி புனித மைக்கேல் வீதியில் அமைந்துள்ள மலையக தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சுக்கு 2 மில்லியன் ரூபா வாடகையாக செலுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அரச நிறுவனங்களை பராமரிப்பதற்காக கோட்டையில் உள்ள உலக வர்த்தக மைய கட்டடத்திற்கு அதிக தொகையை செலுத்த வேண்டியுள்ளது. பிட்டு மூங்கில் என அழைக்கப்படும் இந்தக் கட்டடத்திற்கு மாதாந்தம் சுமார் 100 இலட்சம் ரூபா பணம் செலுத்தப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

உலக வர்த்தக மையம் அமைந்துள்ள கட்டடத்தில் சுற்றுலா அமைச்சகம், முதலீட்டு வாரியம், வானூர்தி போக்குவரத்து அமைச்சகம், தொடரூந்து அமைச்சகம், கரும்பு பித்தளை, களிமண், மரச்சாமான்கள் மற்றும் கிராமப்புற தொழில்களை மேம்படுத்துதல் போன்ற அரசு நிறுவனங்கள் உள்ளன.

10 தளங்களை முதலீட்டுச் சபை குத்தகைக்கு எடுத்துள்ளது மற்றும் பல அரசுக்கு சொந்தமான நிறுவனங்கள் உலக வர்த்தக மையத்தை விட்டு வெளியேற விருப்பம் தெரிவித்துள்ளதாக கூறப்படுகிறது.

ராஜகிரிய, புத்கமுவவில் தேசிய ஒருமைப்பாடு மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சு அமைந்துள்ள கட்டடத்திற்கான வாடகை 22 இலட்சம் ரூபாவாகும். கண்டி பேராதனை வீதியில் குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் கண்டி கிளை அமைந்துள்ள கட்டடத்திற்கான மாதாந்த வாடகை 800,000 என தெரிவிக்கப்படுகின்றது.

கண்டி மரபுரிமை அபிவிருத்தி நிறுவகம் அமைந்துள்ள கட்டடத் திற்கான வாடகை 10 இலட்சம் ரூபாவும், காணி பதிவாளர் அலுவலகத்தின் குண்டசாலை கிளை அமைந்துள்ள மூன்று மாடிக் கட்டடத்திற்கான மாதாந்த வாடகை 800,000 ரூபா எனவும் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது நாடாளுமன்ற அலுவல்கள் அமைச்சு இல்லாவிட்டாலும், பத்தரமுல்ல பெலவத்தையில் இன்னும் நாடாளுமன்ற அலுவல்கள் பிரிவு உள்ளது.

இந்த பிரிவின் கீழ் இயங்கும் கட்டடத்திற்கு மாதம் ஒன்றரை இலட்சம் ரூபா வாடகையாக உள்ளது. காணி அமைச்சின் மேலதிக செயலாளரினால் நடத்தப்படும் இந்த பிரிவில் 20 பணியாளர்கள் கடமையாற்றுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குத் தேவையான பொருட்கள் மற்றும் வரியில்லா உரிமம் வழங்குதல், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு பயிற்சி அளித்தல், சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை வழங்குதல் போன்றவற்றை மட்டுமே இந்தப் பிரிவு கையாள்வதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த அலுவலகத்தின் மின்சாரம், தண்ணீர் மற்றும் தொலைபேசி மற்றும் பராமரிப்பு ஆகியவை நாடாளுமன்றத்தால் செய்யப்படுகின்றன.

இராஜகிரிய ஜனஜெய கட்டடத்தில் மேல் மாகாண சபை பொதுச் சேவை ஆணைக்குழு மற்றும் கூட்டுறவு ஆணைக்குழு என்பன உருவாக்கப்பட்டுள்ளதுடன் மாதாந்த வாடகை ரூபா 2.5 மில்லியன் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(09 ஆம் பக்கம் பார்க்க...)

# மோடி எட்டு ஆண்டுகால ஆட்சி!

எட்டு ஆண்டுகளை நிறைவு செய்து ஒன்பதாவது ஆண்டில் அடியெடுத்து வைத்திருக்கிறது நரேந்திர மோடி அரசு. 2014-ஆம் ஆண்டு மே மாதம் 26-ஆம் திகதியும், இரண்டாவது முறையாக 2019-ஆம் ஆண்டு 30-ஆம் திகதியும் நரேந்திர மோடி பிரதமராக பதவி ஏற்றுக் கொண்டார்.

கடந்த எட்டு ஆண்டுகளில், தேசிய அளவிலும் சர்வதேச அளவிலும் உலகம் மிகக் கடினமான சூழலை எதிர்கொண்டபோதும், மிகச் சாதுரியமாக இந்தியாவை வழிநடத்தி அவர் வெற்றியடைந்திருக்கிறார் என்பதில் எள்ளளவும் யாருக்கும் சந்தேகம் இருக்க வழியில்லை.

நரேந்திர மோடி அரசு 2014-இல் ஆட்சிக்கு வந்தபோது தேசிய அளவில் மக்கள் மனதில் தன்னம்பிக்கை குன்றியிருந்தது என்பதையும், கடந்த எட்டு ஆண்டுகளில் இந்தியா ஒரு வல்லரசு நாடாகத் தன்னை வடிவமைத்துக் கொண்டு வருகிறது என்பதையும் மறுப்பதற்கில்லை.

உலக வரலாறு கண்டிராத கொள்ளை நோய்த்தொற்றை, மிகுந்த துணிச்சலுடனும், தன்னம்பிக்கையுடனும் நம்மால் எதிர்கொள்ள முடிந்தது என்கிற ஒரு காரணத்துக்காகவே பிரதமர் நரேந்திர மோடியையும் அவரது அரசையும் நாம் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

சர்வதேச அரங்கில் இந்தியா இதுவரை இல்லாத அளவிலான முக்கியத்துவம் பெற்றிருப்பதற்குப் பிரதமர் நரேந்திர மோடியின் அணுகுமுறைதான் காரணம். அமெரிக்காவின் தலைமையிலான க்வாடிலும் உறுப்பினராக இருந்துகொண்டு, ரஷ்யாவுடனும் நட்புறவு பேண முடியும் என்கிற 'அணிசேரா' ராஜதந்திரத்துக்காகவே பிரதமர் நரேந்திர மோடியை எத்துணை பாராட்டினாலும் தகும்.

நரேந்திர மோடி அரசின் மிகப் பெரிய வெற்றி, அவரது தலைமையிலான அமைச்சரவை அங்கத்தினர்கள் மீது கடந்த எட்டு ஆண்டுகளில் எந்தவித ஊழல் குற்றச்சாட்டையும் இதுவரை சுமத்த முடியவில்லை என்பதுதான். ரபேல் போர் விமானம் வாங்கியது தொடர்பாக எழுப்பப்பட்ட குற்றச்சாட்டுகள் இன்றுவரை நிரூபிக்கப்படவில்லை.

இதற்கு முன்பு பிரதமர்களாக இருந்தவர்களின் ஆட்சிகள் மீது எழுப்பப்பட்டது போன்ற ஊழல் குற்றச்சாட்டுகள் எதுவும் இவரது அரசின் மீதோ, அமைச்சர்கள் மீதோ இல்லாமல் இருந்திருப்பது, பிரதமர் நரேந்திர மோடியின் தலைமைப் பண்புக்கும், ஆளுமைத் திறனுக்குமான அடையாளமல்லாமல் வேறென்ன?

கடந்த எட்டாண்டு சாதனைகள் குறித்துப் பட்டியலிடவும் பெருமிதப்படவும் பிரதமர் நரேந்திர மோடிக்கு நிறையவே இருக்கின்றன. 'அனைவருடனும் அனைவருக்குமான ஆட்சி'



என்பதுடன், அவர் குறிப்பிடுவதுபோல, 'அனைவரின் நம்பிக்கையுடனும், அனைவரின் உழைப்புடனும்' முன்னெடுக்கப்படும் வளர்ச்சி இலக்குகள் இந்திய மக்களின் வாழ்க்கைத் தரத்தில் மிகப் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியிருக்கின்றன.

கடந்த எட்டாண்டுகளில் வறுமைக் கோட்டுக்குக் கீழே இருப்பவர்களின் அளவு 22வீதத்திலிருந்து 10 வீதத்திற்கு குறைந்திருக்கிறது. கடுமையான வறுமையில் இருப்பவர்களின் அளவு 1 வீதத்திற்கும் கீழே குறைந்திருக்கிறது. தனிநபர் வருவாய் இரட்டிப்பாகி இருக்கிறது. அந்நியச் செலாவணி இருப்பும் இரு மடங்காக உயர்ந்திருக்கிறது. புதிதாக 6,53,000 அரசுப்பள்ளிகள்கட்டப்பட்டிருக்கின்றன.

15 எய்ம்ஸ் மருத்துவமனைகள் அறிவிக்கப்பட்டு அவற்றில் 10 மருத்துவமனைகள் செயல்படத் தொடங்கி விட்டன. ஐந்து எய்ம்ஸ் மருத்துவமனைகள் இறுதிக்கட்ட நிலையில் இருக்கின்றன. இதுவைர இல்லாத வகையில் மருத்துவர்களின் எண்ணிக்கை 12 லட்சமாக அதிகரித்திருக்கிறது.

உலகிலேயே சாலைக் கட்டமைப்பில் இரண்டாவது இடத்திற்கு இந்தியா உயர்ந்திருக்கிறது. 2012 - 13-இல் இந்தியாவின் உணவு தானிய உற்பத்தி 25.5 கோடி தொன் என்றால், இப்போது (2021 - 22) அதுவே 31.6 கோடி தொன். இது ஒரு வரலாற்று சாதனை என்றால், ஏற்றுமதியிலும் 418 பில்லியன் டாலரை (சுமார் ரூ. 32.4 லட்சம் கோடி) எட்டி இந்திய சாதனை புரிந்திருக்கிறது.

கொள்ளை நோய்த்தொற்றை எதிர்கொள்ள இந்தியாவிலேயே தடுப் பூசிகள் தயாரித்ததும், கடந்த இரண்டாண்டுகளாக 80 கோடி இந்தியர்களுக்கு இலவச தானியங்கள் வழங்கியதும் நினைத்துப் பார்க்க முடியாத மிகப் பெரிய சாதனைகள்.

நமக்காக மட்டுமல்லாமல் நமது அண்டை நாடுகளுக்கும், பல வளர்ச்சியில் பின்தங்கிய நாடுகளுக்கும் நாம் தடுப்பூசிகள் வழங்கியபோது, வல்லரசு நாடுகளே நம்மை வியப்புடன் பார்த்தன. நமது மனிதாபிமானத்துக்கு உலகமே தலைவணங்கியது.

சாமானியர்களுக்கு இலவச மருத்துவக் காப்பீட்டுத் திட்டமும் (ஆயூஷ்மான் பாரத்), விவசாயிகள், கூலித் தொழிலாளர்களுக்கு மாத ஓய்வூதியமும், விவசாயிகளின் இடுபொருள் தேவைக்கான 'கிஸான் சம்மான்' உதவியும், இதற்கு முன்பு எந்தவொரு ஆட்சியும் கற்பனைகூடச் செய்யாத மக்கள் நலத்திட்டங்கள்.

அனைவருக்கும் வங்கிக் கணக்கு (ஜன் தன் யோஜனா) மூலம் மானியங்கள் இடைத்தரகர்களால் சுரண்டப்படாமல் பயனாளிகளை நேரில் சென்றடைய வழிகோலிய புத்திசாலித்தனமும், பத்து கோடிக்கும் அதிகமான வீடுகளில் கழிப்பறைகள் கட்டிக் கொடுக்கப்பட்ட முன்னெடுப்பும், ஒன்பது கோடிக்கும் அதிகமான எளிய குடும்பங்களுக்கு சமையல் எரிவாயு இணைப்புத் திட்டத்தின் மூலம் நிகழ்த்திய புரட்சியும் எட்டாண்டு வரலாற்று சாதனைகள்.

"நரேந்திர மோடி அரசு மதவாத அரசு என்று குற்றம்சாட்டுபவர்கள், மேலே குறிப்பிட்ட எந்தவொரு திட்டத்திலாவது, சமுதாயத்தின் எந்தவொரு பிரிவினராவது விடுபட்டிருக்கிறார்களா? அனைவருக்குமான வளர்ச்சியில் பாகுபாடு காட்டப்பட்டிருக்கிறதா? என்கிற கேள்விக்கு பதில் அளித்துவிட்டு மதவாத அரசு என்று குற்றம் சுமத்தட்டும்" என்கிற பாஜகவின் தேசியத் தலைவர் ஜே.பி. நட்டாவின் கருத்தை யாரால் மறுத்துவிட முடியும்?

காஷ்மீருக்குத் தனி அந்தஸ்து அகற்றப்பட்டது, அயோத்தியில் ராமர் கோயில் கட்டப்படுவது, முத்தலாக் முறையைத் தடை செய்தது, குடியுரிமை திருத்தச் சட்டம் ஆகியவை 'இந்துத்துவ' கொள்கைகள் அல்லவா என்று கேள்வி எழுப்பலாம். நீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையிலும், நாடாளுமன்ற அங்கீகாரத்தின் பின்னணியிலும்தான் அவை முன்னெடுக்கப்பட்டன என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

மக்கள் மன்றத்தின் அங்கீகாரம் பெற்று ஆட்சி அமைத்ததால் 'திராவிட மாடல்' ஆட்சி அமைவதுபோல, பாஜக தனது தேர்தல் வாக்குறுதிகளில் குறிப்பிட்ட திட்டங்களை செயல்படுத்தும்போது அதை விமர்சிக்க முற்படுவது என்ன நியாயம்? எந்தவொரு அரசியல் கட்சியும் தனது கொள்கைகளை நடைமுறைப்படுத்தவே, மக்கள் மன்றத்தின் அங்கீகாரத்தைப் பெற்று ஆட்சி அமைக்கிறது. அரசியல் சாசன வரம்புகள் மீறப்படாமல் அவற்றை நடைமுறைப்படுத்தினால் தவறுகாண முடியாது.

உத்தர பிரதேசத்தில் 60 வீதத்திற்கும் அதிகமான முஸ்லிம் சிறுபான்மையினர் உள்ள தொகுதி ஒன்றில் பாஜக வேட்பாளர் வெற்றி பெறுகிறார் எனும்போது, இது 'அனைவருடனும் அனைவருக்குமான வளர்ச்சி'யை வழங்கும் ஆட்சி என்பது உறுதியாகிறது. இதே நிலைமை தொடருமானால், ஜவாஹர்லால் நேருவுக்குப் பிறகு தொடர்ந்து மூன்று முறை பிரதமராகப் பதவி வகித்த பெருமைக்குரியவராக நரேந்திர மோடி வரலாற்றில் இடம்பெறக்கூடும். **(தினமணி)**

---

# சிறிலங்காவை வங்குரோத்தாக்கும் ....

(08 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

இராஜகிரிய சிறிஜயவர்தனபுர மாவத்தையில் வனஜீவராசிகள் மற்றும் வனவிலங்கு வளங்கள் அமைச்சினால் நடத்தப்படும் கட்டடத்திற்கான வாடகை 2 மில்லியன் ரூபா என தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறைச்சாலை மறுசீரமைப்பு, புனர்வாழ்வு, மீள்குடியேற்றம் மற்றும் இந்து சமய அலுவல்கள் அமைச்சுக்கான கட்டடம் ஒன்றின் அரசாங்க மதிப்பீடு 3 மில்லியன் ரூபாவாக இருந்த போதிலும், அது மாதாந்தம் 5,089,500 ரூபாவாக வாடகைக்கு விடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தேசிய கணக்கு தணிக்கை அலுவலகத்தின் கூற்றுப்படி, விலை பேசாமல் உரிமையாளர் வழங்கிய மதிப்பில் கட்டடத்தை வாடகைக்கு எடுத்ததற்காக மாதாந்தம் 20 மில்லியன் ரூபாய் கூடுதலாக செலுத்த வேண்டியிருந்தது.

அமைச்சையும் அந்த அமைச்சின் கீழ் உள்ள அனைத்து நிறுவனங்களையும் ஒரே கூரையின் கீழ் கொண்டு வரும் நோக்கத்தில் இந்தக் கட்டடம் வாடகைக்கு எடுக்கப்பட்டது.

ஏனைய அரச அமைச்சுக்களில் பெரும்பாலானவை செத்சிறிபாய, சுஹுருபாய, சோபாதம் பியச, கோவிஜன மந்திரயா போன்ற இடங்களில் அமைந்துள்ளன.

வாடகைக் கட்டடங்களில் இயங்கும் பல அரச நிறுவனங்கள் அரசியல்வாதிகள் அல்லது அவர்களது கூட்டாளிகளுடன் தொடர்புபட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. மேலும், மதிப்பிடப்பட்ட மதிப்பு புறக்கணிக்கப்பட்டுள்ளதாக தெரியவந் துள்ளது.

அமைச்சுக்களை பராமரிக்க கட்டடங்களை குத்தகைக்கு விடுவது தொடர்பில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்திய சம்பவம் இங்கு குறிப்பிடத்தக்கது.

விவசாய அமைச்சு அமைந்துள்ள பத்தரமுல்லையில் உள்ள கோவிஜன மந்திரயத்தை கையகப்படுத்தி நாடாளுமன்ற கண்காணிப்புக் குழுக்களுக்கு ஏற்ற வகையில் நாடாளுமன்ற மேற்பார்வைக் குழுக்களைப் பேணுவதாகக் கூறி பாரியளவிலான பணம் செலவிடப்பட்டதை நினைவு கூருகின்றோம்.

நல்லாட்சி அரசாங்க காலத்தில் ராஜகிரிய, இலக்கம் 288 இல் உள்ள தனியார் கட்டடம் விவசாய அமைச்சுக்காக வாடகைக்கு விடப்பட்டிருந்தது.


இந்தக் கட்டடத்திற்கான வாடகை மாதாந்தம் 13.5 மில்லியன் ரூபாவாக மதிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், மாதத்திற்கு 21 மில்லியன் ரூபா வாடகையாக செலுத்தப்பட்டுள்ளது. 24 மாதங்களுக்கு முன்பணமாக 504 மில்லியன் செலுத்தப்பட்டுள்ளது. கணக்காய்வு பிரிவின் படி, இந்த கட்டடத்திற்கு 1524.44 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது.

தற்போது, கட்டடத்தில் இருந்து அரசு நிறுவனங்கள் அகற்றப்பட்டுள்ளன என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (லங்காதீப)

# புலமைச் சிகரம்

## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

**18)** 

i) இத் திண்ம உருவில் எத்தனை முகங்கள் உள்ளன? ................................

ii) இத் திண்ம உருவில் எத்தனை உச்சிகள் உள்ளன? ................................

**19)**  நிறந் தீட்டப்பட்ட பகுதியைப் பின்னமாக எழுதுக.

..........................................

**20)** தரப்பட்ட எண் கோலங்களில் அடுத்துவரும் எண்ணை எழுதுக.

i) 122 , 124 , 126 , ............. , ...........   ii) 18 , 15 , 12 , ............. , ...........

**21)** | 3, 9, 14, 6, 10, 12, | பெட்டிக்குள் உள்ள எண்களில் மூன்றின் மடங்குகளைத் தெரிவு செய்து ஒழுங்கு முறையில் எழுதுக.

.....................................................................

**22)** ஒரு பழக்கூடையில் 620 அப்பிள் பழங்களும் 125 மாம்பழங்களும் உண்டு. கூடையில் உள்ள மொத்தப் பழங்களின் எண்ணிக்கையை எழுதுக.

.....................................................................................

**23)** ஒரு கிளையில் 480 பூக்கள் மலர்ந்திருந்தன. அவற்றில் 25 பூக்களைப் பறித்தெடுத்தால் கிளையில் எஞ்சியிருக்கும் பூக்களின் எண்ணிக்கை யாது?

...................................................................

**24)** பழப்பாகுப் போத்தல் ஒன்றில் 3*l* 300*ml* பானம் அடங்கியுள்ளது. அதனை 3 மாணவர்களிடையே சமமாகப் பகிரப்பட்டதெனின் ஒருவருக்குக் கிடைத்த பான அளவு யாது?

...................................................................

**25)** 500g சீனியின் விலை ரூபா 48.00 எனின் 1500g சீனியின் விலை யாது? ..................................................

**26)** **பின்வரும் சிட்டையைப் பூரணப்படுத்துக.**

| பொருள் | வாங்கிய அளவு | ஒரு கிலோகிராமின் விலை | | பெறுமதி | |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | சதம் | ரூபா | சதம் |
| பருப்பு | 2kg | 95 | 00 i) | ............ | ......... |
| தேயிலை | 500g | 200 | 00 ii) | ............ | ......... |
| | | மொத்தப்பணம் | | ............ | ......... |

**27)** கடிகார முகத்தில் பி.ப. 3.30 மணி காட்டுகின்றது. கடிகாரம் காட்டும் நேரத்தை நியம நேரத்தில் எழுதுக.

.......................................................

**28)** 8m 50cm நீளமான துணியில் 3m துணி வெட்டி எடுக்கப்பட்டது எனின் எஞ்சியிருக்கும் துணியின் நீளம் யாது?

**28)** 8m 50cm நீளமான துணியில் 3m துணி வெட்டி எடுக்கப்பட்டது எனின் எஞ்சியிருக்கும் துணியின் நீளம் யாது?



.......................................................

**29)** ஒரு பூங்கொத்தில் மூன்று பூக்கள் வீதம் 12 பூங்கொத்துக்களில் எத்தனை பூக்கள் உள்ளன?

.......................................................   (30 புள்ளிகள்)

❖ **இலக்கம் 30 தொடக்கம் 59 வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான விடையைத் தெ செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

**30)** சூரிய நமஸ்காரத்தின் நான்காம் படிநிலை எது?

1)    2)    3) 

**31)** வடமாகாணத்தில் அமைந்துள்ள குளம்
1) அபயவாவி   2) இரணைமடுக்குளம்   3) பராக்கிரமபாகு சமுத்திரம்

**32)** உள் மூச்சு வாங்குதல் வெளி மூச்சு விடுதல் என்பது மனதை ஒருநிலைப்படுத்தும் செயற்பாட்ட எந்த படிமுறை ஆகும்?
1) திடசித்தம்   2) உதிப்பு   3) உடலைத் தளர்த்தல்

**33)** தேசிய இலச்சினையின் பூவிதழ் வட்டத்தின் மத்தியில் இருப்பது எது?
1) சூரியன்   2) வாளேந்திய சிங்கம்   3) நெற்கதிர்

**34)** பிரித்தானியர்களால் முழுமையாக இலங்கை கைப்பற்றப்பட்ட ஆண்டு எது?
1) 1976   2) 1851   3) 1815

**35)** வருடத்தின் முதல் மாதமும் இறுதி மாதமும் பூக்கும் பூக்கள் எவை?
1) இறப்பர், வேம்பு   2) இறப்பர், தாழம்பூ   3) பிறைப்பூ, நாவல்

## விடைகள்

**18.** 1) 6   2) 8   **19.** $\frac{3}{10}$
**20.** 1) 128, 130   2) 9, 6
**21.** 3, 6, 9, 12
**22.** 745   **23.** 455
**24.** 1l 100ml / 1100ml   **25.** ரூபாய் 144.00
**26.** 1) 190   2) 100   3) 290
**27.** 15 : 30   **28.** 5m 50cm / 550cm
**29.** 36 பூக்கள்
**30.** 1   **31.** 2   **32.** 3
**33.** 2   **34.** 3   **35.** 2

### கல்வி tv CHANNEL-1

**01.06.2022**
**புதன்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | விஞ்ஞானம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | புவியியல் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | புவியியல் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | தமிழ் இலக்கியம் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast கணிதம் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மாதிரி வினாத்தாள் |
| | மறு ஒளிபரப்பு | மறுஒளிபரப்பு-LIVE கணிதம் |
| | | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| | | மாதிரி வினாத்தாள் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 04.30 | தரம்-10 | புவியியல் |

### கல்வி tv CHANNEL - 2

**01.06.2022**
**புதன்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | தமிழ் |
| 09.00 | தரம்-02 | சமயம் |
| 09.45 | தரம்-03 | தமிழ் |
| 10.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 11.15 | தரம்-04 | தமிழ் |
| 12.30 | தரம்-04 | Computer |
| 01.15 | தரம்-05 | தமிழ் |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | சமயம் |
| 06.00 | தரம்-03 | தமிழ் |
| 06.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 07.30 | தரம்-04 | தமிழ் |
| 08.15 | தரம்-04 | Computer |
| 09.00 | தரம்-05 | தமிழ் |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி-paper |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | தமிழ் |
| 12.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 01.15 | தரம்-04 | தமிழ் |
| 02.00 | தரம்-04 | Computer |
| 02.45 | தரம்-05 | தமிழ் |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# தொழிற் பயிற்சி நிலையத்தில் புதிய பாடநெறிகள் ஆரம்பம்



அம்பாறை, ஜூன்.08

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின், சாய்ந்தமருது தொழிற் பயிற்சி நிலையத்தில் புதிய கல்வி ஆண்டுகான பாடநெறிகள் நேற்று முன் தினம் திங்கட்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டன.

நிலையப் பொறுப்பதிகாரி எம்.ரி.எம். ஹாரூன் தலைமையில் இடம்பெற்ற அங்குரார்ப்பண நிகழ்வில், தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் கிழக்கு மாகாண பணிமனையின் நிர்வாக உத்தியோகத்தர் எம்.தியாகராஜா பிரதம அதிதியாக கலந்துகொண்டார்.

இதன்போது, குறித்த பாடநெறிகளுக்கு அனுமதி பெற்றுள்ள மாணவர்களுக்கு தேவையான அறிவுறுத்தல்ளும், ஆலோசனைகளும் வழங்கப்பட்டன.

காலத்தை வீணடிக்காமல் உரிய காலப்பகுதிக்குள் அவரவர் இணைந்துள்ள பாடநெறியை மிகவும் ஆர்வத்துடன் சிறப்பாக பூர்த்தி செய்து, சான்றிதழைப் பெற்றுக்கொள்வதில் முனைப்புக்காட்ட வேண்டும் என வலியுறுத்தப்பட்டது.

பொருளாதார நெருக்கடி நிறைந்த இக்காலகட்டத்தில் இப்பயிற்சி நெறிககளை வெற்றிகரமாக பூர்த்தி செய்து, தொழிற் தகைமையை பெற்றுக்கொள்வதன் மூலம் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் தொழிற் சந்தையில் நல்ல வருமானத்தை ஈட்டக்கூடிய தொழில் வாய்ப்புகளை இலகுவாக பெற்றுக் கொள்ள முடியுமாக இருக்கும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டது.

இங்கு ஆங்கிலம், சிங்களம், தகவல் தொழில்நுட்பம், இணையத்தள வடிவமைப்பு, கையடக்கத் தொலைபேசி திருத்தம் உள்ளிட்ட பாடநெறி கள் ஆரம்பித்து வைக்கப்பட் டன.

இம்முறை இப்பாடநெறிகளைப் பயில்வதற்காக 242 பேர் அனுமதிக்கப்பட்டிருக்கின்றனர் என நிலையப் பொறுப்பதிகாரி எம்.ரி.எம். ஹாரூன் தெரிவித்தார். (அ)

# தமிழ்நாட்டு அரசின் நிவாரணம் கிழக்கில் விநியோகம் ஆரம்பம்

**மட்டக்களப்பு, ஜூன்.08**

**தமிழ் நாட்டிலிருந்து அன்பளிப்பாக கிடைக்கப் பெற்ற உலர் உணவுப் பொதிகளை வழங்கும் நிகழ்வுகள் மண்முனைப்பற்று பிரதேச செயலப் பிரிவில் நேற்று முன் தினம் முதல் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.**




மட்டக்களப்பு மாவட்டத்திற்கென முதற்கட்டமாக வழங்கப்பட்டுள்ள 50000 பைக்கெற் அரிசி மற்றும் 3750 பைக்கெற் பால்மா என்பன வற்றை மாவட்டத்தின் 14 பிரதேச செயலகப் பிரிவுக்கும் முன்னுரிமையடிப்படையில் மாவட்ட செயலகத்தினால் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.

திருகோணமலை மாவட்ட மூதூர் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள வறுமைக் கோட்டின் கீழ் உள்ள 350 குடும்பங்களுக்கு சர்வோதயம் அமைப்பின் அனுசரனையில், நேற்று மூதூர் பிரதேச செயலகத்தில் வைத்து மூதூர் பிரதேச செயலாளர் எம்.பி.எம்.முபாறக் தலைமையில் உலர் உணவுப்பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டன.

இங்குள்ள 42 கிராம சேவையாளர் பிரிவுகளிலிருந்தும் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கே இந்த இலவச உலருணவுப்பொருட்கள் வழங்கப்பட்டன. (அ)

# உணவு பாதுகாப்பு தொடர்பான வேலைத்திட்டம் அம்பாறையில்

அம்பாறை, ஜூன். 08

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியைத் தொடர்ந்து எதிர்வரும் காலங்களில் எதிர்கொள்ளவிருக்கும் உணவு தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் முகமாக நாடளாவிய ரீதியில் உணவு பாதுகாப்பு தொடர்பான தேசிய வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்டத்தில் ஏற்படவிருக்கும் உணவுப் பற்றாக்குறைக்கு தீர்வாக எதிர்காலத்தில் மாவட்டத்தின் சகல பிரதேச செயலாளர் பிரிவுகளையும் தழுவியதாக பல வேலைத்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

அதனடிப்படையில் மாவட்டத்தின் சகல அரச நிறுவனங்களுக்கும் சொந்தமான இடங்களில் உள்ள வெற்று நிலங்களில் துரித உணவு உற்பத்திச் செயற்றிட்டத்தை மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள சகல அரச நிறுவனங்களுக்கும் சொந்தமான வெற்று இடங்களில் பயிர்ச்செய்கை மேற்கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

அந்த நிறுவனங்களால் பயிர்ச் செய்கை செய்ய முடியாத நிலைமை இருப்பின் அந்த இடங்களை வேறு நிறுவனங்களுக்கு (படையினர், சிவில் பாதுகாப்பு திணைக்களம், இலங்கை பொலிஸ்) அல்லது விவசாய சங்கங்களுக்கு ஒதுக்கி பயிர்ச் செய்கை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

இவ்வேலைத்திட்டம் தொடர்பாக இறக்காமம் பிரதேசத்தில் உள்ள பாடசாலை அதிபர்கள், அரச நிறுவனத் தலைவர்கள் ஆகியோருக்கு உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கான விரைவான வேலைத்திட்டத்தை தெளிவுபடுத்தும் கூட்டம் இறக்காமம் பிரதேச செயலாளர் எம்.எஸ்.எம். ரஷ்ஷான் தலைமையில் நேற்று இடம்பெற்றது. உதவி பிரதேச செயலாளர் எம்.ஏ.சி. அஹமட் நஸீல் உட்பட விடயத்திற்கு பொறுப்பான திட்டமிடல் பிரிவு சிரேஷ்ட அபிவிருத்தி உத்தியோகத்தர் யூல்.எல். ஆஹிர், விவசாய திணைக்கள அபிவிருத்தி உத்தியோகத்தர்களான திருமதி எஸ்.ஸாஜிதா மற்றும் திருமதி எம்.ஏ. இர்பானா, உளவளத்துணை உத்தியோகத்தர் ஏ.எச்.றகீப் ஆகியோரும் கலந்துகொண்டனர். (அ)

# சல்பீனியா மூடிய நீரோடையை சுத்தப்படுத்தும் வேலைத்திட்டம்



அம்பாறை, ஜூன். 08

குப்பைகள், விலங்கு கழிவுகள் கொட்டப்பட்ட மற்றும் சல்பீனியாக்கள் நிறைந்த கல்முனை சாய்ந்தமருது வண்ட் வீதியில் அமைந்துள்ள நீரோடையைச் சுத்தப்படுத்தும் வேலைத்திட்டத்தை நேற்று நீர்ப்பாசனத் திணைக்களம் மற்றும் கல்முனை மாநகர சபை என்பன இணைந்து முன்னெடுத்தன.

நேற்று காலை ஆரம்பித்த இந்த வேலைத்திட்டம் மக்களின் வேண்டுகோளின் பிரகாரம் அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் மற்றும் கல்முனை அஸ்ரப் ஞாபாகர்த்த வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர் மருத்துவர் ஏ.எல்.எப். ரஹ்மான் ஆகியோர் கல்முனை மாநகர சபைக்கு முன்வைத்த கோரிக்கைக்கு அமைவாகவும் மற்றும் கள விஜயத்தினூடாக கண்டு பிடிக்கப்பட்ட விலங்கு கழிவுகளை அகற்றும் நோக்கிலும், சாய்ந்தமருது சுகாதார வைத் திய அதிகாரி அலுவலக கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு அமைவாகவும் இந்த வேலைத்திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டதாக கல்முனை மாநகர பிரதம சுகாதார வைத்தியதிகாரி மருத்துவர் எம்.ஜே.கே.எம். அர்சத் காரியப்பர் தெரிவித்தார். (அ)

# மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தின் உத்தியோகத்தர்களால் இரத்த தானம்



மட்டக்களப்பு, ஜூன். 08

மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தின் ஏற்பாட்டில், அலுவலக உத்தியோகத்தர்களால் இரத்ததானம் வழங்கும் நிகழ்வு அரசாங்க அதிபர் கே. கருணாகரன் தலைமையில் நேற்று முன் தினம் திங்கட்கிழமை மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இவ்வலுவலகத்தில் கடமையாற்றிய உத்தியோகத்தர் ஒருவர் கடந்த ஆண்டு இதே தினத்தில் மரணமடைந்திருந்தார். அவ்வாறு மரணமடைந்த அமரர் செ.ஜெயகாந்தன் குரூஸ் என்பரின் ஓராண்டு நினைவினை முன்னிட்டு, மாவட்ட செயலக திட்டமிடல் பிரிவினால் இரத்ததான நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதன்போது மாவட்ட செயலகத்தில் உள்ள அனைத்து கிளைகளின் அலுவலர்கள் அதிகமானோர் ஆர்வத்துடன் கலந்துகொண்டு இரத்த தானம் வழங்கினர்.

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அவசர சிகிச்சை, மகப்பேற்றுப் பிரிவு மற்றும் அறுவைச் சிகிச்சைப் பிரிவுகளில் அனுமதிக்கப்பட்டுள்ள நோயாளர்களுக்குத் தேவையான இரத்த தேவையைப் பூர்த்தி செய்வதற்காக இந்த இரத்த தானம் வழங்கப் பட்டது. (அ)

# வாழைச்சேனை பாடசாலைக்கு போட்டோக்கொப்பி இயந்திரம்

மட்டக்களப்பு, ஜூன். 08

வாழைச்சேனை ஆயிஷா மகளிர் மகா வித்தியாலயத்திற்கு போட்டோ கொப்பி இயந்திரம் அன்பளிப்பு செய்யும் நிகழ்வு திங்கட்கிழமை நேற்று முன் தினம் இடம்பெற்றது.

வாழைச்சேனை பிரதேசத்தைச் சேர்ந்த, எம்.ஏ. முகம்மது உசனார் என்பவர் அன்பளிப்பு செய்த போட்டோ கொப்பி இயந்திரத்தை வழங்கும் நிகழ்வு பாடசாலை அதிபர் ஏ.ஆர்.முகைதீன் பாவா தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில், கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி கோட்டக் கல்விப் பணிப்பாளர் வீ.ரீ.அஜ்மீர், உதவிக் கல்விப் பணிப்பாளர் ஏ.எம்.ஜாபீர் கரீம், பிரதி அதிபர் எஸ்.பாறூக்கான் மற்றும் ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்தி சங்க செயலாளர் எஸ்.ஐ.எம்.பஸீல், உறுப்பினர் ஏ.எம்.நியாஸ் ஆகியோர்கள் கலந்துகொண்டனர். (அ)



# ஆட்சியாளர்களின் மீது தாக்குதல் நடத்துவேன்!

## இம்ரான்கான் கட்சி எம்.பி. மிரட்டல்

இஸ்லாமாபாத், ஜூன். 08

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான் கானுக்கு தீங்கு விளைவித்தால் ஆட்சியாளர்கள் மீது தற்கொலைத் தாக்குதல் நடத்துவேன் என எம்.பி. ஒருவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இம்ரான் கான் தலைமையிலான பாகிஸ்தான் தெஹ்றீக்-ஏ-இன்சாப் கட்சி சார்பில் கராச்சி தொகுதியிலிருந்து பாராளுமன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர் அதா வுல்லா. இம்ரான் கானின் விசுவாசியான இவர், ருவிட்டர் பக்கத்தில் வெளியிட்ட வீடியோவில், இம்ரான் கானுக்கு தீங்கு விளைவிக்கப்பட்டால் ஆட்சியாளர்கள் இருக்க மாட்டார்கள். அவர்கள் மீது தற்கொலைத் தாக்குதலை நானே நடத்துவேன். இதே வழியில் ஆயிரக்கணக்கான தொண்டர்களும் தாக்குதல் நடத்த தயாராக உள்ளனர் என அவர் தெரிவித்துள்ளார்.

இந்த விடியோ சமூக வலைத்தளங்களில் வேகமாகப் பரவியது. பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் அதாவுல்லா மீது நடவடிக்கை எடுக்கவேண்டுமென பலர் வலியுறுத்தியுள்ளனர்.

கடந்த ஏப்ரல் மாதம் பாராளுமன்றத்தில் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லா தீர்மானத்தில் இம்ரான் கான் தோல்வியுற்றதையடுத்து, பிரதமர் பதவியிலிருந்து அவர் அகற்றப்பட்டார். அன்று முதல் தனது உயிருக்கு ஆபத்து இருப்பதாக இம்ரான் கான் தொடர்ந்து கூறி வருகிறார். அவருக்கான பாதுகாப்பும் அதிகரிக்கப்பட்டுள்ளது. (அ)

# நம்பிக்கை வாக்கெடுப்பில் பொறிஸ் ஜோன்சன் வெற்றி!

## 211 எம்.பிக்கள் ஆதரவு

லண்டன், ஜூன்.08

**பிரிட்டிஷ் பழமைவாதக் கட்சியின் பிரதமர் பொறிஸ் ஜோன்சன் தன் மீதான நம்பிக்கை வாக்கெடுப்பில் வென்றிருக்கிறார்.**




மிகவும் பரபரப்பான சூழ் நிலையில்நேற்று முன் தினம் முன்னிரவு நடைபெற்ற நம்பிக்கை வாக்கெடுப்பில் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களில் 211பேர் ஜோன்சனுக்கு ஆதரவாக வாக்களித்து அவரது பதவியைப் பாதுகாத்துள்ளனர்.

பதவியில் நீடிப்பதற்கு பழமைவாதக் கட்சியின் 359 பாராளுமன்ற உறுப்பினர்களில் குறைந்தது 180 உறுப்பினர்களது ஆதரவு மட்டுமே அவசியம் என்ற நிலையில் ஜோன்சனுக்கு 211 உறுப்பினர்களது ஆதரவு கிடைத்துள்ளது. ஆயினும் கட்சியின் மூத்த உறுப்பினர்கள் உட்பட 148 எம்.பிக்கள் அவரது தலைமையை எதிர்த்து வாக்களித் திருப்பது கட்சிக்குள் பெரும் விரிசல்களைத் தோற்றுவித்துள்ளது.

பாராளுமன்றத்தின் குழு அறை ஒன்றில் நேற்று முன் தினம் மாலை ஆறு மணி முதல் இந்த வாக்கெடுப்பு நடந்தது. வாக்கெடுப்பின் முடிவு அறிவிக்கப்படுவதற்கு சிறிது நேரம் முன்பாக அது பிரதமர் ஜோன்சனுக்குத் தெரியப்படுத்தப்பட்டது.

கொரோனா பொது முடக்க காலப்பகுதியில் பிரதமரது நம்பர் 10 அலுவலகத்திலும் வெளியிலும் சுகாதார விதிகளை மீறி நடத் தப்பட்ட மது விருந் துகள் தொடர்பாக வெளியான விசாரணை அறிக்கையின் தொடர்ச்சியாகவே பிரதமர் ஜோன்சன் மீது இந்த நம்பிக்கை வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

சுகாதார விதி மீறல்களுக்காக ஏற்கனவே அவருக்கு அபராதத் தொகையும் விதிக்கப்பட்டிருக்கிறது. பார்ட்டிகேற் ஊழல் என்று அழைக்கப்படுகின்ற இந்த மது விருந்து விவகாரம் ஜோன்சனின் செல்வாக்கைக் கடுமையாகப் பாதித்திருக்கிறது. (அ)

# ரஷ்யாவின் உயர்மட்டத் தளபதி உக்ரைன் தாக்குதலில் மரணம்!

மொஸ்கோ, ஜூன். 08

ரஷ்யாவின் உயர்மட்ட இராணுவத் தளபதிகளில் ஒருவரான மேஜர் ஜெனரல் ரோமன் குடுசோவ், உக்ரைன் துருப்புக்களால் கொல்லப்பட்டதாக ரஷ்யா ஒப்புக்கொண்டுள்ளது.



உக்ரைனின் டொன்பாஸ் பகுதியில் உள்ள குடியிருப்பு ஒன்றின் மீது தலைமையேற்று தாக்குதல் நடத்திக் கொண்டிருந்தபோது அவர் கொல்லப்பட்டதாக 'ரோசியா 1' என்ற ரஷ்ய அரச ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

'டோனட்ஸ்க் மக்கள் குடியரசு' என்று தம்மைத் தாமே அறிவித்துக்கொண்ட பகுதியில் இருந்து குடுசோவ் படை நடத்திச் சென்றதாக தெரிவிக்கப் படுகின்றது. ஆனால், இந்த செய்தி குறித்து ரஷ்யப் பாதுகாப்பு அமைச்சகம் ஏதும் கூறவில்லை.

எந்த சூழ்நிலையில் ரோமன் குடுசோவ் கொல்லப்பட்டார் என்ற விபரங்களைத் தராமல், அவர் கொல்லப்பட்டதை உக்ரைன் இராணுவமும் உறுதி செய்துள்ளது.

இதுவரை 12 ரஷ்ய ஜெனரல்களைக் கொன்றுள்ளதாக உக்ரைன் கூறுகிறது. குறைந்தபட்சம் 7 மூத்த ரஷ்ய ராணுவத் தளபதிகள் கொல்லப்பட்டதாக மேற்கத்திய நாடுகளின் உளவு அமைப்புகள் கூறுகின்றன. (அ)

# ரஷ்யா வெளிநடப்பு!

நியூயோர்க், ஜூன். 08

உலக அளவில் ஏற்பட்டுள்ள உணவுப் பற்றாக்குறை உள்ளிட்ட நெருக்கடிகளுக்கு உக்ரைன் மீதான ரஷ்யாவின் ஆக்கிரமிப்பு போரே காரணம் என ஐ.நா. பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில் ஐரோப்பிய சபையின் தலைவர் சார்லஸ் மைக்கல் குற்றம் சாட்டியதை அடுத்து கூட்டத்தில் இருந்து ஐ.நாவுக்காக ரஷ்ய தூதர் வசிலி நெபென்சியா வெளிநடப்பு செய்தார்.



வளரும் நாடுகளுக்கு எதிராக உணவுப் பொருட்களை மறைமுக ஆயுதமாக ரஷ்யா பயன்படுத்துகிறது. மக்களை வறுமையில் தள்ளுகிறது என்று சார்லஸ் மைக்கல் கூறினார். இதனை மறுத்த ரஷ்ய தூதர் வசிலி நெபென்சியா, சார்லஸ் மைக்கல் பொய் பரப்புவதாக குற்றம் சாட்டினார்.

எனினும் உணவுப் பொருட்களை மறைமுக ஆயுதமாக ரஷ்யா பயன்படுத்துகிறது என்ற தனது கருத்தில் எந்தப் பொய்யும் இல்லை என சார்லஸ் மைக்கல் குறிப்பிட்டார்.

# டொமினிக்கன் குடியரசின் அமைச்சர் நெருங்கிய நண்பரால் சுட்டுக்கொலை!

சான்ரோ டொமிங்கோ, ஜூன். 08

டொமினிக்கன் குடியரசின் சுற்றுச்சூழல் மற்றும் இயற்கை வளத்துறை அமைச்சர், நெருங்கிய நண்பரால் அவரது அலுவலகத்தில் சுட்டுக் கொல்லப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.



55 வயதான ஆர்லாண்டோ ஜோர்ஜ் மேரா, தாக்குதல் நடந்த நேரத்தில் ஒரு கூட்டத்தை நடத்திக் கொண்டிருந்தார்.

தாக்கியவரை மிகுவல் குரூஸ் என ஜனாதிபதியின் பேச்சாளர் அடையாளம் காட்டினார், அவரை அமைச்சரின் பால்ய நண்பர் என அவர் வர்ணித் தார். ஆர்லாண்டோ ஜோர்ஜ் மேரா மீது ஆறு முறை சுடப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்தார்.

தாக்குதல் நடத்தியவர் தற்போது காவலில் வைக்கப்பட்டுள்ளார். துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதற்கான நோக்கம் இன்னும் தெளிவாகத் தெரியவில்லை.

ஜோர்ஜ் மேராவின் குடும்பத்தினர் வெளியிட்ட ஒரு அறிக்கையில், 'இதைச் செய்த நபரை எங்கள் குடும்பம் மன்னிக்கிறது. ஆர்லாண்டோவின் மிகப் பெரிய மரபுகளில் ஒன்று பகை கொள்ளாமல் இருப்பது' என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# 2 வயதுக் குழந்தை சுட்டதில் தந்தை பலி!

## அலட்சியத்தால் அமெரிக்காவில் விபரீதம்

புளோரிடா, ஜூன். 08

அமெரிக்காவின்புளோரிடா மாகாணத்தில் இரண்டு வயதுக் குழந்தை தவறுதலாக கைத்துப்பாக்கியை அழுத்தியதால்குண்டு பாய்ந்து தந்தை உயிரிழந்த விபரீத சம்பவம் நேற்று முன் தினம் இடம் பெற்றுள்ளது.

"லோட்" செய்யப்பட்ட துப்பாக்கியை கவனிக்காமல் அப்படியே வீட்டில் வைத்திருந்த நிலையிலேயே குழந்தை அதை எடுத்து விளையாடியபோது தந்தை மீது குண்டு பாய்ந்தது விசாரணையில் தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ரெஜி மாப்ரி என்ற 3 குழந்தைகளின் தந்தையான 26 வயது நபரே குண்டு பாய்ந்து உயிரிழந்தவராவார்.

தவறுதலாக துப்பாக்கியை இயக்கிபோதே இந்த விபரீதம் நடந்தது. தெரியவந்தது. முதலில் ரெஜி மாப்ரி தன்னைத் தானே சுட்டுத் தற்கொலை செய்திருக்கலாம் என பொலிஸார் கருதினர். பின்னர்நடத்தப்பட்ட விசாரணைகளின் போது குழந்தை சுட்டே தந்தை இறந்தது தெரிய வந்தது.

இதனையடுத்து இறந்தவரின் மனைவி மேரி அயலா பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். அலட்சியமாக துப்பாக்கியைக் கையாண்டது உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுக்கள் அவர் மீது சுமத்தப்பட்டுள்ளன. அண்மையில் டெக்சாஸில் ஆரம்பப் பாடசாலை வகுப்பறைக்குள் நுழைந்த ஆயுத தாரி 19 சிறுவர்கள் மற்றும் இரண்டு ஆசிரியர்களை கொன்ற சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியது.

இந்தச் சம்பவம் இடம் பெற்ற சில நாட்களில் ஒக்லஹோமாவின் துல்சாவில் உள்ள ஒரு மருத்துவ மைய கட்டத்துக்குள் புகுந்து ஆயுததாரி ஒருவர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் 4 பேர் கொல்லப்பட்டனர்.

விஸ்கொன்சின் மாகாணத்தின் மிகப்பெரிய நகரான மில்வாக்கிக்கு தெற்கே உள்ள பகுதியில் இறுதிச் சடங்கொன்றின் போது கடந்த வாரம் இடம் பெற்ற துப்பாக்கிச் சூட்டில் இருவர் காயமடைந்தனர்.

அமெரிக்காவில் இவ்வாறு துப்பாக்கி வன்முறைகள் அதிகரித்து வரும் நிலையில் கைத்துப்பாக்கிச் சட்டங்களை கடுமையாக்க வேண்டும் என சட்டம் இயற்றும் வல்லுநர்களை அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் வலியுறுத்தியுள்ளார்.

குறைந்தபட்சம், தாக்குதல் ஆயுதங்களை வாங்கக்கூடிய வயதை 18 இல் இருந்து 21 ஆக சட்டம் இயற்றுபவர்கள் உயர்த்த வேண்டும் . இது பள்ளிகளையும் மருத்துவமனைகளையும் கொலைக் களங்களாக மாற்றியுள்ள வன்முறையை கட்டுப்படுத்த உதவும் என அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், கைத்துப்பாக்கி வாங்குபவர்களின் பின்புல சோதனைகளை வலுப்படுத்த வேண்டும். அதிக திறன் கொண்ட தோட்டாக்களை தடை செய்ய வேண்டும். துப்பாக்கிகளை பாதுகாப்பாக சேமித்து வைப்பதை கட்டாயமாக்குதல் மற்றும் துப்பாக்கி உற்பத்தியாளர்கள் தங்கள் தயாரிப்புகளில் செய்யப்படும் குற்றங்களுக்கு பொறுப்பேற்க அனுமதித்தல் உள்ளிட்ட நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என பைடன் வலியுறுத்தியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

# ஐ. சி. சியின் மாதாந்த விருது; அசித, மத்தியூஸ் பரிந்துரை





டுபாய், ஜூன் 08

பங்களாதேஷுக்கு எதிராக நடைபெற்ற 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பந்து வீச்சிலும் துடுப்பாட்டத் திலும் பிரகாசித்து இலங்கையின் தொடர் வெற்றியில் பிரதான பங்காற்றிய அசித டி சில்வா, அஞ்சலோ மத்தியூஸ் ஆகியோர் ஐ. சி. சியின் மாதாந்த விருதுகளுக்கு பரிந்துரைக் கப்பட்டுள்ளனர்.

இதேசமயம், இந்தத் தொடரில் பங்ளாதேஷ் சார்பாக துடுப்பாட் டத்தில் பிரகாசித்த முஷ்பிஹூர் ரஹீமும் இந்த விருதுக்கு பரிந் துரைக்கப்பட்டுள்ளார்.

பங்களாதேஷுக்கு எதிரான 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் அபாரமாக பந்துவீசிய வேகப்பந்துவீச்சாளர் அசித பெர்னாண்டோ மொத்தமாக 13 விக் கெட்களை 16.61 என்ற சராசரியு டன் கைப்பற்றினார். சட்டோக்ராம் விளையாட்டரங்கில் நடைபெற்ற முதலாவது டெஸ்ட் போட்டியில் 3 விக்கெட்களை மாத்திரம் கைப்பற் றிய அசித பெர்னாண்டோ, மிர் பூரில் நடைபெற்ற இரண்டாவது டெஸ்ட் போட்டி யில் 10 விக்கெட்களை மொத்தமாக கைப் பற்றி இலங்கையின் வெற்றியை உறுதிசெய்தார்.

முதல் இனிங்ஸில் 91 ஓட்டங் களுக்கு 4 விக்கெட்களைக் கைப் பற்றிய அசித பெர்னாண்டோ, 2ஆவது இனிங்ஸில் 51 ஓட்டங் களுக்கு 6 விககெட்களை வீழ்த்தி னார். ஓர் இனிங்ஸில் 6 விக்கெட் களை வீழ்த்தினார். முழு டெஸ்ட் போட்டியில் 10 விக்கெட்களை கைப்பற்றியிருந்தார்.

இலங்கையின் முன்னணி துடுப் பாட்ட வீரர்களில் ஒருவரும் அனுப வசாலியுமான அஞ்சலோ மத்தி யூஸ், டெஸ்ட் தொடரில் பங்களா தேஷுக்கு சிம்ம சொப்பனமாக திகழ்ந்தார். இரண்டு டெஸ்ட்களி லும் திறமையாகத் துடுப்பெடுத்தா டிய மத்தியூஸ் மொத்தமாக 344 ஓட்டங்களைக் குவித்து 172 என்ற துடுப்பாட்ட சராசரியைக் கொண்டிருந்தார்.

சட்டாக்ரோமில் வெற்றி - தோல்வியின்றி முடிவடைந்த முதலாவது டெஸ்ட் போட்டியில் 199 ஓட்டங்களைக் குவித்த மத்தி யூஸ், மிர்பூரில் நடைபெற்ற 2ஆவது டெஸ்ட் போட்டியில் ஆட்டமிழக் காமல் 145 ஓட்டங்களைப் பெற்ற துடன் இலங்கை அதன் முதல் இனிங்ஸில் 506 ஓட்டங்களைக் குவிக்க உதவினார். இதன் மூலம் இலங்கையின் தொடர் வெற்றிக்கு அடிகோலி இருந்தார்.

பங்களாதேஷ் வீரர் முஷ் பிஹூர் ரஹிமும் இந்த விருதுக்கு பரிந்துரைக்கப்பட்டுள் ளார். அவர் முதலாவது டெஸ்டில் 105 ஓட்டங் களையும் 2ஆவது டெஸ்டில் ஆட்டமிழக்காமல் 175 ஓட்டங் களையும் பெற்றார். (ஐ)



# இருபது - 20 போட்டிகளில் மெதுவாக ஆடமாட்டேன்!

## ஸ்ரீவ் ஸ்மித் நம்பிக்கை

கொழும்பு, ஜூன் 08

அவுஸ்திரேலியாவின் நட்சத்திர வீரர் ஸ்ரீவ் ஸ்மித் இனிமேல் இருபது - 20 போட்டிகளில் ‘மெதுவாக விளையாடும் வீரர்’ என்ற பெயரை இல்லாமல் ஆக்கு வேன் என நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இலங்கை - அவுஸ்திரேலிய அணிகளுக்கு எதிரான இருபது - 20 தொடர் நேற்று கொழும்பில் ஆரம்பமா னது.

இந்தப் போட்டிக்கு முன்பாக கருத்து வெளியிட்ட ஸ்மித்,

“உண்மையில் நான் ‘மிஸ்டர் பிக்ஸிட்’ என்ற பட் டத்தை அழிக்க விரும்புகிறேன். பயிற்றுவிப்பாளர் ஒரு நாள் என்னிடம் கூறினார். நாம் அந்த பட்டத்தை அழிக்க வேண்டும். நீ இயல்பாக விளையாட வேண்டும். உனக்கு முதல் பந்திலோ இரண்டாவது பந்திலோ சிக்ஸ ர் அடிக்க தோன்றினால்கூட அடித்து விடு என்றார். எனக்கு அது பிடித்து இருந்தது.

இனிமேல் இயல்பாக விளையாடுவேன். என் உள்ளு ணர்வை நம்புகிறேன். எல்லா போட்டிகளிலும் என்னால் நீண்ட நேரம் விளையாட முடியும். இனிமேல் மெதுவாக விளையாடி ஆட்டமிழக்கமாட்டேன். அந்த பட்டத்தை அழிக்க விரும்புகிறேன்.

நான் விளையாடும் அந்த இடம் என்னை இயல்பாக விளையாட அனுமதித்தது இல்லை. மக்ஸ்வெல், ஸ்ரொய்னிஸ் போன்ற வீரர்கள் இருக்கும்போது எனக்கு தானாகவே அழுத்தம் வந்து விடுகிறது. நான் பொது வாக அப்படி விளையாட மாட்டேன். நான் நன்றாக விளையாடும்போது பொதுவாக இடைவெளியில் அடிக்க முயல்வேன். அதிகமாக பந்தை இழுத்து அடிக்க விரும்பமாட்டேன். ஆட்டமிழந்து விடுவோனோ அல்லது என்னால் அணி தோல்வியடைந்து விடுமோ என அதிகமாக யோசிக்க மாட்டேன்.

தலையில் அடிபட்ட போது எனக்கு கண்களை சரிசெய்யவே முடியவில்லை. அணியினர் என்னை சூழ்ந்து கொண்டனர். சில நாட்கள் வெர்டிகோவால் பாதிக்கப்பட்டேன். இனிமேல் தலையில் அடி வாங்க மாட்டேன்” என்றார். (ஐ)




# சச்சினின் சாதனையை ஜோ ரூட் முறியடிப்பார்

சிட்னி, ஜூன் 08

இங்கிலாந்து அணியின் டெஸ்ட் அணியின் தலைவர் பதவியில் இருந்து விலகிய பிறகு ஜோ ரூட் முதல் போட்டியில் சதம் அடித்தார். இதனால் நியூசிலாந்துக்கு எதிராக வெற்றி கிடைத்தது.

அத்துடன், ஜோ ரூட் 10 ஆயிரம் ஓட்டங்களை தொட்டார். இந்த ஓட்டங்களை எடுத்த 14ஆவது வீரர் ஆவார். இந்த நிலையில் டெஸ்டில் அதிக ஓட்டங்களை எடுத்த டெண்டுல்கரின் (15,921) சாதனையை ஜோ ரூட் முறியடிப்பார் என்று அவுஸ்திரேலிய முன்னாள் தலைவர் மார்க் ரெய்லர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறுகையில், ஜோ ரூட் மிகவும் சிறப்பாக ஆடி வருகிறார். தொடர்ந்து சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி வருகிறார். ஜோ ரூட் இன்னும் 5 ஆண்டுகள் விளையாடலாம். இதனால், அவரால் டெண்டுல்கரின் மிகப்பெரிய சாதனையை முறியடிக்க இயலும். உடல் தகுதியுடன் இருக்கும் பட்சத்தில் அவரால் 15,000 ஓட்டங்களுக்கு மேல் எடுக்க இயலும். இவ்வாறு ரெய்லர் கூறியுள்ளார். (ஐ)

# உலகின் மதிப்பான வீரராக தெரிவானார் எம்பாப்பே!

லண்டன், ஜூன் 08

கைலியன் எம்பாப்பே, வினிசியஸ் எர்லிங் ஹாலண்ட் ஆகியோர் உலகின் மிகவும் மதிப்பு மிக்க உதைபந் தாட்ட வீரர்கள் என்று சி. ஐ. ஈ. எஸ். என்ற உதைபந் தாட்ட கண்காணிப்புக் குழு தெரிவித்துள்ளது.

23 வயதான எம்பாப்பே பாரிஸ் சென். ஜேர்மைன் அணிக்காக விளையாடுகிறார். இவர் ரியல் மட்ரி அணிக்கு செல்வதைத் தவிர்த்திருந்தார். இவர், 175.7 மில்லியன் ஸ்ரேலிங் பவுண்ஸ் - நம் நாட்டு மதிப்பில் சுமார் 7,862 கோடி ரூபாய் என மதிப்பிடப்பட்ட பரிமாற்ற தொகையுடன் முதலிடத்தில் உள்ளார்.

சம்பியன்ஸ் லீக் போட்டியில் சம்பியனான ரியல் மட்ரிட் அணியின் பிரேசில் வீரரான வினிசியஸ் ஜூ னியர் 158.3 மில்லியன் ஸ்ரேலிங் பவுண்ஸ் - நம் நாட்டு மதிப்பில் சுமார் 7,095 கோடி ரூபாய் என்ற பரிமாற்ற மதிப்புடன் இரண்டாமிடத்தைப் பிடித்துள்ளார். மன்செஸ்டர் சிற்றி அணிக்காகப் விளையாடும் நோர்வே யின் முன்கள வீரர் ஹாலண்ட் 130.4 மில்லியன் யூரோ மதிப்புடன் மூன்றாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

மதிப்பிடப்பட்ட வீரர்களின் வயது, செயல்திறன், அவர்களின் கழகத்தின் பொருளாதார மதிப்பு, பணவீக் கம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு இந்த பரிமாற்ற மதிப்பீடு கணிப்பிடப்பட்டுள்ளது. (ஐ)




# பிபா உலகக் கிண்ண உதைபந்தாட்டம் ஆபிரிக்காவின் மூன்று நாடுகள் தகுதி!




புதுடில்லி, ஜூன் 08

‘பிபா’ உலகக் கிண்ண உதைபந் தாட்ட இளையோர் பெண்களுக்கான தொடருக்கு மொராக்கோ, நைஜீரியா, தன் சானியா அணிகள் தகுதி பெற்றுள்ளன.

இந்தியாவில், 17 வயதுக்கு உட்பட்ட பெண்களுக் கான ‘பிபா’ உலகக் கிண்ண உதைபந்தாட்டத்தின் 7ஆவது தொடர் எதிர்வரும் ஒக்ரோபர் 11:30ல் நடக்க உள்ளது.

மொத்தம் 16 அணிகள் பங்கேற்கும் இந்தத் தொட ருக்கு இதுவரை இந்தியா, சீனா, ஜப்பான், கனடா, மெக்சிகோ, அமெரிக்கா, பிரேசில், சிலி, கொலம்பியா, நியூசிலாந்து, ஜெர்மனி, ஸ்பெயின், பிரான்ஸ் என, 13 அணிகள் தகுதி பெற்றிருந்தன.

மீதமுள்ள 3 இடங்களுக்கு, ஆபிரிக்க அணிகளுக்கு இடையில் தகுதிச் சுற்று நடந்தது. மொத்தம் 29 அணிகள் பங்கேற்றன. இதன் 4வது சுற்றில் நைஜீரிய அணி 1:0 என எதியோப்பியாவை வீழ்த்தி, 6ஆவது முறையாக (2008, 2010, 2012, 2014, 2016, 2022) உலகக் கிண்ணத்துக்குத் தகுதி பெற்றது.

மற்ற 4ஆவது சுற்றுப் போட்டிகளில் அசத்திய மொராக்கோ (4:2, எதிர்: கானா), தன்சானியா (5:1, எதிர்: கமரூன்) அணிகள் முதன்முறையாக உலகக் கிண் ணத்தில் விளையாடும் வாய்ப்பை பெற்றன. (ஐ)

# ரணிலை தனியாக சந்தித்தார் பஸில்!

## திஸ்ஸ அத்தநாயக்க தகவல்

கொழும்பு, ஜுன் 08

**உத்தேச அரசியலமைப்பு திருத்தத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள இரட்டைக் குடியுரிமை விவகாரம் தொடர்பில் முன்னாள் அமைச்சர் பஸில் ராஜபக்ஷ, பிரதமர் ரணில் விக்ரமசிங்கவை சந்தித்து பேச்சு வார்த்தைகளை முன்னெடுத்ததாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.**

எனினும், எக்காரணம் கொண்டும் இந்த விடயத்தில் மாற்றங்களை மேற்கொள்ள அனுமதிக்க முடியாது எனவும் அவர் குறிப்பிட்டார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும்போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஐக்கிய மக்கள் சக்தியினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள 21ஆவது திருத்தமே வர்த்தமானிப் படுத்தப்பட்டுள்ளது. இது தொடர்பான உயர் நீதிமன்றத்தின் அறிவிப்பு எதிர்வரும் 15 ஆம் திகதி சபாநாயகருக்கு வழங்கப்படவுள்ளது.

இந்த திருத்தத்தில் 19 இற்கும் அப்பால் 19 பிளஸ் என்ற வகையில் பல திருத்தங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. இதற்கு ஐக்கிய மக்கள் சக்தி முழுமையான ஒத்துழைப்பினை வழங்கும்.

ஆனால் அரசாங்கத்தினால் முன்வைக்கப்பட்டுள்ள 21 ஆவது திருத்தம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை. அதன் உள்ளடக்கங்கள் என்ன என்பது எமக்கு முழுமையாகத் தெரியாது.

இதனை நிறைவேற்றுவதாயின் 19 இல் உள்ள அடிப்படை ஜனநாயக உறுப்புரைகளையும் உள்வாங்க வேண்டும். அவ்வாறில்லை எனில் அரசாங்கத்தின் அரசியலமைப்பு திருத்தத்தினை நிறைவேற்றுவதற்கு இன்னும் ஓரிரு மாதங்கள் செல்லும்.

ஆனால் ஐக்கிய மக்கள் சக்தி முன்வைத்துள்ள திருத்தத்தை விவாதத்திற்கு எடுத்துக் கொண்டால் இம்மாதம் 3 ஆம் வாரத்திற்குள் நிறைவேற்றிக் கொள்ள முடியும். எனவே எம்மால் முன்வைக்கப்பட்ட திருத்தத்தை விரைவில் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளுமாறு வலியுறுத்துகின்றோம்.

இவ்வாறான நிலையில் பஸில் ராஜபக்ஷ உள்ளிட்ட தரப்பினர் தொடர்பில் பேச்சு வார்த்தைகளை முன்னெடுத்துள்ளதாக தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளன.

எக்காரணம் கொண்டும் இந்த விடயத்தில் மாற்றங்களை மேற்கொள்ள அனுமதிக்க முடியாது என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம்-என்றார். (அ)



## யாழ். மாவட்ட விவசாயிகளுக்கு மண்ணெண்ணெய் விநியோகம்

யாழ்ப்பாணம், ஜுன் 08

கமநல சேவைகள் திணைக்களத்தினால் யாழ்ப்பாணம் மாவட்ட விவசாயிகளுக்கு மண்ணெண்ணெய் எரிபொருள் அட்டைகளுக்கு நேற்று முதல் வழங்கப்படுகிறது.

யாழ். மாவட்ட செயலர் க.மகேசனின் அறிவுறுத்தலில் கமநல சேவைகள் திணைக்களம் மற்றும் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் இணைந்து இந்த நவடிக்கைகளை முன்னெடுத்துள்ளன.

யாழ்.மாவட்ட விவசாயிகளுக்கு எரிபொருளை வழங்குவதற்கு அவர்களது பயிர்ச் செய்கை நிலங்களின் அடிப்படையில் முன்னர் எரிபொருள் அட்டை வழங்கப்பட்டது.

அந்த அட்டையைக் காண்பித்து யாழ். மாவட்டத்தில் உள்ள அனைத்து எரிபொருள் நிரப்பு நிலையங்களிலும் மண்ணெண்ணெயைப் பெற்றுக் கொள்ள முடியும்.

முதல் கட்டமாக விவசாயிகளின் தேவை அளவின் 25 சதவீத மண்ணெண்ணெய் வழங்கப்படவுள்ளது.

இதேவேளை, எரிபொருள் அட்டை இல்லாத விவசாயிகள் தத்தமது பிரதேச கமநல சேவைகள் நிலையத்தில் விண்ணப்பித்து பெற்றுக்கொண்டு மண்ணெண்ணெயைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## போராட்டங்களால் பிரச்னை தீர்ந்துவிடப்போவதில்லை!

### கூறுகின்றார் ரோஹித

கொழும்பு, ஜுன் 08

போராட்டங்களை மேற்கொண்டு பிரச்னைகளுக்குத் தீர்வைக் காண முடியாது என்று ஆளும் தரப்பு பாராளுமன்ற உறுப்பினரான ரோஹித அபேகுணவர்த்தன தெரிவித்தார்.

பாராளுமன்றில் நேற்று இடம்பெற்ற சபை ஒத்திவைப்பு பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதன்போது மேலும் கருத்து வெளியிட்ட அவர், நாம் இன்று கடுமையான நெருக்கடிக்கு முகம் கொடுத்து வருகிறோம். நாடாளுமன்றின் ஊடாக இவற்றுக்கெல்லாம் தீர்வொன்று கிடைக்குமா என மக்கள் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

எரிபொருள் பிரச்னை, எரிவாயு பிரச்னை- டொலர் பிரச்னை என நாட்டில் பல பொருளாதாரப் பிரச்னைகள் காணப்படுகின்றன.

பொருளாதாரப் பிரச்னையுடன் அரசியல் பிரச்னையும் ஏற்பட்டுள்ளது. இதனால், பாராளுமன்றில் உள்ள 3- 1 பங்கு உறுப்பினர்களுக்கு வீடுகள் கிடையாது.

பிறப்புச் சான்றிதழ்கூட அழி வடைந்துவிட்டது. அத்தியாவசியப் பொருட்களின் விலை உச்சத்தைத் தொட்டுள்ளன.

இவ்வாறே விலை உயர்ந்துக் கொண்டுசென்றால், இது



எங்கே சென்று முடியும்? இந்தப் பிரச்னைக்கு ஓர் இரவில் தீர்வினைக் காண முடியாது. இப்படியே சென்றால் மக்களால் வாழ முடியாத நிலைமை ஏற்பட்டுவிடும்.

போராட்டங்களை நடத்தி என்ன பலன் கிடைத்தது? இதனால் நாட்டுக்கு எரிபொருள் வந்தால்- எரிவாயு வந்தால், மின்சாரப் பிரச்னைக்குத் தீர்வுக்கிடைத்தால் நாமும் ஒத்துழைப்பினை வழங்குவோம்.

டொலர் பிரச்னை நாட்டில் இருக்கும்போது, வன்முறைச் சம்பவங்களை நடத்தி வீடுகளை தீ வைத்துள்ளமையால், மீண்டும் நாட்டில் செலவு ஏற்பட்டுள்ளது.

50 ரூபாய்க்கு சிமெந்து வாங்கி கட்டிய ஒரு வீட்டை, இன்று 3000 ரூபாய்க்கு சிமெந்து வாங்கி புனரமைக்க வேண்டியுள்ளது. சுற்றுலாத் துறையும் இன்று முற்றாக ஸ்தம்பிதமடைந்துள்ளது. இவை தொடர்பாக அனைவரும் சிந்திக்க வேண்டும்-என்றார். (அ)

# இலங்கையில் பல துறைகளில் வேலை இழக்கும் அபாயநிலை

## பொருளாதார நிபுணர்கள் எச்சரிக்கை

கொழும்பு, ஜுன் 08

பணவீக்கம் கடுமையாக உயர்ந்து வருவதால் எதிர்காலத்தில் பல துறைகளில் வேலை இழக்கும்அபாயம் உள்ளதாக பொருளாதார நிபுணர்கள் எச்சரிக்கின்றனர்.

தொழில் நிறுவனங்கள் தங்கள் ஊழியர்களுக்கு சம்பளம் கொடுக்க போதிய வருமானம் இல்லாததால் இந்த நிலை ஏற்படலாம்.

கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் படி, இலங்கையின் பணவீக்கம் மே மாதத்தில் 39.1 வீதமாக உயர்ந்துள்ளது, முந்தைய மாதத்தில் 57.4 வீதமாக இருந்தது.

வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு மற்றும் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி மீதான கட்டுப்பாடுகள் காரணமாக, நாட்டில் பல துறைகளில் வேலைகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பில் பொருளாதார ஆய்வாளர் தனநாத் பெர்னாண்டோ கருத்து தெரிவிக்கையில்,

சில வணிகங்கள் இனி தொடர முடியாது. பொருட்களின் பற்றாக் குறைபணவீக்கத்தின்ஒரு பகுதியாகும், மேலும் முறையான துறையில் பயிற்சி இல்லாதிருந்தால், அது அதிக பயிற்சி பெற்றவர்களை பாதிக்கும். பலர் நாட்டை விட்டு வெளியேற வேண்டும்.

மாதத்திற்கு சுமார் 74,000 கடவுச்சீட்டுகள் வழங்கப்படுகின்றன.

சில நேரங்களில் சமூக அமைதியின்மை இருக்கலாம். அது சற்று வன்முறையாக இருக்கலாம். ஒருபுறம் திருட்டு போன்ற சமூக நெருக்கடிகள் இருக்கலாம். இங்கு நாம் செய்ய வேண்டிய முக்கிய விஷயம் கடனை மறுசீரமைப்பது.

மறுபுறம், எங்களுக்கு சில ஆதரவு தேவை, நாம் எப்படி விரைவாக பணம் சம்பாதிக்கலாம், குறிப்பாக வெளிநாட்டு பணம் அனுப்புதல் மற்றும் விரைவான முடிவுகளை எடுப்பது என்பதில் கவனம் செலுத்த வேண்டும்.

ஏனென்றால் மக்கள் இதனை கடக்கும் ஒவ்வொரு நாளும் மிகவும் அழுத்தத்தில் உள்ளனர்-என்றார். (அ)

## அரசி விலையில் திருத்தம் இல்லை

கொழும்பு, ஜுன் 08

அரிசிக்கு விதிக்கப்பட்ட கட்டுப்பாட்டு விலையில் திருத்தம் செய்ய நடவடிக்கை என்ற செய்திகளில் உண்மையில்லை என நுகர்வோர் அதிகார சபை தெரிவித்துள்ளது.

அரிசியின் விலை தொடர்பாக வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலில் திருத்தம் அல்லது இரத்துச் செய்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக செய்திகள் வெளியாகின.

இருப்பினும் மே மாதம் 2ஆம் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானியின் பிரகாரம், ஒரு கிலோ கிராம் நாட்டரிசி 220 ரூபாவுக்கும், சம்பா 230 ரூபாவுக்கும், கீரி சம்பா 260 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்படும்.

எவ்வாறாயினும் அரிசி விலையை திருத்தவோ அல்லது அதிகரிக்கவோ எந்த தீர்மானமும் எடுக்கவில்லை என நுகர்வோர் அதிகார சபை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனை மீறி அதிக விலைக்கு அரிசி விற்பனை செய்பவர்களுக்கு 500,000 அபராதம் அல்லது ஆறு மாத சிறைத்தண்டனை விதிக்கப்படும் என நுகர்வோர் அதிகார சபை தெரிவித்துள்ளது. (அ)

### 21ஆவது திருத்த சட்டம்:

# அமைச்சரவையின் தீர்மானம் அடுத்த வாரத்துக்கு ஒத்திவைப்பு

கொழும்பு, ஜூன் 08

அரசமைப்பின் 21ஆவது திருத்த வரைவு மீதான பரிசீலனையை அமைச்சரவை அடுத்த வாரத்துக்கு ஒத்திவைத்துள்ளது.

21ஆவது திருத்தச் சட்ட வரைவு நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவால் நேற்று முன்தினம் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டது. கட்சித் தலைவர்களுடனான கலந்துரையாடலின்போது மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள் இந்த வரைவில் உள்வாங்கப்பட்டிருந்தன.

இந்த நிலையில், அரசியல் கட்சிகள் மற்றும் அமைப்புக்கள் வழங்கிய திருத்தங்களையும் உள்வாங்கி 21ஆவது திருத்தச் சட்ட வரைவை அடுத்த வாரம் அமைச்சரவையில் சமர்ப்பிக்க முன்மொழியப்பட்டுள்ளது என்று அறிய வருகின்றது. (ஐ)

## எரிபொருளுக்கு...

என்று சக்தி வளங்கள் அமைச்சர் காஞ்சன விஜயசேகர சுட்டிக்காட்டியுள்ளார்.

புள்ளிவிவரங்களின் அடிப்படையில் மே மாத எரிபொருள் நுகர்வு அதிகமாக இருந்தது. இன்று முதல் பெற்றோல் டீசல் எந்தப் பிரச்னையும் இன்றி சந்தைக்கு விநியோகிக்கப்படும்.

இன்று புதன்கிழமை 5 ஆயிரம் மெற்றிக் தொன் பெற்றோல், 3ஆயிரத்து 500 தொன் டீசல் விநியோகிக்கப்படும். ஏற்கனவே, கொள்வனவு செய்யப்பட்ட பெற்றோல், வரும் 16ஆம் திகதி நாட்டை வந்தடையும் என்றும் அவர் கூறினார். (ஐ)

## குளவி...

யளவில் குரங்குகளின் செயலால் குளவி கூடு கலைந்துள்ளது. பாடசாலை விட்டு வெளியேறுகின்ற நேரத்தில் இடம்பெற்ற இந்த சம்பவத்தால் பல மாணவர்கள் குளவி கொட்டுக்கு இலக்காகினர்.

இந்த நேரத்தில் மாணவர்கள் பதற்றத்துக்கு உள்ளானதோடு, சில மாணவிகள் குளவி கொட்டுக்கு உள்ளாகி மயக்கமடைந்தனர். இவர்கள் உடனடியாக சமுர்த்தி திணைக்களப் பணிப்பாளரின் வாகனத்தில் கிளிநொச்சி மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

கிளிநொச்சி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டவர்களில் 11 பேர் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளனர். ஏனையவர்கள் நோயாளர் விடுதிகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (ஐ)

## ரூ.100,000...

மேலும் ஒரு இலட்சம் கோடி ரூபாயால் அதிகரிக்க முன்வைக்கப்பட்ட யோசனை விவாதமின்றி நேற்று நிறைவேற்றப்பட்டது.

1923, 08ஆம் இலக்க தேசிய திறைச்சேரி கட்டளைச் சட்டம் மற்றும் அதற்கு பின்னரான காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களுக்கமைய பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்படும் யோசனைகளுக்கு அமைய கடன் நிலைமை தீர்மானிக்கப்பட்டது.

2021ஆம் ஆண்டு திறைசேரி கேள்விப் பத்திரம் வெளியிடுவதற்காக பாராளுமன்றத்தால் இறுதியாக அனுமதி வழங்கப்பட்ட கடன் எல்லை 3 இலட்சம் கோடி ரூபாயாக காணப்பட்டதுடன், 2022 ஏப்ரல் இறுதி பகுதியில் செலுத்த வேண்டிய முழு திறைசேரி கேள்வி பத்திரங்களின் பெறுமதி 2 இலட்சத்து 86 ஆயிரம் கோடி ரூபாயாகக் காணப்பட்டது.

நாட்டின் கடன் நிலையை கீழ் நிலைக்கு தரப்படுத்தியதைத் தொடர்ந்து சர்வதேச சந்தைக்கான பிரவேசம் மட்டுப்படுத்தப்பட்டது. இதனால் தேசிய மட்டத்தில் உள்ள நிதி நிறுவனங்களில் கடன் பெற வேண்டிய நிலை நிதியமைச்சுக்கு ஏற்பட்டது. 1969 இலக்கம் 01 என்ற இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் கடந்த ஏப்ரல் 9 ஆம் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானியின் ஒழுங்குவிதிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அத்தியாவசிய அரச சேவையைத் தடையின்றி முன்னெடுத்து செல்வதற்காக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவால் சமர்ப்பிக்கப்பட்ட குறைநிரப்பு மதிப்பீடு பிரேரணை மீதா ன விவாதம் இன்று புதன்கிழமை இடம்பெறும்.

## சில மணி...

களில் பெற்றோல் இல்லை என்று ஊழியர்கள் தெரிவித்திருந்தனர். இதையடுத்து அவர்களுடன் மக்கள் முரண்பட்ட சம்பவங்களும் இடம்பெற்றன.

நேற்றுக் காலை பாராளுமன்றில் உரையாற்றிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, “அடுத்த மூன்று வாரங்களில் எரிபொருளுக்கு தட்டுப்பாடு ஏற்படும்”, என்று கூறியிருந்தார். இதைத் தொடர்ந்து நேற்று மதியத்தின் பின்னரே யாழ்ப்பாணத்தில் இவ்வாறான நிலைமைகள் தோற்றம் பெற்றிருந்தன.

இதேசமயம், எரிபொருள் விலை கூட்டப்படவுள்ளதாகவும் வதந்திகள் பரவியிருந்தன. எனினும், பெற்றோல் விலையுயர்வு குறித்து நேற்று வரை எந்த உத்தியோகபூர்வ தகவலும் வெளியாகவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## நிவாரண...

பட்டுள்ள விவசாயிகளுக்கு வரவு - செலவு திட்டத்தின் ஊடாக நட்டஈடு வழங்கப்படும் என்றும் அவர் கூறினார்.

பாராளுமன்றில் நற்று உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், உலக உணவு தட்டுப்பாட்டின் தாக்கத்தை இலங்கை நேரடியாக எதிர்கொள்ள நேரிடும். சிறுபோக விவசாயத்தில் முழுமையான விளைச்சலை பெற முடியாது. பெரும்போக விவசாயத்தை வெற்றிகொள்ள சிறந்த திட்டங்களை முறையாக செயல்படுத்த அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. சிறுபோக விவசாயத்தில் நெற்பயிர்ச்செய்கையை அதிகளவில் முன்னெடுக்க அவதானம் செலுத்தபபட்டுள்ளது.

உணவு பற்றாக்குறை ஏற்படும் என எதிர்வு கூறப்பட்டதை தொடர்ந்து ஒரு தரப்பினர் தேவைக்கு மேலதிகமாக உணவு பொருட்களை தற்போதிலிருந்து சேமித்துக்கொள்ள ஆரம்பித்து விட்டார்கள். பல்வேறு காரணிகளால் விவசாய நடவடிக்கையில் ஈடுபடாமலிருந்த விவசாயிகள் உணவு தட்டுப்பாடு சவாலை வெற்றி கொள்ளும் நோக்கில் தற்போது விவசாய நடவடிக்கைளில் ஈடுபட ஆரம்பித்துள்ளார்கள்.

எரிபொருள் விநியோகத்தில் விவசாயிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும். உரப் பிரச்னைக்கு தீர்வு காண பல்வேறு மட்டத்தில் பேச்சுக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்தியாவிடமிருந்து 65 ஆயிரம் மெற்றிக்தொன் யூரியா உரத்தை பெற்றுக்கொள்ள இருதரப்பு பேச்சு முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அந்த உரத் தொகையை இன்னும் ஒரு மாத காலத்துக்குள் பெற்றுக் கொள்ளவும், விவசாயிகளுக்கு நிவாரண விலைக்கு அமைய யூரியா உரத்தை விநியோகிக்க அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

சேதன பசளை திட்டம் தொடர்ந்து முன்னெடுக்கப்படும். உயர் தரமான சேதன பசளைகள் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படும். எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் வரையான காலப்பகுதிக்குள் தேவையான அரிசி தற்போது கையிருப்பில் உள்ளது. டிசெம்பர் மற்றும் ஒக்ரோபர் மாதத்துக்கு தேவையான அரிசி இறக்குமதி செய்ய நேரிடும் - என்றார். (ஐ)

# முல்லை. அரச அதிபரின் முன்மாதிரி செயல்பாடு!

முல்லைத்தீவு, ஜூன் 08

முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் க. விமலநாதன் தனது உத்தியோகபூர்வ விடுதியில் இயற்கையான முறையில் பயிரிட்ட மஞ்சள் செடியை அறுவடை செய்து இயற்கையான முறையில் பதப்படுத்தி பொதி செய்து பதவிநிலை உத்தியோகத்தர்கள் மற்றும் கிளைத்தலைவர்களுக்கு வழங்கியுள்ளார்.

பதவிநிலை உத்தியோகத்தர்கள் மற்றும் கிளைத் தலைவர்களுக்கான வாராந்த கலந்துரையாடலின் போது கலந்து கொண்ட 21 பேருக்கு தனது உற்பத்தியை ஒருவருக்கு தலா இரண்டு பைக்கெற்றுக்கள் வீதம் வழங்கினார்.

அரசாங்க அதிபரின் முன்மாதிரியான இந்த விடயத்துக்கு நன்றி கூறிய பதவி நிலை உத்தியோகத்தர்கள், இவ்வாறு அனைவரும் தமது சூழலில் உணவுப் பயிர்களை உற்பத்தி செய்து பரிமாறிக் கொள்வதே நாட்டில் தற்போது நிலவி வரும் நெருக்கடியான காலகட்டத்தின் சூழலுக்கு பொருத்தமாக அமையும் எனக் கூறி நன்றி தெரிவித்தமையை அவதானிக்க முடிந்தது.

“அரசாங்கம் நாடளாவிய ரீதியில் அரச திணைக்களங்கள் மற்றும் வீடுகள், விடுதிகளில் வீட்டுத் தோட்டங்களை உருவாக்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுவரும் நிலையில் எமது மாவட்ட அரசாங்க அதிபரின் குறித்த செயல்பாடு அனைவரையும் மெய் சிலிர்க்க வைத்தது என்று உத்தியோகத்தர்கள் தெரிவித்தனர்.

மேலும், குறித்த கலந்துரையாடலில் கடந்த கூட்ட தீர்மானத்துக்கு அமைய மாவட்ட செயலக வளாகத்தில் வீட்டுத் தோட்ட செய்கையை மேற்கொள்வதற்கான பூர்வாங்க நடவடிக்கைகள் தொடர்பான இறுதி முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ரணில் பிரமராக காரணம் நானே!

### சரத் பொன்சேகா சொல்கிறார்

கொழும்பு, ஜூன் 08

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இந்த நாட்டின் பிரதமராக வரமுடிந்தமைக்கு காரணம் நான்தான். இந்தப் பெருமையை எனக்கே வழங்க வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய போது இதனை அவர் தெரிவித்தார்.

ரணில் விக்கிரமசிங்க பதவியேற்பதற்கு சில மணி நேரங்களுக்கு முன்னர் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தன்னை தொலைபேசியில் அழைத்து, பிரதமர் பதவியை ஏற்றுக்கொள்ளும்படி கேட்டார். இருப்பினும் சில நிபந்தனைகளை நான் விதித்தேன். பெரும்பாலான ஐக்கிய மக்கள் சக்தி எம்பிக்கள் எனக்கு ஆதரவளித்தால் மட்டுமே நான் பிரதமர் பதவியை ஏற்பேன் என்று அவரிடம் கூறினேன். எனவே, அவர் பிரதமராக வருவதற்கு வழி வகுத்த பெருமையை விக்கிரமசிங்கே எனக்கு வழங்க வேண்டும்” என்று கூறினார். (ஐ)

## அடுத்த...

பொருள் மற்றும் எரிவாயுவை முடிந்த வரை கவனமாக உபயோகப்படுத்த வேண்டிய நேரம் இதுவாகும்.

பயணங்களை முடிந்தவரை மட்டுப்படுத்தவேண்டும்.

எனவே, இந்தக் காலகட்டத்தில் தேவையில்லாமல் எரிபொருள் மற்றும் எரிவாயுவை பதுக்குவதையும் தவிர்க்குமாறு அனைத்து குடிமக்களையும் கேட்டுக் கொள்கிறேன்.

வரப்போகும் கடினமான மூன்று வாரங்களுக்குப் பிறகு, எரிபொருள் மற்றும் உணவைச் சிரமமின்றி வழங்க நாங்கள் முயற்சி செய்கிறோம்.

பல்வேறு தரப்பினருடன் பேச்சு வார்த்தை நடத்தப்பட்டு வருகிறது.

இந்த கடினமான மூன்று வாரங்களை பொறுமையாக எதிர்கொள்வோம்.

நம் நாட்டின் வருடம் ஒன்றுக்கான அரிசியின் தேவை 2.5 மில்லியன் மெற்றிக் தொன் ஆகும். ஆனால் எங்களிடம் 1.6 மில்லியன் மெற்றிக் தொன் அரிசி மாத்திரமே கையிருப்பில் உள்ளது.

இந்த நிலை நெல் மற்றும் பல பயிர்களுக்கும் பொதுவானது.

அதனால், சில மாதங்களில் உணவு விடயத்தில் கடும் சிரமங்களைச் சந்திக்க வேண்டியிருக்கும்.

நமது அன்றாட உணவுத் தேவைகளை பூர்த்தி செய்ய உணவு பொருட்களை இறக்குமதி செய்யவேண்டும். அதற்கு ஒரு மாதத்திற்கு 150 மில்லியன் டொலர் அளவில் செலவாகும்.

ஆகையால், அழிந்து வரும் விவசாயத்தை மீண்டும் கட்டியெழுப்பும் பணிகளைஉடனடியாக தொடங்க வேண்டும் -என்றார். (அ)

## அனைவருக்கும்...

பரிசீலித்து வருவதாகவும் கூறினார்.

நேற்று பாராளுமன்றில் உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இடைக்கால வரவு- செலவுத்திட்டத்தின் ஊடாக நிவாரணம் வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அத்துடன், உதவி வழங்கும் நாடுகளில் இந்தியா, சீனா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளே முன்னணியில் இருக்கின்றன. இரண்டு ஹெக்ரெயருக்கும் குறைவான காணியில் விவசாயம் செய்யும் விவசாயிகள் பெற்றுள்ள விவசாயக் கடன் இரத்துச் செய்யப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (ஐ)

## பட்டினி...

நாட்டில் காணப்படும் பொருளாதார நெருக்கடி ஆகியவை இணைந்து கடுமையான உணவு நெருக்கடியையும் பணவீக்கத்தையும் அதிகரிக்கவுள்ளன.

அடுத்த சில மாதங்களில் உணவுப் பாதுகாப்பு மேலும் சரிவை ஏற்படுத்தப் போகின்றது. 1948 இல் சுதந்திரம் பெற்ற பின்னர் இலங்கை இந்த முறையே மிக மோசமான பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது. கோவிட் பெருந்தொற்றின் தாக்கமும் கோவிட் பரவத் தொடங்குவதற்கு முன்னதாக அறிவிக்கப்பட்ட வரிச்சலுகைகளும் கடந்த பல தசாப்தங்களாக அரசாங்கம் பெற்றுக் கொண்ட கடன்களை மீள செலுத்த முடியாத நிலையை ஏற்படுத்தியுள்ளன.

ஏற்கனவே, அதிகரித்து காணப்பட்ட எரிபொருள், உணவு விலைகளுடன், உக்ரைன் யுத்தத்தின் தாக்கமும் சேர்ந்துள்ளது. நடப்பு ஆண்டில் பணவீக்கம் மேலும் உயரவுள்ளது. அத்துடன், கடந்த ஆண்டின் முற்பகுதியில் கடைப்பிடிக்கப்பட்ட உரக் கொள்கை காரணமாகவும் உற்பத்தி குறைவாகக் காணப்பட்டது. இதனால், இலங்கை உணவு இறக்குமதியை நம்பியிருக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது.

தற்போது நாட்டில் அரசியல் பதற்றமும் சேர்ந்துள்ளதால், நாடு மேலும் அபாய நிலைக்கு சென்றுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

ஈழநாடு
Eelanadu

# நாடளாவிய ரீதியில் மாணவர்கள் ஆசிரியர்கள் வருகையில் வீழ்ச்சி

கொழும்பு, ஜுன் 08

**நாடளாவிய ரீதியில் அரசாங்க மற்றும் அரசாங்க அனுமதி பெற்ற பாடசாலைகள் நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்ட போதிலும் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் வருகையில் வீழ்ச்சி காணப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

போக்குவரத்து மற்றும் பொருளாதார பிரச்னைகளின் காரணமாக இவ்வாறு மாணவர்கள், ஆசிரியர் வருகையில் வீழ்ச்சி பதிவாகியுள்ளது.

எரிபொருள் பிரச்னை காரணமாக பஸ் போக்குவரத்தை வரையறுக்க தனியார் பஸ் உரிமையாளர்கள் தீர்மானித்துள்ளனர்.

இதனால் ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் கல்விசாரா ஊழியர்கள் பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்கி வருகின்றனர்.

எரிபொருள் விலையேற்றம் காரணமாக பாடசாலை வான்களுக்கான போக்குவரத்து கட்டணங் களை 40 வீதத்தினால் உயர்த்து வதாக பாடசாலை மாணவர் போக் குவரத்துச் சங்கத்தின் தலைவர் ருவான் பிரசாத் அறிவித்திருந்தார்.

இந்த அறிவிப்பும் மாணவர்க ளின் வருகையில் தாக்கத்தை செலுத்தியுள்ளது.

பாடசாலை கட்டமைப்பினை பாதுகாக்க வேண்டுமாயின் பஸ் மற்றும் பாடசாலை வான்களுக்கு நிவாரணம் வழங்கப்பட வேண்டுமென இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் குறிப்பிட்டார். (அ)

## 6 நாட்கள் பட்டினி; முதியவர் மரணம்!

### வாழைச்சேனையில் சோகம்!

வாழைச்சேனை, ஜுன் 08

ஆறு நாட்களாக உணவின்றி பட்டினியால் வாடிய குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்தார் என்று தெரிய வருகின்றது.

இந்தச் சம்பவம் மட்டக்களப்பு - வாழைச்சேனையில் இடம்பெற்றுள்ளது. இதில், செங்கலடி புதிய வீதி, கொம்மாந்தறையை சேர்ந்த பிள் ளையான் கணேசமூர்த்தி (69 வயது) என்பவரே இவ்வாறு உயிரிழந்தார்.

உயிரிழந்தவரின் குடும்பம் வறுமை யில் வாடிய நிலையில், ஆறு நாட்க ளுக்கு முன்னர் குறித்த நபர் வீட்டை விட்டு வெளியேறியுள்ளார். உணவின்றி பட்டினியால் வாடிய அவர், வாழைச் சேனை பொது மைதானத்துக்கு அருகிலுள்ள கட்டடம் ஒன்றில் தங்கியிருந்துள்ளார்.

இந்நிலையில், அவர் நேற்று உயிரி ழந்த நிலையில் சடலமாக மீட்கப்பட் டார். அவரின் சடலத்தை மீட்ட வாழைச் சேனை பொலிஸார் பிரேத பரிசோதனைக் காக சடலத்தை மருத்துவமனை யில் ஒப்படைத்துள்ளனர். அத்துடன், மேலதிக விசாரணைகளையும் தொடர்ந்து வருகின்றனர். (ஐ)

## வாள்வெட்டுக் கும்பல் பளையில் அட்டகாசம்!

கிளிநொச்சி, ஜுன் 08

பளை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட முல்லையடி கிராமத்தில் வாள் வெட்டு குழுவினரின் அட்டகாசம் ஒன்று இடம்பெற்றுள்ளது. பளை - முல்லையடி கிராமத்தில் நேற்றுமுன்தினம் அதிகாலை 2.10 மணியளவில் இரு மோட்டார் சைக்கிளில் வந்த ஆறு பேர் கொண்ட குழு ஒன்று வீடு ஒன்றை சேதப்படுத்தியதுடன் பெற்றோல் குண்டும் வீசி விட்டு சென்றது.

இந்தச் சம்பவம் தொடர்பாக பளை பொலிஸாரிடம் முறைப்பாடு ஒன்றும் பதிவுசெய்யப்பட்டுள்ளது. (ஐ)

## பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் தலைவராக சப்ரியின் சகோதரர்!

கொழும்பு, ஜுன் 08

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் புதிய தலைவராக மொஹமட் உவைஸ் கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

புதிய தலைவர் நேற்று செவ்வாய்க்கிழமை பெற்றோலிய கூட்டுத்தாபன தலைமை அலுவலகத்தில் கடமைகளை பொறுப்பேற்றார்.

முன்னதாக பெற்றோலிய சேமிப்பு முனைய நிறுவனத்தின் தலைவராக பணியாற்றிய அவர், கடந்த ஆண்டு டிசெம்பரில் பதவியில் இருந்து விலகினார்.

மொஹமட் உவைஸ் முன்னாள் நிதியமைச்சர் அலி சப்ரியின் சகோதரர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## தாத்தா, மாமா, சகோதரனால் 13 வயது சிறுமி வன்புணர்வு!

கொழும்பு, ஜுன் 08

13 வயது சிறுமியை அவரின், தாத்தா, தாய் மாமன், மூத்த சகோதரனால் தொடர்ச்சியாக வன்புணர்வுக்கு உட்படுத்தி வந்தமை பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இந்தச் சம்பவம் மொனராகலை எதிமலே என்ற இடத்தில் இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

குறித்த சிறுமி வயிற்றுவலி காரணமாக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். அப்போது, அவர் கர்ப்பமாக இருப்பது தெரிய வந்தது. இதையடுத்து, தொடரப்பட்ட விசாரணைகளிலேயே சிறுமி தாத்தா, தாய் மாமன், சகோதரனால் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்பட்டமை தெரிய வந்தது.

இதையடுத்து, சிறுமியை துஷ்பிரயோகம் செய்த அனைவரையும் பொலிஸார் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர் என்று அறிய வருகின்றது. (ஐ)

## தண்டனைக்கு எதிராக பிரசன்ன மேன்முறையீடு!

கொழும்பு, ஜுன் 08

சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, தமது தண்டனைக்கு எதிராக மேன்முறையீடு செய்துள்ளார்.

இந்த மனுவை மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யுமாறு, பிரசன்ன ரணதுங்க தனது சட்டத்தரணிகள் ஊடாக கொழும்பு மேல் நீதிமன்றில் கையளித்துள்ளார்.

வர்த்தகர் ஒருவரை அச்சுறுத்தி 25 மில்லியன் ரூபாய் பெறுமதியான உறுதிமொழி பத்திரங்களை பலவந்தமாகப் பெற்றுக்கொண்ட குற்றச்சாட்டின் பேரில், அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவுக்கு 5 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட 2 வருட கடூழிய சிறைத் தண்டனை விதித்து கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்றுமுன்தினம் தீர்ப்பளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## ஹஜ் யாத்திரை செல்ல அனுமதிப்பதற்கு முடிவு

### நேற்றைய கூட்டத்தில் எட்டப்பட்டது

கொழும்பு, ஜுன் 08

புனித ஹஜ் யாத்தி ரையை இஸ்லாமியர்கள் மேற்கொள்வதற்கு அனு மதிப்பதற்கு முடிவு எட்டப்பட்டுள்ளது.

புனித ஹஜ் கட மையை நிறைவேற்றுதல், இதிலுள்ள நடைமுறை சிக்கல்களை களைதல் தொடர்பான முக்கிய கூட்டம் நேற்று கலாசார அலுவல்கள் மற்றும் புத்தசாசன அமைச்சர் விதுரவிக்ரமநாயக்க தலைமையில் நடைபெற்ற போதே இந்த முடிவு அறிவிக்கப்பட்டது.

நாட்டில் ஏற்பட்டுள்ள நிதி நெருக் கடி மற்றும் டொலர் பற்றாக்குறைக்கு மத்தியில் ஹஜ் யாத்திரை செல்வோருக் கான ஏற்பாடுகளை செய்வது குறித்து இந்தக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட் டது.

இந்தக் கூட்டத்தில் ஹஜ் முகவர் நிறு வனங்களின் பிரதிநிதிகளும் பங்கேற்ற னர்.

அந்நியச் செலாவணியை ஈட்டிக்கொள் வதில் நாடு எதிர்நோக்கும் பிரச்னை களுக்கு மத்தியில், அதிகளவான நிதி வெளிப் பாய்வதில் உள்ள நிலைமைகள் பற்றியும் இதன்போது ஆராயப்பட்டது. (ஐ)




## ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட இளைஞருக்கு கடூழிய சிறை!

கொழும்பு, ஜுன் 08

மாத்தறை மாவட்டத்தில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட இளைஞர் ஒருவருக்கு மாத்தறை நீதிமன்றம் மூன்றரை வருட கடூழிய சிறைத்தண்டனை விதித் துள்ளது.

மாத்தறை - கொழும்பு பிரதான வீதியில் உள்ள மகாநாம பாலத்தில் பொலிஸாரின் முச்சக்கர வாகனத்தை மறித்து சேதப்படுத்திய குற்றச்சாட்டில் இளைஞருக்கே மூன்றரை வருட கடூழிய சிறைத் தண்டனை விதித்து மாத்தறை நீதிவான் நீதிமன்றம் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை தீர்ப்பளித்துள்ளது.

மாத்தறை மகாநாம பாலத்தில் பொதுமக்கள் கடந்த ஏப்ரல் மாதம் 19 ஆம் நாள் எரிபொருள் வழங்குமாறு கோரி ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

இதில், மாத்தறை பொலிஸார் தலைமையகத்துக்கு சொந்தமான முச்சக்கர வாகனத்தை தாக்கி சேதப்படுத்திய குற்றச்சாட்டின் பேரில் இளைஞர் ஒருவர் கைதானார். அவரின் மீது நான்கு பிரிவுகளின் கீழ் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டன.

முதலாவது, குற்றச்சாட்டில் ஆறு மாத சிறைத் தண்டனையும் 1,500 ரூபாய் தண்டமும் அரச சொத்துக்களை சேதப்படுத்திய குற்றத்துக்காக ஓராண்டு சிறைத்தண்டனையும் 1,500 ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டது.

மேலும், பொலிஸாரின் முச்சக்கர வண்டியை சேதப் படுத்தியமைக்காக 50ஆயிரம் ரூபாய் அபராதம் வழங் குமாறும் நீதிமன்றம் உத்தரவிட்டது. (ஐ)

## எரிபொருள் நெருக்கடி காரணமாக ரயிலில் பாராளுமன்று வந்த எம். பி.!

கொழும்பு, ஜுன் 08

எரிபொருளுக்கான செலவை சமாளிக்க முடியாமல் தொடருந்திலேயே நேற்று பாராளுமன்றத்துக்கு தான் வந்தார் என்று பொதுஜன பெரமுனவின் கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் குணதிலக ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நாட்டின் பொருளாதார நிலை குறித்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விடுத்துள்ள அறிக்கை மீதான ஒத்திவைப்பு வேளை விவாதத்தின்போது உரையாற்றிய போது அவர் மேலும் கூறியதாவது:

என்னைப் போன்ற பாராளுமன்ற உறுப்பினர்களால் எரிபொருள் கொள்வனவு செய்ய முடியாது. எனது வாகனத்துக்கு முன்னர் டீசலை 7,500 ரூபாய்க்கு கொள்வனவு செய்த போதிலும் தற்போது எரிபொருளை சுமார் 30,000 ரூபாய்க்கு கொள்வனவு செய்ய வேண்டியுள்ளது.

இதனால், எரிபொருளுக்கான செலவை தாங்க முடியாமல் தொடருந்தில் பாராளுமன்றத்துக்கு இன்று (நேற்று) வருகை தந்தேன்.

உர விவகாரத்தை உரிய முறையில் கையாண்டு இருக்க வேண்டும். இந்த விடயத்தில் எமது கட்சி தவறு இழைத்துள்ளது. அந்த தவறால் விவசாயிகள் வீதிக்கு வந்துள்ளனர். சேதன உரம் மிகவும் முக்கியமானதாக இருந்த போதிலும், அதனை உரிய முறையில் முகாமைத்துவப்படுத்த அரசாங்கம் தவறியுள்ளதாக அவர் குற்றம் சாட்டினார். (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 08.06.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றையராசி பலன்
7.15 மணி : கதை வழி அறமொழி
7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : தொடர்நாடகம்
11.00 மணி : கலக்கல் ஸ்ரார் (மறு ஒளிபரப்பு)

**பகல்**
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை
1.00 மணி : சாட்சியம் ( மறு ஒளிபரப்பு )
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-வெடி,ஸ்ரீராம ராட்ஜியம் திரைப்படங்களின் காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்-சிறுவர் நேரலை நிகழ்ச்சி



5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : டொப் 10 மூவீஸ்-புதிய 10 திரைப்படங்களின் தரவரிசை

**இரவு**
07.00 மணி : பாரதீ




08.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : துறைக்கு அப்பால்



09.30 மணி: பத்துக்கு 10
10.00 மணி : நேருக்கு நேர்

## DAN COMEDY HD

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

## ஓம் டிவி

**காலை**
5.00மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
7.00 மணி : இன்றைய சிந்தனை
7.05 மணி : இன்றைய நாள்
7.20 மணி : ஈழத்து சித்தர்கள்
7.30 மணி : மங்கள இசை
8.00 மணி : அருளுரை
8.30 மணி : திருவாசகம்
9.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பஜனை
10.30 மணி : தமிழககோவில் திருவிழா
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
8.00 மணி : திருவிழா-01

## CHANNEL HOLY MARY

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : அன்பின் மகிழ்வு குடும்பம்
8.00 மணி : ஜெபமாலை
9.30 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள் (மறுஒலிபரப்பு)
10.00 மணி: அன்னை மரியா
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபங்கேளும் திருகோணமலை (சனி மறு ஒளிபரப்பு)

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்கருணை ஆராதனை (திருகோணமலை)
03.00 மணி : திருப்பலி யாழ்ப்பாணம் (மறு ஒளிபரப்பு)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
07.00 மணி : ஞானவழி
07.30 மணி : அன்பியம்

## Pirai Television

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஸ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு

# வீழ்ந்த இடத்திலிருந்து மீண்டும் நாம் எழுவோம்



## சபையில் நேற்று பிரதமர் ரணில் உறுதி

“2019ஆம் ஆண்டு நாம் நடைமுறைப்படுத்திய வரி முறை ஒழிக்கப்பட்டதன் மூலம் அரசு 6.6 பில்லியன் ரூபா வருமானத்தை இழந்துள்ளது. அதுதான் நமது பொருளாதாரத்தின் வீழ்ச்சியின் ஆரம்பம். எனவே, நாம் உடனடியாக 2019 வரி முறைக்குத் திரும்ப வேண்டும். நாம் விழுந்த இடத்திலிருந்து நம் உயிர்த்தெழுதலைத் தொடங்க வேண்டும்.”

- இவ்வாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

எரிபொருள் மற்றும் எரிவாயுவை முடிந்தளவுக்கு சிக்கனமாகப் பயன்படுத்துமாறும் நாட்டு மக்களை அவர் கேட்டுக்கொண்டார்.

எதிர்வரும் மூன்று வாரங்களில் எரிபொருளுக்கும் எரிவாயுக்கும் நெருக்கடி நிலவும் சாத்தியம் காணப்படுகின்றது எனவும், இதனாலேயே இந்த வேண்டுகோளைத்தான் விடுக்கின்றார் எனவும் அவர் குறிப்பிட்டார்.

நாடாளுமன்றத்தில் நேற்று விசேட உரையாற்றும் போதே பிரதமர் இந்த விடயங்களைத் தெரிவித்தார்.

நாடு பொருளாதார ரீதியில் வீழ்ச்சியடைந்துள்ள நிலையில், எதிர்வரும் மாதங்களில் உணவு நெருக்கடி நிலைமைகள் ஏற்படக் கூடும் எனவும், இந்த நிலைமையைத் தடுத்து நிறுத்துவதற்காகப் பல்வேறு வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன எனவும் அவர் கூறியுனார்.

பிரதமரின் உரை முழுமையாக வருமாறு:-

நாமும் நம் நாடும் எதிர்கொள்ளும் நிலைமையை நீங்கள் அனைவரும் புரிந்துகொள்வீர்கள் என்று நம்புகிறேன். இந்த நிலையில் இருந்து நாட்டை உயர்த்த பாரம்பரிய வழிகளில் இருந்து புதிய வழிகளை கண்டு பிடிக்க வேண்டும். பாரம்பரிய அரசியல் சித்தாந்தங்களை குறுகிய காலத்திற்கு ஒதுக்கி வைத்துவிட்டு நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான கூட்டு முயற்சியை மேற்கொள்ள வேண்டும். அந்த முயற்சியில் முழு நாட்டு மக்களும் பங்குதாரர்களாக இருக்க வேண்டும். நாட்டிற்காக நாம் அனைவரும் ஆற்ற வேண்டிய பங்கு உள்ளது.

இங்கு எங்களது முதன்மையான கவனம் பொருளாதார ஸ்திரத்தன்மையில் உள்ளது. ஆனால், பொருளாதார ஸ்திரத்தன்மையை ஏற்படுத்துவதன் மூலம் மட்டும் நாம் இந்நிலையிலிருந்து மீள முடியாது. நம் நாட்டின் பொருளாதாரத்தை மீட்டெடுக்க வேண்டும்.

இது இரண்டு மூன்று நாட்களில் செய்து முடிக்கும் காரியம் அல்ல. இந்த சவாலை அற்புதங்களால் செய்திட முடியாது. கோஷங்களிலிருந்து அல்ல. மந்திரத்தால் அல்ல. உணர்ச்சிகளால் அல்ல. புத்திசாலித்தனமாக சிந்திக்கப்பட்ட திட்டங்களை செயல்படுத்த கடின உழைப்பு மற்றும் அர்ப்பணிப்பு அவசியம்.

ஒரு மாதத்திற்கு 500 மில்லியன் டொலர்களை எரிபொருளுக்காக நாடு செலவிடுகிறது. தற்போதைய நெருக்கடியால் எண்ணெய் விலை உயரும் அபாயம் உள்ளது என்பதை மனதில் கொள்ள வேண்டும். இந்த ஆண்டு இறுதிக்குள் உலக மசகு எண்ணெய் விலை 40மூ வரை உயரும் என்று சிலர் மதிப்பிட்டுள்ளனர். இந்த பின்னணியில் எரிபொருளுக்கான கூப்பன் முறையை அறிமுகப்படுத்தும் யோசனையை நிராகரிக்க முடியாது. எப்படியாவது அடுத்த ஆறு மாதங்களுக்கு 3300 மில்லியன் டொலர் எரிபொருளைத் தேடிக் கொள்ள வேண்டும்.

எரிவாயு இறக்குமதி செய்ய ஒரு மாதத்திற்கு 40 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவாகும். நாங்கள் தற்போது எரிவாயு இறக்குமதி செய்ய பலதரப்பு உதவி, உள்ளூர் நாணயம் மற்றும் இந்திய கடன்களைப் பயன்படுத்துகிறோம். அடுத்த ஆறு மாதங்களுக்கு எரிவாயுவிற்கு 250 மில்லியன் அமெரிக்க டொலர்கள் தேவைப்படுகிறது.

மேலும், அடுத்த மூன்று வாரங்கள் எரிபொருளுக்கு கடினமான காலமாக இருக்கும். நாம் அனைவரும் எரிபொருள் மற்றும் எரிவாயுவை முடிந்தவரை கவனமாக உபயோகப்படுத்த வேண்டிய நேரம் இது. பயணங்களை முடிந்தவரை மட்டுப்படுத்தப்பட வேண்டும். எனவே, இந்தக் காலக்கட்டத்தில் தேவையில்லாமல் சிந்திப்பதையும் தேவையில்லாமல் எரிபொருள் மற்றும் எரிவாயுவை பதுக்குவதையும் தவிர்க்குமாறு அனைத்து குடிமக்களையும் கேட்டுக் கொள்கிறேன். அந்த கடினமான மூன்று வாரங்களுக்குப் பிறகு, எரிபொருள் மற்றும் உணவை சிரமமின்றி வழங்க நாங்கள் முயற்சி செய்கிறோம். பல்வேறு தரப்பினருடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருகிறது. அந்த கடினமான மூன்று வாரங்களுக்குப் பிறகு, எரிபொருள் மற்றும் எரிவாயுவை தட்டுப்பாடு இல்லாமல் வழங்க நாங்கள் முயற்சி செய்கிறோம். இந்த கடினமான மூன்று வாரங்களை பொறுமையாக எதிர்கொள்வோம்.

நமக்குத் தேவையான சில உணவுகளை உள்நாட்டிலேயே உற்பத்தி செய்கிறோம். மீதமுள்ளவை இறக்குமதி செய்யப்படுகின்றன. கடந்த காலப்பகுதியில் எங்கள் அறுவடை குறைந்துள்ளது. இவ்வாறான நிலைமையை சிறுபோகத்தில் எதிர்கொள்ள வேண்டியுள்ளதுடன் அடுத்த பெரும் போகத்தை வெற்றியடையச் செய்வதற்கு இப்போதிருந்தே நாம் கடுமையாக உழைக்க வேண்டும். ஆனால் அந்த அறுவடை பெப்ரவரி 2023 இறுதியில் கிடைக்கும். அரிசியைப் பற்றி பார்த்தால், நம் நாட்டின் வருடம் ஒன்றிற்கான அரிசியின் தேவை 2.5 மில்லியன் மெட்ரிக் டொன் ஆகும். ஆனால் எங்களிடம் 1.6 மில்லியன் மெட்ரிக் டொன் அரிசி மட்டுமே கையிருப்பில் உள்ளது. இந்த நிலை நெல் மற்றும் பல பயிர்களுக்கும் பொதுவானது. அதனால், சில மாதங்களில் உணவு விடயத்தில் கடும் சிரமங்களை சந்திக்க வேண்டியிருக்கும். நமது அன்றாட உணவு தேவைகளை பூர்த்தி செய்ய உணவு பொருட்களை இறக்குமதி செய்ய வேண்டும். ஒரு மாதத்திற்கு 150 மில்லியன் டொலர் அளவில் செலவாகும்.

அழிந்து வரும் விவசாயத்தை மீண்டும் கட்டியெழுப்பும் பணியை உடனடியாக தொடங்க வேண்டும். நமது ஏற்றுமதி பயிர்களுக்கு சர்வதேச சந்தையை இழந்து வருகிறோம். இதை தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். உள்ளூர் விவசாயத்தை உயர்த்த இரசாயன உரங்கள் தேவை. நெல், மரக்கறிகள், பழங்கள், ஏனைய பிரதான பயிர்கள், தேயிலை, இறப்பர், தென்னை மற்றும் ஏற்றுமதி பயிர்களுக்கு உரங்களை இறக்குமதி செய்வதற்கு வருடத்திற்கு 600 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவாகும். ஒரு பயிரின் ஆரம்பம் முதல் இறுதி வரை அவ்வப்போது உரம் இட வேண்டியிருப்பதால், இந்த உரத்தை தட்டுப்பாடு இல்லாமல் ஏற்றுமதி செய்ய வேண்டும். அல்லது பணம் மற்றும் முயற்சி விரயமாகி விடும்.

தற்போது நாட்டுக்கு தேவையான மருந்துகள் மற்றும் சுகாதார உபகரணங்களை இறக்குமதி செய்வதற்கு பல்வேறு சர்வதேச உதவி திட்டங்களில் ஈடுபட்டுள்ளோம். மேலும், பல்வேறு நாடுகளின் உதவிகளைப் பெறவும் திட்டமிடப்பட்டது. மருத்துவம் மற்றும் சுகாதார உபகரணங்களுக்கு அந்த குழுக்களும் நாடுகளும் கணிசமான ஆதரவை வழங்குவதால், அடுத்த ஆறு மாதங்களுக்கு சுகாதாரத்திற்காக பெரிய அளவிலான அந்நியச் செலாவணி எங்களுக்குத் தேவையில்லை. அவர்களுக்கு சுகாதாரத்துறை சார்பில் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்த சூழலில், அடுத்த ஆறு மாதங்களில் நம் வாழ்க்கையை சாதாரணமாக வைத்திருக்க 5 பில்லியன் டொலர்கள் தேவை.

மக்களின் அன்றாட வாழ்க்கைக்கு இணையாக ரூபாயை பலப்படுத்த வேண்டும். ரூபாயை வலுப்படுத்த இன்னும் 5 பில்லியன் டொலர் தேவை.

அதாவது அடுத்த ஆறு மாதங்களுக்கு நாட்டை மிதக்க வைக்க 6 பில்லியன் டொலர்களை நாம் கண்டுபிடிக்க வேண்டும்.

இத்தனைக்கும் மத்தியில் சராசரி தேசிய உற்பத்தியை உயர்த்துவதற்கான திட்டங்களை உருவாக்க வேண்டும். அந்த திட்டங்களை செயல்படுத்த வேண்டும். மத்திய வங்கியின் கூற்றுப்படி, 2022 இல் சராசரி தேசிய உற்பத்தி வளர்ச்சி 3.5 ஆக உள்ளது. சர்வதேச நாணய நிதியத்தின்படி, நிலைமை இன்னும் மோசமானது. அவர்களின் கருத்துப்படி,அதனுடைய வளர்ச்சி - 6.5 வீதமாகும்... உக்ரைன் போரின் தாக்கத்தால் உலக நாடுகளின் சராசரி தேசிய உற்பத்தி அடுத்த ஆண்டு குறையும். 2024 ஆம் ஆண்டில் மீட்சி ஏற்படும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

அந்த உலக சூழலையும் நாம் எதிர்கொள்ள வேண்டும்.

2019ஆம் ஆண்டு நாம் நடைமுறைப்படுத்திய வரி முறை ஒழிக்கப்பட்டதன் மூலம் அரசாங்கம் 6.6 பில்லியன் ரூபா வருமானத்தை இழந்துள்ளது. அதுதான் நமது பொருளாதாரத்தின் வீழ்ச்சியின் ஆரம்பம். எனவே, நாம் உடனடியாக 2019 வரி முறைக்கு திரும்ப வேண்டும். நாம் விழுந்த இடத்திலிருந்து நம் உயிர்த்தெழுதலைத் தொடங்க வேண்டும்.

சமீப காலமாக காலவரையின்றி பணம் அச்சடிக்கப்பட்டு வருவது நாம் அனைவரும் அறிந்த உண்மை. 2020 முதல் 2022 மே 20ம் திகதி வரை 2.5 பில்லியன் விடுவிக்கப்பட்டுள்ளது.

பல அரசு நிறுவனங்களில் முறையான நிதி மேலாண்மை இல்லை. எனவே, புதிய முறைகளை அறிமுகப்படுத்த வேண்டும். வீதி அபிவிருத்தி அதிகார சபை ஒரு உதாரணம். அவர்களிடம் நிதி இருந்தாலும், திறைசேரி விதிமுறைகளுக்கு ஏற்ப அந்த நிதியை நிர்வகிக்க தவறிவிட்டனர். எமது நாட்டில் தற்போது நிலவும் சூழ்நிலையில் எந்தவொரு அரச நிறுவனங்களின் நட்டத்தையும் ஈடுகட்ட அரசாங்கத்தினால் நிதி வழங்க முடியாதுள்ளது. அந்தக் கடன் சுமையை இனி அரசோ அல்லது அரச வங்கிகளோ சுமக்க முடியாது.

தற்போது சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறோம். எங்களுடைய எதிர்காலப் பொருளாதாரத் திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு நாங்கள் விவாதித்தோம். அதன்படி, 2023ம் ஆண்டு அனைத்து சவால்களையும் எதிர்கொள்ள வேண்டியுள்ளது. இந்த ஆண்டு இறுதிக்குள் பொருளாதார ஸ்திரத்தன்மையை அடைய வேண்டும். பின்னர் 2024 ஆம் ஆண்டுக்குள் நிதி ஊக்குவிப்பு மூலம் பொருளாதார ஊக்கத்தை உருவாக்குவதற்கான வாய்ப்பைப் பெறுவோம். 2025 ஆம் ஆண்டிற்குள், நமது வரவு செலவுத் திட்டங்களை சமநிலைப்படுத்துவது அல்லது முதன்மை உபரியை உருவாக்குவதே எங்கள் இலக்கு. இந்த நீண்ட கால இலக்கை நோக்கி இந்த பொருளாதார வேலைத்திட்டம் தொடர்ந்து செல்ல வேண்டும். அதிகாரத்தில் உள்ள தனிநபர்கள், குழுக்கள் மற்றும் கட்சிகள் மாறினாலும், நாம் நமது சொந்த இலக்குகளை அடைவதும், மிக உயர்ந்த செயல்திறனைப் பேணுவதும் கட்டாயமாகும்.

இந்த வேலையில் நமது வெளிநாட்டு உறவுகளை கூர்ந்து கவனிக்க வேண்டும். சர்வதேச ஆதரவை அதிகரிக்க வேண்டும். சில தவறான செயல்களால் உலகில் ஓரங்கட்டப்பட்ட நாடாக மாறி வருகிறோம். அந்த நிலைமை மாற்றுவது எளிதல்ல. ஆனால் நாம் அதை எப்படியாவது செய்ய வேண்டும்.

தற்போது வெளிநாட்டு தூதுவர்களுடன் தொடர்ந்து கலந்துரையாடி வருகிறேன். ஐக்கிய அரபு அமீரகத்தின் ஜனாதிபதி பொதுநலவாய அமைப்பின் பொதுச் செயலாளர் மற்றும் இங்கிலாந்து பிரதமர் ஆகியோருடன் நான் தொலைபேசி உரையாடல்களை மேற்கொண்டேன்.

ஐக்கிய நாடுகள் சபை, ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய அமைப்பு, உலக உணவுத் திட்டம், ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தித் திட்டம் மற்றும் உலக சுகாதார அமைப்பு போன்ற சர்வதேச அமைப்புகளின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடல் நடத்தப்பட்டது.

இந்த கடினமான நேரத்தில் நமது நாட்டிற்கு ஆதரவளிப்பதற்கும் உதவுவதற்கும் இந்த நாடுகளின் மற்றும் சர்வதேச அமைப்புகளின் பல பிரதிநிதிகள் ஒப்புக் கொண்டனர்.

எதிர்வரும் 9ஆம் திகதி உலகம் முழுவதும் பகிரங்க வேண்டுகோள் விடுக்க ஐக்கிய நாடுகள் சபை ஏற்பாடு செய்துள்ளது. இலங்கைக்கு மனிதாபிமான உதவிகளை வழங்குவதற்கு உதவி கோருகின்றனர். இந்தத் திட்டத்தின் மூலம், உணவு, விவசாயம் மற்றும் சுகாதாரத் துறைகளுக்கு நான்கு மாத காலத்திற்கு 48 மில்லியன் டாலர்களை வழங்க திட்டமிட்டுள்ளனர்.

எமக்கு கடனும் உதவியும் வழங்கும் நாடுகள் வரிசையில் இந்தியா, சீனா, ஜப்பான் ஆகிய நாடுகள் முன்னணியில் உள்ளன. எப்பொழுதும் எமக்கு விசுவாசமாக இருந்த இந்நாடுகளுடனான உறவுகள் தற்போது முறிந்துள்ளன. அந்த உறவுகளை மீண்டும் ஏற்படுத்த வேண்டும்.

சில காலத்திற்கு முன்பு நாங்கள் சீன மக்கள் குடியரசில் SWAP வசதியின் கீழ் கடன் வாங்கினோம். அந்த கடன் தொடர்பாக ஒரு நிபந்தனை இருந்தது. நம் நாட்டில் மூன்று மாதங்களுக்கு போதுமான வெளிநாட்டு கையிருப்பு இருந்தால் மட்டுமே அந்த பணத்தை நாம் பயன்படுத்த முடியும். கடன் பெற்ற மூன்று

(மறு பக்கம் பார்க்க)

மாதங்களாக எங்களிடம் அன்னியச் செலாவணி கையி ருப்பு இல்லை. அப்போது எமது சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நாட்டை ஏமாற்றுவதற்காக கடன் பெற்றுக் கொண்டனர். அந்த நிபந்தனையின் கீழ் எங்களுக்கு கடன் விடுவிக்கப்படாது. எண்கள் மட்டும் அந்த நிபந்தனையை நீக்குவது குறித்து பரிசீலிக்குமாறு சீன அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளோம்.

ஜப்பான் நமது நீண்ட கால நண்பர். நம் நாட்டிற்கு பெரிதும் உதவிய நட்பு நாடு. ஆனால் கடந்த காலங்களில் நடந்த துரதிஷ்டமான சம்பவங்களால் அவர்கள் இப்போது உடல்நிலை சரியில்லாமல் இருக்கிறார்கள். சில திட்டங்களை நிறுத்தி வைப்பது குறித்து நமது நாடு ஜப்பானுக்கு முறையாக அறிவிக்கவில்லை. சில சமயங்களில் காரணம் கூறப்படவில்லை. தனிநபர் ஒருவர் சமர்ப்பித்த அறிக்கைகளின்படி ஜப்பான் நம் நாட்டில் மேற்கொண்ட சில திட்டங்கள் பாதியில் நிறுத்தப்பட்டுள்ளன.

ஜப்பானும் இந்தியாவும் எங்களுக்கு இரண்டு எல்என்ஜி மின் உற்பத்தி நிலையங்களை வழங்க ஒப்புக் கொண்டன. எந்தவொரு நியாயமான காரணமும் அடிப்படையும் இல்லாமல் அந்த இரண்டு திட்டங்களையும் ஊநுடீ நிறுத்தியது.

2019 ஆம் ஆண்டுக்குள் சுமார் 3 பில்லியன் டாலர் மதிப்பிலான திட்டங்களை நமது நாட்டிற்கு வழங்க ஜப்பான் ஒப்புக் கொண்டுள்ளது. இந்த திட்டங்கள் அனைத்தும் எந்த காரணமும் இல்லாமல் நிறுத்தி வைக்கப்பட்டன.

அடிப்படையற்ற காரணங்களுக்காக நட்பு நாடுகளால் எமக்கு வழங்கப்பட்ட மதிப்புமிக்க திட்டங்களை இடைநிறுத்துவது குறித்து விசாரணை நடத்துமாறு பொது நிதிக்கான நாடாளுமன்றக் குழுவை நான் வலியுறுத்துகிறேன்.

நட்பு நாடுகளை அந்நியப்படுத்திய பிறகு, தரையிலும் எங்களுக்கு உதவ இந்தியா முன்வந்தது. இந்த கடினமான நேரத்தில் அவர்களுக்கு எங்கள் மரியாதையையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறோம். ஜப்பானுடன் பழைய நட்புறவை மீண்டும் ஏற்படுத்தவும் நாங்கள் பணியாற்றி வருகிறோம்.

எங்களின் கடன் வழங்கும் கூட்டாளிகளை ஒன்றிணைக்க உதவி மாநாட்டை நடத்த சர்வதேச நாணய நிதியத்திற்கு அழைப்பு விடுத்தோம். இந்தியா, சீனா, ஜப்பான் ஆகிய நாடுகளின் தலைமையில் இதுபோன்ற மாநாட்டை நடத்துவது நம் நாட்டுக்கு பெரும் பலம். சீனாவும் ஜப்பானும் வெவ்வேறு கடன் அணுகுமுறைகளைக் கொண்டுள்ளன. இவ்வாறான ஒரு மாநாட்டின் மூலம் கடன் வழங்கும் அணுகுமுறைகளில் சில உடன்பாடுகளை எட்ட முடியும் என்பது எங்கள் நம்பிக்கை.

இதுவரை வாங்கிய கடனை திருப்பி செலுத்தும் பொறுப்பு எங்களுக்கு உள்ளது. பலதரப்பு இறக்குமதியாளர்களிடமிருந்து பெறப்பட்ட பல கடன் தவணைகளை இந்த மாதம் திருப்பிச் செலுத்த வேண்டும். கடன் தவணைகளை நாங்கள் செலுத்தவில்லை. எதிர்காலத்தில் நாங்கள் புதிய கடன்களை எடுக்க வேண்டியிருக்கும், அந்த கடனை திருப்பிச் செலுத்த வேண்டிய பொறுப்பு எங்களுக்கு உள்ளது.

பிற நாடுகளில் பெற்ற கடனை திருப்பி செலுத்தும் திட்டத்தை கொண்டு வந்தவுடன், நம் நாடு பெற்றுள்ள தனிநபர் கடன்கள் மீது கவனம் செலுத்த வேண்டும். சர்வதேச நிதி ஆலோசனை நிறுவனமான டநணயசன மற்றும் சர்வதேச சட்ட ஆலோசனை நிறுவனமான ஊடகைகழசன ஊாயடெந ஆகியோரிடம் இருந்து நிபுணர் ஆலோசனையைப் பெறுவோம்.

பெற்ற கடனை அடைக்க அந்நிய செலாவணி இருக்க வேண்டும். அந்நியச் செலாவணியைப் பெறுவதற்கு ஏற்றுமதிப் பொருளாதாரத்தை விரைவாகப் பலப்படுத்த வேண்டும். நமது நாடு மூலோபாய முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் அமைந்துள்ளது. அந்த இடம் ஒரு போட்டி நிலைக்கு வருவதற்கு ஒரு நல்ல காரணியாகும். சிங்கப்பூர், துபாய் ஆகிய பொருளாதார மையங்களுக்கு மத்தியில், மற்றொரு பொருளாதார மையமாக நாம் வளர வாய்ப்பு உள்ளது. நமது பயணத்தை திட்டமிடுவதற்கு வியட்நாம் சிறந்த உதாரணம். வெவ்வேறு தயாரிப்பு மதிப்புகள் ஒருங்கிணைப்பு மூலம் ஏற்றுமதி செய்யப்பட வேண்டும். அதே சமயம், பல்வேறு நாடுகளுடனான நமது பரிவர்த்தனைகளில் வர்த்தக உபரி சமநிலையை முடிந்தவரை குறைவாக வைத்திருக்க விரும்புகிறோம்.

இலங்கைக்கு புதிய பொருளாதாரத்தை உருவாக்குவதே எமது இறுதி இலக்கு. சுதந்திரத்தின் நூற்றாண்டு விழாவான 2048 ஆம் ஆண்டளவில் இலங்கையை அபிவிருத்தியடைந்த நாடாக மாற்றுவதே இலக்காகும்.

இப்போது நம் நாடு இலவச கணினி போல வேலை செய்யவில்லை, முதலில் நாம் என்ன செய்ய வேண்டும். இந்த கணினியை மறுவடிவமைப்பு செய்ய வேண்டும். அதைத்தான் இப்போது செய்து கொண்டிருக்கிறோம். கணினியை மீட்டமைத்தல். இடைக்கால வரவு செலவு திட்டம் எனபது கணினியை மீட்டமைப்பதாகும். அப்போது நவீன முறைமயை நிறுவி, எந்த வைரஸ்/ம் உள்ளே நுழையாத வைரஸ் கார்டையும் நிறுவலாம். ஆனால் அதையெல்லாம் செய்ய, கணினியை மறுதொடக்கம் செய்து மீட்டமைக்க வேண்டும்.

எனவேதான் எங்களுடைய எதிர்கால பொருளாதாரத் திட்டம் மற்றும் சாலை வரைபடத்தின் அடிப்படையில் இடைக்கால வரவு செலவுத் திட்டத்தை நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்கிறோம். நான் முன்பே குறிப்பிட்டது போல், இந்த வரவு செலவுத் திட்டம் நமது பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்துவதற்கும், மீட்சி பெறுவதற்கும் அடித்தளம் அமைக்கும் என்பது எங்களின் நம்பிக்கை.

இடைக்கால வரவு செலவு திட்டம் அரசின் தேவையற்ற செலவுகளை குறைக்கும். மற்ற செலவுகளை கட்டுப்படுத்துங்கள். நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள பல பகுதிகளுக்கு புத்துயிர் அளிப்பதிலும் கவனம் செலுத்துகிறோம். ஏற்றுமதி பொருளாதாரம், சுற்றுலா கட்டுமானம் போன்ற பல துறைகளில் கவனம் செலுத்த வேண்டிய அவசர தேவை உள்ளது.

எமது நாட்டில் பொருளாதார ரீதியில் வலுவடையாத நலிந்த பிரிவினர் மீது இம்முறை கவனம் செலுத்த வேண்டும் எனவும் சர்வதேச நாணய நிதியத்திடம் சுட்டிக்காட்டியுள்ளோம். அவர்கள் ஒப்புக்கொண்டனர். அந்த உண்மைகளின் அடிப்படையில் இடைக்கால வரவு செலவு திட்டத்தை நாங்கள் தயார் செய்கிறோம்.

அங்கு நாங்கள் எதிர்பார்க்கும் சில முக்கிய பகுதிகளுக்கு உங்கள் கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன்.

*1)* உணவுப் பாதுகாப்பிற்கு அதிகபட்ச நடவடிக்கை எடுங்கள்.

உலக உணவுத் திட்டத்தின் (WFP) சமீபத்திய ஆய்வில் பங்கேற்கும் குடும்பங்களில் 73% பேர் தங்கள் உணவையும் உணவையும் குறைத்துக்கொள்வதாகக் கண்டறிந்துள்ளது. அந்த நிலையை மாற்றி, இந்த உணவுப் பாதுகாப்பு செயல்திட்டத்தின்படி உணவு தட்டுப்பாடு இல்லாமல் வழங்க பாடுபடுவோம். மூன்று வேளையும் சாப்பிடும் நிலையை நாட்டில் உருவாக்கி வருகிறோம்.

*2)* மானிய வரம்பு அதிகரிப்பு.

பொருளாதாரம் சீர்குலைந்து கிடக்கும் வேளையில், மக்கள் பல்வேறு இன்னல்களை சந்தித்து வருகின்றனர். இயன்றவரை அவர்களின் துன்பத்தைப் போக்க நடவடிக்கை எடுப்போம். பொருளாதாரத்தில் பின்தங்கியவர்களுக்கு பல்வேறு நிவாரணங்களை வழங்குவதற்கான தற்போதைய ஆண்டு செலவு ரூ.350 மில்லியன் ஆகும். இந்தத் தொகை 550 மில்லியன் அமெரிக்க டாலர்களாக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

*3)* விவசாயிகளின் கடன்களை நூறு சதவீதம் தள்ளுபடி செய்ய வேண்டும்.

சிறு நிலங்களில் நெல் பயிரிடும் விவசாயக் குடும்பங்கள் மிகவும் அவலநிலையில் இருப்பதை நாம் அறிவோம். இரண்டு ஹெக்டேருக்கு குறைவான நிலம் உள்ள விவசாயிகளிடம் பெற்ற விவசாயிகளின் கடன்கள் உடனடியாக நிறுத்தப்படும்.

*4)* மக்களுக்கு அவர்களின் காணிகளை சுதந்திரமாக உரிமையாக்குதல்.

முன்னதாக ஸ்வர்ணபூமி, மகாவலி போன்ற உறுதிப்பத்திரங்கள் மூலம் அரச காணிகளை மக்களுக்கு இலவசமாக வழங்கும் வேலைத்திட்டத்தை முன்னெடுத்தோம். சில மாகாண சபைகள் இந்த நடவடிக்கைக்கு எதிர்ப்பு தெரிவித்தன. அதனால் வெற்றிபெற முடியவில்லை. தற்போது அவ்வாறான எதிர்ப்புகள் எழாத வகையில் மக்களுக்கு சுதந்திர உரிமை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

*5)* நகர்ப்புற அடுக்குமாடி குடியிருப்புகளின் உரிமையை குடியிருப்பாளர்களுக்கு சலுகை அடிப்படையில் வழங்குதல்.

புறநகர் குடியிருப்புகள் பலவற்றில் வாடகைக்கு குடும்பங்கள் வாழ்கின்றன. வீட்டு உரிமைக்கு நீண்ட கால வட்டி செலுத்துபவர்களும் உண்டு. இந்த அனைத்து வீடுகளின் உரிமையையும் குடியிருப்பாளர்களுக்கு சலுகை அடிப்படையில் மாற்ற நடவடிக்கை எடுப்போம்.

*6)* சீனாவால் கட்டப்பட்ட அடுக்குமாடி குடியிருப்புகளை பொதுமக்களுக்கு திறந்து வைப்பது.

நான் முன்பு பிரதமராக இருந்தபோது சீன மக்கள் குடியரசின் வேண்டுகோளுக்கு இணங்க, அவர்கள் நம் நாட்டிற்கு 1888 குடியிருப்புகளை அன்பளிப்பாக வழங்குகிறார்கள். இதில் நூற்றி எட்டு வீடுகளை கலைஞர்களுக்காக ஒதுக்கியுள்ளோம். இந்த வீடுகள் அனைத்தையும் அரசியல் செல்வாக்கு இல்லாமல் தகுதியானவர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுப்போம். அந்த 1888 வீடுகளையும் இலவசமாக வழங்கும் வேலைத்திட்டம் ஒன்றை அமைப்பதே எனது நம்பிக்கை.

நாடு வீழ்ச்சியடைந்துள்ள இந்த வேளையில், மக்கள் மீது அதிக அழுத்தத்தை கொடுக்காமல் பொருளாதாரத்தையும் நாட்டையும் மீட்டெடுக்க முயற்சிக்கிறோம். ஒவ்வொரு அம்சத்தையும் விசாரித்து, ஒவ்வொரு அம்சத்தையும் பாதுகாத்து முன்னேற வேண்டும் என்பதே எங்கள் எதிர்பார்ப்பு.

நாம் படிப்படியாக முன்னேறினால் நாட்டை காப்பாற்ற முடியும். தனிப்பட்ட பிரச்சினை அல்லது கட்சிப் பிரச்சினை என்பதைத் தாண்டிய ஆபத்தான நிலை இங்கு உள்ளது. இதன் ஆபத்தையும் தீவிரத்தையும் புரிந்துகொள்வோம். இத்தகைய ஆபத்தான சூழ்நிலையில், கடந்த காலத்தைத் தேடுவதில் அர்த்தமில்லை. சிறிது காலத்திற்கு நாம் கடந்த காலத்தை மறந்து விடுகிறோம். நாட்டைப் புதுப்பிக்கும் முயற்சியில், எதிர்காலத்தைப் பற்றி மட்டுமே சிந்திக்கிறோம்.

ஒரு நாட்டை மீண்டும் உயர்த்த பொருளாதார சீர்திருத்தங்கள் மட்டும் போதாது. அதே நேரத்தில், சமூக-அரசியல் மற்றும் பொது சேவை சீர்திருத்தங்கள் தேவை. அண்மையில் போராட்டக்களத்தில் இருந்து நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் எழுப்பப்பட்ட ஒரு விடயத்தை உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

இதன்போது கருத்துத் தெரிவித்த கலைஞர் தமிதா அபேரத்ன இந்தக் கோரிக்கையை என்னிடம் முன்வைத்தார். இந்த பிரச்சினைக்கு பாராளுமன்றத்தில் தீர்வு காண வேண்டும் எனவும் நாட்டை நேசிப்பவர்களை ஒன்றிணைத்து பாராளுமன்றத்தில் தீர்வு காண வேண்டும் எனவும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். ஆனால், பிரதமர் அவர்களே, டோஃபி லாசிங்கர் கொடுத்து மக்களை ஏமாற்ற முயற்சிக்காதீர்கள் என்றார்

இந்த யோசனைக்கு உங்கள் அனைவரின் கவனத்தையும் ஈர்க்க விரும்புகிறேன். நாட்டின் தற்போதைய நிலைமைக்கு தீர்வு காணும் பொறுப்பு இந்த சபையில் உள்ள மக்கள் பிரதிநிதிகளின் தோள்களில் உள்ளது. அந்தப் பொறுப்பை நாம் ஏற்க வேண்டும். அந்தப் பொறுப்பை நாம் நிறைவேற்ற வேண்டும். பிளாஸ்டர் தீர்வுகளுக்கு பதிலாக, நீண்ட கால மற்றும் பயனுள்ள தீர்வுகளை நாட வேண்டும்.

எனவே, அனைத்து வேறுபாடுகளையும் ஒதுக்கி வைத்துவிட்டு, நாட்டுக்காக புதிதாக சிந்திப்போம். புதிய பயணத்தைத் தொடங்குவோம். தேவையான அரசியலமைப்பு சீர்திருத்தங்களை தொடங்குவோம். வித்தியாசமாக சிந்திப்போம். நாம் அனைவரும் வித்தியாசமாக சிந்தித்து வித்தியாசமாக செயல்படுவதன் மூலம் அமைப்பை மாற்ற ஆரம்பிக்கலாம்.

பொதுச் சேவையையும் வேறு கோணத்தில் பார்க்க வேண்டும். அரச சேவையில் வரம்பற்ற வேலை வாய்ப்பை வழங்குவதன் காரணமாக செயல்திறன் மற்றும் உற்பத்தித்திறன் மிகவும் குறைந்த மட்டத்திற்கு வீழ்ச்சியடைந்துள்ளது. சில அரசு ஊழியர்களுக்கு செய்ய வேண்டிய கடமை இல்லை. எனவே, பொதுப் பணித்துறை முழுமையாக சீரமைக்கப்பட்டு சீர்திருத்தம் செய்யப்பட வேண்டும். எங்கள் நோக்கம் ஒரு குடிமகன் அவர்களின் வாழ்நாள் முழுவதும் உடனடி மற்றும் திறமையான சேவைகளை தொந்தரவு இல்லாமல் பெற உதவும் ஒரு பொது சேவையை உருவாக்குவதாகும்.

இந்த மாற்றத்தில் கருத்தில் கொள்ள வேண்டிய மற்றொரு முக்கிய அம்சம் ஊழல் மற்றும் மோசடி இல்லாத நாட்டைக் கட்டியெழுப்புவது. அது கட்டாயம். திருட்டு இல்லாத சமுதாயம். திருடர்களுக்கு இடமில்லாத நாடு. திருடர்களைத் தண்டிக்கக் கூடிய வலுவான விதிகளைக் கொண்ட ஆட்சி.

இதற்காக, இலஞ்சம் மற்றும் ஊழலை தடுப்பது தொடர்பான தேசிய கொள்கையை நடைமுறைப்படுத்த எதிர்பார்க்கிறோம். 2019 இல், லஞ்சம் மற்றும் ஊழலை ஒடுக்குவதற்கான தேசியக் கொள்கை உருவாக்கப்பட்டது. அந்த கொள்கை வரைவை பாராளுமன்றத்தில் அனைத்து கட்சி தலைவர்களிடமும் கையளிக்க நடவடிக்கை எடுப்போம். அவர்களின் கருத்தையும் பெறுங்கள். லஞ்சம் மற்றும் ஊழலுக்கு எதிரான பொறிமுறையை வெற்றிகரமாக செயல்படுத்தி வரும் ஸ்வீடன் போன்ற நாடுகள், ஹாங்காங் அரசாங்கத்தின் முன்மாதிரியைப் பின்பற்றி, தேவையான கட்டமைப்பு மாற்றங்களைச் செய்து வருகின்றன. தற்போதைய வரைவில் சில திருத்தங்கள் செய்யப்பட வேண்டுமென்றால் அனைத்து தரப்பு வழக்கறிஞர்கள் மற்றும் நிபுணர்களின் ஆலோசனையின் பேரில் தேவையான திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு இந்த தேசிய கொள்கை நடைமுறைப்படுத்தப்படும்.

எனவே நாட்டை மீளக் கட்டியெழுப்புவதில் உங்களது பொருளாதார, சமூக - அரசியல் மற்றும் பொதுச் சேவை சீர்திருத்தங்களுக்கு ஆதரவளிக்குமாறு நான் இந்த சபையில் உங்கள் அனைவரையும் அழைக்கிறேன்.

முதலில் நாட்டைக் கட்டியெழுப்புவோம். இந்த இக்கட்டான சூழ்நிலையில் இருந்து நம் நாட்டை காப்போம். அதற்கு உங்கள் ஆதரவை தாருங்கள். குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் நாட்டில் இயல்பு நிலை திரும்பிய பிறகு, உங்கள் பாரம்பரிய அரசியல் நடவடிக்கைகளுக்குத் திரும்புங்கள். பாரம்பரிய கட்சி அரசியல் நிகழ்ச்சி நிரல்களை நடைமுறைப்படுத்துங்கள்.

வின்சென்ட் சர்ச்சில் ஒருமுறை கூறிய மேற்கோளை மேற்கோள் காட்டி எனது கருத்தை முடிக்க விரும்புகிறேன்.

“அவநம்பிக்கையாளர் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் சிரமத்தைப் பார்க்கிறார் நம்பிக்கையாளர் ஒவ்வொரு சிரமத்திலும் வாய்ப்பைப் பார்க்கிறார்”

இக்கட்டான நேரத்தில் கிடைத்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்கிறோம். இந்த வாய்ப்புகளைப் பயன்படுத்தி, நம்பிக்கையுடன் நாட்டைக் கட்டியெழுப்புவோம்.

நாட்டை இயல்பு நிலைக்கு கொண்டு வருவதற்கு நாம் அனைவரும் முழு மனதுடன் பொறுப்பேற்போம். ●